கோகுலம்

GOKULAM

மே '87 விலை ரூ. 2.



சுவையான நகரமிது
ஹார்லிக்ஸ் பிஸ்கட்ஸ் நிறைந்துள்ளது.
சொல்லுங்கள் சிறுவனுக்கு
எத்தனை பிஸ்கட்ஸ் மறைந்துள்ளது?




ஹார்லிக்ஸ்
பிஸ்கட்ஸ்



ஹார்லிக்ஸின் நலமிக்க கரகர மொறுமொறு பிஸ்கட்!

HTA 5031 TAM



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.—பாரதியார்



புகைப்படம்: எம். நடராஜன்

கோகுலம்

1987 மே மாத இதழ்
மலர் 5 இதழ் 4
தனிப் பிரதி ரூ. 2/—
ஆண்டுச் சந்தா ரூ. 24/—
கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா

அருமைச் சிறுவர் சிறுமியரே,

வானொலி நாடகம் ஒன்றில் கலந்து கொள்ள ஆசைப்பட்டு ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் வந்தார்கள். ஏழாவது வகுப்பில் சிறுவனும், எட்டாவது வகுப்பில் சிறுமியும் படிப்பதாகச் சொன்னார்கள். நாடகத்தில் அவர்கள் பேச வேண்டிய வசனங்களை எழுதிக் கொடுத்துப் படிக்கச் சொன்னதும், ஒன்றும் புரியாமல் விழித்தார்கள். காரணம் கேட்டதற்கு, 'நாங்கள் இங்கிலீஷ் மீடியம்' ஸ்கூலில் படிக்கிறோம்' என்றார்கள்.

அவர்கள் தமிழ்நாட்டில் பிறந்தவர்கள்; தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். தமிழ்நாட்டில் பிறந்தும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டும், 'தமிழ் படிக்கத் தெரியவில்லை' என்கிறார்கள். இது வியப்பாக மட்டுமல்ல; மிக வேதனையாகவும் இருக்கிறதல்லவா?

இவர்களைப் போல் ஆயிரக்கணக்கான தமிழ்ச் சிறுவர் சிறுமியர் ஆங்கிலம், ஹிந்தி அல்லது வேறொரு மொழியைப் பள்ளியில் கற்றுக் கொள்ளுகிறார்கள். தமிழைப் புறக்கணிக்கிறார்கள்.

எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் ஒரு குழந்தை கற்றுக் கொள்ளட்டும். நல்லதுதான். ஆனால், தாய்மொழியை அலட்சியப்படுத்தலாமா? தமிழ் மொழியை எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்தக் கோடை விடுமுறையிலாவது தினம் ஒரு மணி நேரம், அப்பா அம்மாவிடமோ அல்லது ஓர் ஆசிரியரிடமோ, தமிழைக் கற்றுக் கொள்ளுங்கள். இது மிக அவசியம்.

கோடை விடுமுறையை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்த சென்ற ஆண்டு போல ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள் சில போட்டிகளை இந்த இதழில் அறிவித்திருக்கிறார்கள். இப்போட்டிகளில் கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள்தான் கலந்து கொள்ள வேண்டுமென்பதில்லை. 15 வயதுக்குட்பட்ட அனைவரும் கலந்து கொள்ளலாம்.

— அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்



நடேச நாராயணன்




நீரை அத்திப்பூ



காரை மணி


பிருந்தாவனக் கவிஞர்கள்



நா. ரா. சித்தார்த்தன்,




டி. ஆர். சிவகுமார்



ஆர். மீனாட்சி

பிருந்தாவனக் கதாசிரியர்



என். சந்திரசேகரன்

அட்டையில்: தீபா ஜெகன்னாதன்

அமெரிக்காவில் உள்ள வடக்கு கரோலினா பகுதியின் 'சார்லட்' என்கிற இடத்தில் பெற்றோர்கள் ஜெகன்னாதன், மீரா ஆகியவர்களுடன் வசித்து வரும் பத்து வயது தீபா, அங்கே ஆறாவது வகுப்புப் படித்து வருகிறாள். பிறந்தது பம்பாயில்தான் என்றாலும், வளர்வது, வாழ்வது, எல்லாம் அமெரிக்காவிலதான். பரத நாட்டியத்தின் மீது அளவற்ற பற்று உள்ள காரணத்தினால், அங்கே உள்ள திருமதி. மகாலட்சுமி என்கிற நடன ஆசிரியையிடம் நடனம் பயின்று வருகிறாள். நீச்சல், கராத்தே ஆகியவற்றிலும் பயிற்சிகள் மேற்கொண்டு பரிசுகள் பல பெற்றுள்ளாள். வருடாந்திர விடுமுறை என்றால் இந்தியாவுக்கு வருவதில் தனி ஆனந்தம் தீபாவுக்கு.

வண்ணப்படம், தகவல்: 'யோகா'

மின்மினிக் கதைகள்

விநாயகரும் பூனையும்



ஒருநாள் காலையில் விநாயகர் ஒரு பூனையோடு விளையாடிக் கொண்டிருந்தார். பூனையுடன் ஓடி ஆடி அவர் விளையாடும்போது, அவருடைய கை நகம் பூனையின் முகத்தில் பட்டுவிட்டது. அதனால், பூனையின் முகத்தில் ஒரு கீறல் உண்டாகிவிட்டது.

சிறிது நேரம் சென்றது. விநாயகர் வீடு திரும்பினார். அம்மாவாகிய பார்வதியின் அருகிலே சென்றார். அம்மாவின் முகத்தைப் பார்த்ததும் அவர் திடுக்கிட்டார். "என்னம்மா இது, உன் முகத்தில் யாரோ கீறிய அடையாளம் தெரிகிறதே! உன் முகத்தில் கீறியவர் யார்?" என்று கேட்டார்.

"வேறு யாருமல்ல. நீதான். உன் கை நகம் பட்டதால்தான் இந்தக் கீறல் ஏற்பட்டது" என்றாள் பார்வதி தேவி.

"என்னம்மா சொல்கிறாய்! நான் உன் கன்னத்தில் கீறினேனா! எப்போது கீறினேன்?"

"மகனே, இன்று காலையில் நீ ஒரு பூனையுடன் விளையாடியபோது, அதன் முகத்தில் உன் நகத்தால் கீறினாயே, அதற்குள் மறந்து விட்டாயா?"

"மறக்கவில்லை. ஆனால், நான் பூனையின் முகத்தில்தானே கீறினேன்? உன் முகத்தில் எப்படிக் கீறல் ஏற்பட்டது?"

"குழந்தாய், எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன். ஆகையால், நீ யாரைத் துன்புறுத்தினாலும், அது என்னைத் துன்புறுத்தியதாகவே ஆகும்" என்றாள் பார்வதி தேவி.

பார்வதிதேவியின் பதிலைக் கேட்டதும் விநாயகருக்கு ஒரே ஆச்சரியம். உடனே விநாயகர் ஒரு முடிவு செய்தார்.

"உலகில் உள்ள எல்லாப் பொருள்களிலுமே என் தாய் இருக்கிறாள். அப்படியானால், ஒவ்வொரு பெண்ணையுமே நான் என் தாயாகக் கருத வேண்டும். ஆகையால் நான் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை" என்பது தான் அவர் செய்த முடிவு.

அதனால்தான் விநாயகர் பிரம்மச்சாரியாகவே இருக்கிறார்.

முன்னேறிச் செல்

ஒரு விறகு வெட்டி தினமும் காட்டுக்குச் சென்று விறகு வெட்டுவான். வெட்டிய விறகை விற்பனை செய்து வயிறு வளர்த்து வந்தான். ஆனாலும் அதில் போதிய வருமானம் கிடைக்கவில்லை. அதனால் கஷ்டப்பட்டான்.

ஒருநாள் அவன் காட்டிலே விறகு வெட்டிக் கொண்டிருக்கும்போது, அவ்வழியாக வந்த ஒரு சாது அவனைப் பார்த்து, "அப்பா, நீ மேலும் முன்னேறிச் செல்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

வெட்டிய விறகுடன் வீட்டுக்கு வந்ததும், "அந்த சாது 'மேலும் முன்னேறிச் செல்' என்றாரே, அப்படி என்றால் நாம் என்ன செய்ய வேண்டும்" என்று யோசித்தான். மறுநாள் வழக்கமாக வெட்டும் இடத்தைக் கடந்து காட்டின் உள் பகுதிக்குச் சென்றான். அங்கு நிறையச் சந்தன மரங்கள் காணப்பட்டன. அவற்றை வெட்டிக் கொண்டு வந்து விற்றான். நிறையப் பணம் கிடைத்தது.



சில காலம் சென்றது. திரும்பவும் அந்தச் சாது சொன்னது நினைவுக்கு வந்தது. "மேலும் முன்னேறிச் செல்" என்பது அவன் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

அன்று சந்தன மரங்கள் இருந்த இடத்தையும் கடந்து காட்டுக்குள் சென்றான். அங்கு தாமிரச் சுரங்கம் இருந்தது. தாமிரத்தை எடுத்து வந்து விற்றான். பெரும் பணம் சேர்ந்தது.

விறகு வெட்டி அத்துடன் நிற்கவில்லை. மேலும் காட்டுக்குள் முன்னேறிச் சென்றான். அங்கே ஒரு வெள்ளிச் சுரங்கம் இருந்தது. சுரங்கத்திலிருந்த வெள்ளியை எடுத்து வந்து விற்றான். விரைவிலே மிகப் பெரிய பணக்காரனாகிவிட்டான்.

அப்புறமும் அவன் தன் முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கவில்லை.

மேலும் மேலும் முன்னேறிச் சென்றான். காட்டின் உள் பகுதிக்குள் அவன் போகப் போக, வழியிலே தங்கச் சுரங்கமும் பிறகு வைரச் சுரங்கமும் கண்டான். அவன் முயற்சி வெற்றி பெற்றது. சாதுவின் வாக்கும் பலித்தது.

நாரதரின் கர்வம்



'கடவுளிடத்திலே நான்தான் அதிகமான பக்தி வைத்திருக்கிறேன். என்னை இந்த விஷயத்தில் யாருமே மிஞ்ச முடியாது' என்று நாரதர் கர்வம் கொண்டிருந்தார். அவருடைய கர்வத்தை நீக்க வேண்டுமென்று பகவான் நினைத்தார்.

நாரதரிடம் ஒரு கிராமத்தைக் குறிப்பிட்டு, ''அங்கே ஒரு குடியானவன் இருக்கிறான். அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தி உள்ளவன். அவனைப் போய்ப் பார்த்து வா'' என்றார் பகவான்.

நாரதர் அந்தக் கிராமத்திற்குச் சென்றார். அந்தக் குடியானவனைக் கவனித்தார்.

அவன் அதிகாலையில் எழுந்தவுடனே, ''ஸ்ரீ ஹரி'' என்று ஒரு தடவை பகவானின் பெயரைச் சொன்னான். பிறகு கலப்பையைத் தூக்கிக் கொண்டு வயலுக்குச் சென்று மாலை வரை உழுதான். உழுது முடிந்ததும் வீட்டுக்கு வந்தான். இரவு படுக்கப் போகும்போது திரும்பவும் ஒரு தடவை ''ஸ்ரீ ஹரி'' என்று பகவானின் பெயரைச் சொன்னான்.

''என்ன இது! இவன் நாள் முழுதும் வேலை செய்கிறான். கடவுளின் பெயரைக் காலையில் ஒருமுறையும், இரவு ஒருமுறையும்தான் சொல்கிறான். இவனைப் போய், மிகப் பெரிய பக்தன் என்று பகவான் கூறுகிறாரே!'' என்று நினைத்துக் கொண்டு பகவானிடம் சென்று, தான் கண்டதைச் சொன்னார்.

உடனே பகவான், ஒரு கிண்ணத்தை நாரதரின் கையில் கொடுத்தார். அதில் நிறைய எண்ணெய் இருந்தது. ''இந்தக் கிண்ணத்திலுள்ள எண்ணெயில் ஒரு சொட்டுக் கூட விழாமல் நீர் இந்தப் பட்டணத்தைச் சுற்றி வாரும்'' என்றார்.

நாரதர் அவ்வாறே செய்தார். பிறகு பகவானிடம் வந்தார். ''நாரதரே, கிண்ணத்துடன் சுற்றி வரும்போது என்னை எத்தனை தடவைகள் நினைத்தீர்?'' என்று பகவான் கேட்டார்.

''கிண்ணத்திலுள்ள எண்ணெய் சிந்திவிடக் கூடாதே என்ற கவலையுடன் நான் அதிலேயே கவனம் செலுத்தியதால், ஒருமுறை கூடத் தங்களை

நினைக்கவில்லை'' என்றார் நாரதர்.


''பார்த்தீரா, கிண்ணத்திலேயே உமது கவனம் இருந்தால், என்னை மறந்துவிட்டீர்! ஆனால், அந்தக் குடியானவன், தன் கடமைகளை ஒழுங்காகச் செய்வதிலே நாள் முழுவதும் கவனம் செலுத்தினாலும், தினம் இரண்டு தடவைகள் என்னை நினைக்கிறானே! அதனால்தான் அவனை நான் பெரிய பக்தன் என்றேன்'' என்று பகவான் கூறினார்.

நாரதர் பதில் எதுவும் கூறவில்லை; வெட்கத்தால் தலை குனிந்தார்.

— ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்ன கதைகள்

அறுபது தமிழ் ஆண்டுகள்

-எஸ். லதா (392)
நாட்டரசன் கோட்டை



பிரபவ
விபவ
சுக்கில
பிரமோதூத
பிரஜோர்பதி
ஆங்கிரஸ
ஸ்ரீமுக
பவ
யுவ
தாது
ஈசுவர
வெகுதான்ய
பிரமாதி
விக்கிரம
விஷு

சித்திரபானு
சுபானு
தாரண
பார்த்திப
விய
சர்வசித்து
சர்வதாரி
விரோதி
விக்ருதி
கர
நந்தன
விஜய
ஜய
மன்மத
துன்முகி

ஹேவிளம்பி
விளம்பி
விகாரி
சார்வரி
பிலவ
சுபகிருது
சோபகிருது
குரோதி
விசுவாவசு
பராபவ
பிலவங்க
கீலக
சௌமிய
சாதாரண
விரோதிகிருது

பரிதாபி
பிரமாதீச
ஆனந்த
ராட்சச
நள
பிங்கள
காளயுக்தி
சித்தார்த்தி
ரௌத்திரி
துன்மதி
துந்துபி
ருத்ரோத்காரி
ரத்தாட்சி
குரோதன
அட்சய

புகைப்படம்: ரா. பொன்ராசன்

வியர்க்குருவினின்று நிவாரணம் பெற டால்கம் பவுடர் போதாது, நைஸில் வேண்டும்.





GLL-6808 R

நைஸில் உபயோகியுங்கள்

வியர்க்குருவினின்று விரைவில் நிவாரணம் பெறுங்கள்.



நைஸில், மருந்துக்கலவையுள்ள பவுடர் ஆகும். வியர்க்குருவின் எந்தவிதத் தொல்லையிலிருந்தும் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கென்றே விசேஷமுறையில் தயாரிக்கப்பட்டதாகும். டால்கம பவுடர்களைப் போலன்றி, பிரச்சினை மோசமாவதனின்றும், பரவுவதனின்றும் எதிர்த்துக் காக்கிறது இது.

1. அளவுக்கு மீறிய வியர்வையைத் தடுக்கிறது. 2. வியர்வையை உறிஞ்சுகிறது. 3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது. 4. சருமத்திற்கு இதமளிக்கிறது.

சார் தபால்!

கின்னஸில் இடம்பெறுவோமே!

* கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் தொகை பதினெட்டாயிரத்தைத் தொட்டு விட்டதா! சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

— பாலா அஷோக், திருச்சி—1.

* 'மாறு வேடம்' மனத்தைத் தொட்ட மாறுபட்ட கதை.

—ஏ.எஸ். மாரியப்பா, புதுக்கோட்டை

* உறுப்பினர் வரைந்த ஓவியங்கள், அவர்களின் கலை ஆர்வத்தைக் காட்டுகின்றன.

— ஆர். திருப்பதி வெங்கடசாமி, சிப்பிப்பாறை

* நீங்கள் கூட திருடனுக்கு மரியாதை கொடுத்திருக்கிறீர்களே! டி.எல். ரெட்டி அவர்களின் சிரிப்புத் துணுக்கு 7—ஆம் பக்கத்திலும் 58—ஆம் பக்கத்திலும் வந்திருக்கிறதே. கவனிக்கவில்லையா?

— வி. இராதாகிருஷ்ணன் (14290), வல்லம்

* 'எது பெரிது?' என்ற பாடலில் 'சாதனைகளும் அற்புதங்களும் பெரிதல்ல. உயர்ந்த பண்பே பெரிது' என்பதை கவிஞர் ரா. பொன்ராசன் எளிய சொற்களில், இனிய நடையில் தந்திருக்கிறார்.

— வி. கே. கஸ்தூரி நாதன், குழிபிறை

* இந்தியாவின் தென்கோடியில் ஒரு குக்கிராமத்தில் இருக்கும் எங்களுக்கு 'கைலாச உலக'த்தை விளக்கமாகக் காட்டி, நேரில் பார்த்த பிரமிப்பை ஏற்படுத்திவிட்டீர்கள்.

— கே.எல். ஸ்ரீதேவி, மேலகிருஷ்ணன் புதூர்

* டேபிள் டென்னிஸ் சாம்பியன் சேதன் தேசிய சாம்பியன் பட்டம் பெற வாழ்த்துகிறோம்.

— தி. தனசேகரன், பி, தேவேந்திரன் தோப்புத்துறை

* மாவீரன், கொடை வள்ளல், பேரறிஞர் தவயோகி கர்ணன் தகாத நட்பினால் வீழ்ந்தான் என்பதைப் படித்ததும், உடனே முடிவு செய்துவிட்டேன், இனி, தகாதவர்களுடன் நட்புக் கொள்ளக் கூடாது என்று.

— எஸ். சபரி (14171), விருத்தாசலம்

* எனக்கு வயது 78. கோகுலத்தைத் தொடர்ந்து படிக்கிறேன். ஏப்ரல் இதழில் கௌரவ ஆசிரியர் எழுதியிருந்ததைப் படித்தேன். தமிழ் வருடங்கள் அறுபதையும் அறிய முயற்சி செய்யாதவர்களில் நானும் ஒருவன்தான். அடுத்த இதழில் 60 வருடங்களின் பெயர்களையும் வெளியிடுங்கள். இருக்கும் வரை நெஞ்சில் பதித்துக் கொள்கிறேன்.

— வீ.சி. சோமசுந்தரம், ராஜபாளையம்

* 'புதையல் வீடு' மிகவும் விறுவிறுப்பாக இருக்கிறது. புதையல் ரகசியம் என்ன? என்பதை அறிய ஆவலாக இருக்கிறோம்.

— ச. அனுராதா, ச. சிவகாமி, தூத்துக்குடி

* வ.வெ.சு. ஐயர் எங்கள் ஊருக்கு அருகிலுள்ள பாபநாசத்தில்தான் இறந்துவிட்டார் என்பதை இதுவரை அறியாமல் இருந்தேன்.

— இரா. குமரேசன் (15436), வீரவநல்லூர்.

* 'சொந்தமாக எழுதுங்கள்' என்ற கௌரவ ஆசிரியரின் குறிப்பு கவனிக்கத் தக்கது. சொந்தமாக எழுதுகிறவர்களுக்கே மதிப்பு உண்டு., வருங்காலத்தில் பெரிய எழுத்தாளர் ஆகவும் வாய்ப்பு உண்டு. இதை உணர்ந்து கொண்டால் நல்லது.

— தேனி முருகேசன், தேனி

* 'என் குடும்பத்தில் என்ன குழப்பம்?' கதையில் பூஜ்யம் கூறிய அறிவுரை எங்களைப் போன்ற சிறுவர்களுக்கும் மிகவும் அவசியமானது.

— மா. வெங்கடேசமூர்த்தி (7698), குரோம்பேட்டை

* டாக்டர் கு. கணேசன் உதவியால் குடலில் புழுக்கள் இருந்தால் எப்படி அவற்றை நீக்குவது என்பதைத் தெரிந்து கொண்டோம்.

— தங்க கார்த்திகை ராஜா (16097) விருத்தாசலம்

* பெருமை மிக்க பெரியவர்களின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளை வெளியிட்டு எங்கள் குழந்தைப் பருவத்தை நல்வழிப்படுத்த முயலும்கோகுலமே, எங்களுக்குத்தாய்தந்தை ஆசிரியர் எல்லாம் ஆகும்.

— பா. மணிவண்ணன் (11420), கன்னிவாடி

* எங்களுக்கு இதுவரை தெரியாத சில கிரிக்கெட் வீரர்களின் செய்திகளை குண்டுமணி கூறியதற்கு நன்றி.

— என். பாபு (1707), வேலூர்.



என் குழந்தைப் பருவம்

—லக்ஷ்மி

சமீபத்தில் காலமான எழுத்தாளர் லட்சுமி அவர்கள், நூற்றுக்கு மேற்பட்ட நெடுங்கதைகளையும், ஆயிரத்திற்கு மேற்பட்ட சிறுகதைகளையும், பல மருத்துவ நூல்களையும் எழுதிப் புகழ்பெற்றவர்•கடந்த 45 ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதி வந்தவர்.

இவர் எம். பி. பி. எஸ். டாக்டராக இருந்து மக்களின் உடல்நலம் பேணியதோடு, எழுத்தாளராக இருந்து மக்களின் மனவளம் பெருகவும் உதவியவர்.

தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பையும் இவரது எழுத்துக்களில் நன்கு காணலாம். மக்களுக்குப் பயன்படக் கூடிய, மக்களின் உயர்வுக்கு உதவக் கூடிய வகையிலே இவர் எழுதி வந்தார்.

தமிழக அரசின் பல பரிசுகளையும் சாகித்ய அகாதமியின் பரிசையும் பெற்ற இவர், மிக அடக்கமானவர்; பிறருக்கு உதவும் பெருங்குணம் கொண்டவர், எல்லாருக்கும் இனியவர், எழுத்தாளர் அனைவரும் மதித்துப் போற்றும் தகுதி பெற்றவர்..

இவர் எழுதி பூங்கொடி பதிப்பகம் வெளியிட்டுள்ள 'கதாசிரியையின் கதை' என்ற புத்தகத்திலிருந்து எடுத்த சில பகுதிகளைக் கீழே காணலாம்.

என் பெற்றோர்களுக்குச் சிறு வயதிலேயே திருமணம் நடந்து விட்டிருந்தது. கல்யாணத்தின் போது என் தாய் பத்து வயதுச் சிறுமி — என் தந்தை பதினைன்கு வயதுப் பள்ளிக்கூட மாணவன்!

என் தந்தை படித்து ஒரு வேலையைத்தேடிக்கொண்டுவாழ்க்கையைத் துவங்கும் வரை, தமது மகளைப் பிறந்த வீட்டிலேயே வைத்து ஆதரிப்பது என்று என் தாத்தா முடிவெடுத்து விட்டிருந்தார்.

இண்டர்மீடியட் பரீட்சையை முடித்துக் கொண்டு வைத்தியக் கல்லூரியில் என் தந்தை மாணவராகச் சேர்ந்த



பொழுதுதான் தாத்தா கொஞ்சம் கவலைப்படத்தொடங்கினார். ஐந்து வருஷப் படிப்பை முடித்துக் கொண்டு ஹவுஸ் ஸர்ஜன் பயிற்சி பெற்று... பிறகு தொழிலைத் துவங்க வேண்டும்.

என் தாயின் பெயர் சிவகாமி. ஆனால் தாத்தா தமது கடைசி மகளான என் அன்னையைப் பட்டம்மா என்று தான் அன்புடன் அழைப்பார். பட்டுப் போன்ற மென்மையான குணமுடையவள் — அழகி என்று தம் மகளைப் பற்றித் தாத்தாவுக்கு மிக்க பெருமை.

எனக்குத் தாத்தாவின் குல தெய்வமான திரிபுரசுந்தரியின் பெயர் சூட்டப்பட்டு, பெயர் சூட்டும் வைபவத்தைத் தமது அந்தஸ்துக்குத் தக்கபடி மிகவும் சிறப்பாகச் செய்து முடித்தார்.

தினமும் காலை ஸ்நானம் செய்துவிட்டு, வெள்ளை வெளேரென்று வேட்டி தரித்து நெற்றியில் விபூதிப் பட்டையும் கோபி சந்தனமுமாக மேல் துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு தாத்தா வெளியே கிளம்பி விடுவார். நானும் அவர் கையைப் பிடித்துக் கொண்டு களத்துமேடு — வாய்க்கால் கரை என்று கால்கடுக்கச் சுற்றி வருவேன். வரப்பின் மீது நடக்க முடியாது நான் தடுமாறும் போது தாத்தா என்னைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு நடப்பார். கடைத்தெருப் பக்கம் வந்ததும் சூடாக வறுத்த பட்டாணியை ஒரு பொட்டலம் வாங்கித் தின்னச் சொல்லி உபசரிப்பார். தீபாவளிப் பண்டிகையின் போது எனக்கு மட்டும் தாத்தா யாருக்கும் தெரியாமல் மத்தாப்பு வாங்க நாலணா கொடுப்பார். திருவிழாக் காலமானால் பாட்டியிடம் வள்ளிசாக ஒரு ரூபாய் கொடுத்து எனக்குப் பட்டு வளையல்களும் — ரிப்பன்களும் வாங்கித் தரச் சொல்லுவார்.

வீட்டில் தாத்தாவுக்கு மட்டும் வெள்ளித் தட்டில் உணவு பரிமாறப்படும். மற்றவர்களுக்கு வாழை இலையில் சாப்பாடு பரிமாறப்படும். குழந்தைகளுக்கு வெண்கலத் தட்டுகளில் உணவு பரிமாறப்படும்.

தாத்தாவுக்குச் செல்லப் பேத்தியாகிவிட்டோம் என்கிற கர்வத்தில் ஒருநாள் திடீரென்று புரட்சி செய்தேன். எனக்கும் வெள்ளித் தட்டில் சாதம் பரிமாறினால்தான் சாப்பிடுவேன் என்று அடம் பிடித்து அழத் தொடங்கினேன். என் மாமாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. கையை ஓங்கிக் கொண்டு அடிக்க வந்துவிட்டார். சாப்பாட்டு வேளையில் என்ன கலாட்டா என்று எல்லோரும் கவலையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் தாத்தா சட்டென்று எழுந்து மாமாவின் ஓங்கிய கையை அமர்த்தினார். 'பெண் குழந்தையைக் கை தொட்டு அடிப்பதை இன்றோடு மறந்துவிடு' என்று கோபமாகக் கூறிவிட்டு... உள்ளே சென்று தமது பீரோவைத் திறந்து ஒரு சிறு வெள்ளித் தட்டை எடுத்துவந்து பாட்டியிடம் கொடுத்துத் தேய்த்துத் துடைத்து எனக்கு அதில் சாதம் பரிமாறச் சொன்னார். பருப்பும் நெய்யும் கலந்து சோற்றைத் தமது கையாலேயே எனக்கு ஊட்டினார். "அழாதே... இந்த வருஷம் விளைச்சல் நல்லபடியா இருந்தா வெள்ளித் தட்டென்ன... உனக்குத் தங்கத்தட்டே வாங்கித் தரேன்" என்று என் முதுகைச் செல்லமாகத் தடவிக் கொடுத்தார்.

"இந்தச் சின்னக்குட்டி தாத்தாவை நன்னா காக்காய் பிடிச்சு வச்சுண்டு இருக்கா..." வீட்டிலிருந்த மற்ற உறவினர்கள் பொருமினர். நான்

பெருமையில் பூரித்துப் போனேன். அன்றிலிருந்து எனக்கு வெள்ளித் தட்டில்தான் சாப்பாடு.

விடியற்காலையிலேயே பாட்டி குளித்து முடித்துவிட்டுக் கொடியில் காய்ந்து கொண்டிருக்கும் மடிப் புடைவையையும் ரவிக்கையையும் அணிந்து கொண்டு நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டு தயிர் கடைய உட்கார்ந்து விடுவாள்.

கடைந்தெடுத்த வெண்ணெயி லிருந்து கணிசமான அளவை எடுத்து என் கையில் வைத்து, 'தின்னு போ...' என்று உத்தரவிடுவாள். 'கண்ணன் தின்னும் பண்டம் வெண்ணெய்—என்று பிற்காலத்தில் நான் படித்தேன். அன்றுடம் காலையில் நான் ஒரு எலுமிச்சம் பழம் அளவு வெண்ணெயைத் தின் றேன் — அதன் விளைவு?

சில மாதங்களில் கொழு கொழு வென்று குண்டானதொரு சிறுமி யாக மாறிப் போனேன்.

அடுத்த தடவை குழந்தைகளைப் பார்க்க ஊருக்கு வந்த என் தந்தைக்கு என்னை அடையாளம் தெரியவில்லை யாம்!

எனக்காக அன்போடு வாங்கிவந்த மிட்டாய்ப் பொட்டலத்தைத் திறந்து வைத்துக்கொண்டு.'குழந்தை! வாம்மா' என்று கூப்பிட்ட போது நான் போய் அவர் எதிரில் நின்றேன்.

"எங்கே என் குழந்தை!"என்று அவர் அதிசயமாகக் கேட்க வீட்டிலிருந்த வர்கள் கொல்லென்று சிரித்து விட் டார்கள்.

"உன் மகளை உனக்கு அடையாளம் தெரியலையா...?"என்று பரிகசித்தனர். என் தந்தை அதிர்ந்து போனார்.

என் தந்தை டாக்டருக்குப் படித்துக் கொண்டிருந்ததால் நேரிடை யாகத் தமது மாமனாரிடம் கண்டிப் பாகச் சொல்லிவிட்டார்."நான் குறிப் பிடும் உணவுகளைத் தவிர, கண்டதைக் கொடுத்துக் குழந்தையின் ஆரோக்கி யத்தைச் சீர்குலைத்து விடாதீர்கள். பாண்டியும் நாலு மூலை துப்பியும் விளையாடிப் பொழுதை வீணாக்கும் பருவம் அல்ல. வருகிற விஜயதசமி யின் போது இவளுக்கு அக்ஷராப்பி யாசம் செய்து வைத்துப் பள்ளிக்



கூடத்தில் சேர்த்துவிட வேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டுப் போய்விட்டார்.

ஒரு விஜயதசமி அன்று என் மாமா வின் மடியில் என்னை உட்கார வைத்துப் புரோகிதர் மந்திரங்களை ஓத,கோலமிட்ட கூடத்துத் தரை மீது நெல்லைப் பரப்பி மாமா என் வலது கை ஆள் காட்டி விரலைப் பிடித்துக் கொண்டு அதில் ஓம் என்று எழுத... ஹரி ஓம்... நமோ நாராயணா என்று உச்சரித்தபடி என் படிப்பை சாஸ்திர சம்பிரதாயத்துடன் துவக்கி வைத்தார் கள்.

அந்தக் கிராமத்தில் அதுசமயம் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம்தான் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

ஆசிரியருக்கு உரிய காணிக்கையை வெற்றிலை,-பாக்கு, பழங்களுடன் ஒரு தட்டில் வைத்து என்னைத் தூக்கி வரச் செய்து என் மாமனும், பாட்டியும் என்னைப் பள்ளியில் சேர்த்தார்கள்.

ஆசிரியர் காலில்விழுந்து கும்பிட்டு எழுந்து திண்ணையில் ஒதுக்கப்பட்டி ருந்த இடத்தில் உட்காரும் வரை எல் லாம்வேடிக்கையாக இருந்தது. பாட்டி யும் மாமாவும் என்னை அங்கே விட்டுப் போனதும் மனத்திற்குள் ஒரு திகில். கட்டுக் குடுமியும் காதுகளில் வெள்ளைக் கடுக்கன்களும் வாய் நிறைய வெற்றிலையுமாக வேட்டாடை யும் அங்கவஸ்திரமுமாக ஓங்கி உயர மாக நின்ற ஆசிரியரைக் கண்டு நான் நடுங்கிப் போனேன்.

வரிசையாகத் திண்ணையில் உட்கார்ந்திருந்த சிறுவர் சிறுமிகள் முன்னால் மணலைக் கொட்டித் துலாவி வைத்திருந்தார்கள்.

ஒருமுறை கையைப் பிடித்து அந்த மணல் மீது 'அ' எனும் எழுத்தை எழுதச்சொல்லிவிட்டு ஆசிரியர் குதப்பிக் கொண்டிருந்த வெற்றிலையைத் துப்பிவிட்டு "எழுதுங்கோ... அனா... ஆவன்னா... இனா... ஈயன்னா" என்று குரல் கொடுத்தார். நாங்களும் ஓங்கிய குரலில் கோஷ்டி கானமாகக் கத்திக் கொண்டு எழுதத் தொடங்கினோம். அவரது கடுமையான பார்வையும், கையில் பிடித்திருந்த பிரம்பும் என் அடி வயிற்றைக் கலக்கின. பள்ளிக்கூடம் என்றால் இப்படியா இருக்



கும்? முதல்நாளே எனக்கு பள்ளிக்கூடம் கசந்துபோய் விட்டது. அதற்குப் பின்னர் என்னைப் பள்ளிக்கு அனுப்ப என் பாட்டி பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

ஒரு கடலை உருண்டை அல்லது முறுக்கு போன்ற தின்பண்டங்களைக் கொடுத்து தாஜா செய்து பள்ளிக்கூடம் வரை நடந்து வந்து என்னை விட்டு விட்டு வரவேண்டியிருந்தது. பாட்டி நகர்ந்ததும் ஓவென்று நான் அழத் தொடங்குவேன். ஆசிரியர் முறைத்துப் பார்த்து "போய் உட்கார் உன் இடத்தில்" என்று அதட்டல் போட்டதும் சப்தநாடிகளும் ஒடுங்கிப் போய் உட்கார்ந்து விடுவேன். அந்தக் காலத்து ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு கட்டுப்பாட்டைப் போதிக்க பிரம்பையே பெரிதும் நம்பினார்கள்.

பள்ளிக்கூடத்திற்குச் சரியான நேரத்திற்கு வராவிடில் பள்ளிக்கூடம் முடியும்வரை கால் கடுக்க நிற்க வேண்டும். தோப்புக்கரணம் போட வேண்டும். இன்னும் பலவிதமான தண்டனைகள்.

பல தடவைகள் நான் உள்ளங்கை சிவக்க பிரம்படி பட்டிருக்கிறேன். எத்தனையோ தடவைகள் கால் கடுக்க நின்றிருக்கிறேன்.

இப்படி ஆரம்பித்த எனது ஆரம்பக் கல்வியில் திடீரென ஒரு திருப்பம் ஏற்பட்டது.

அந்த சிறு கிராமத்தில் பஞ்சாயத்தார் முயற்சியில் ஒரு பள்ளிக்கூடம் நிறுவப்பட்டது.

திண்ணையில் உட்கார்ந்த நாங்கள் பெஞ்சியில் உட்கார வைக்கப்பட்டோம். ஆசிரியர் எழுத்துக்களைக் கரும்பலகையில் எழுதிக் காட்டினார். ஆளுக்கு ஒரு சிலேட்டை வைத்துக் கொண்டு பலப்பக் குச்சியால் எழுதி எச்சிலைத் துப்பி அழித்துவிட்டு மீண்டும் எழுதி மகிழ்ந்தோம். பள்ளிக்கூடத்தை நிர்வகித்த ஆசிரியர் ஓர் இளைஞர். கிராப்பு முடி மீது குல்லாய் அணிந்து கொண்டு சுத்தமான வேட்டி, சட்டையில் பள்ளிக்குவந்தார். திண்ணைப்பள்ளி ஆசிரியரைப் போலப் பிரம்பும் கையுமாக இல்லாது புன்முறுவலுடன் எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுத்து எங்களுக்கு அலுப்புத் தெரியாதிருக்க தினமும் ஒரு கதை சொன்னார்.

என் வயதுச் சிறுமிகள் வீடுகட்டிக் கூட்டாஞ்சோறு ஆக்கி விளையாடும்போது நான் டாக்டர் விளையாட்டுத்தான விளையாடுவேன். வைத்தியத் தொழில் மீது எனக்குக் குழந்தைப் பருவத்திலேயே ஏற்பட்ட ஆசை பாரம்பரியமாக வந்ததொரு குணம் என்று தான் நம்புகிறேன்.

அந்தக்காலத்தில் காப்பி சாப்பிடும் வழக்கம் எங்கள் வீட்டில் கிடையாது. தாத்தா காலையில் சூடாக ஒரு டம்ளர் பால் சாப்பிட்டுவிட்டு வெளியே கிளம்பி விடுவார். பாட்டி ஒரு டம்ளர் மோர் சாப்பிடுவாள். குழந்தைகள்

எல்லோருக்கும் தயிர் விட்டுப் பிசைந்த பழைய சோறுதான் காலை வேளை டிபன்.

பள்ளிக்கூட விடுமுறைக்கு பாட்டி வீட்டிற்குச் சீராட வந்திருக்கும் எல்லாப் பேரக் குழந்தைகளையும் அழைத்து சுத்தமாகப் பெருக்கித் துடைத்து கடப்பைக்கல் பரவிய முற்றத்தில், தன்னைச் சுற்றிலும் உட்கார வைத்துக் கொள்வாள். ஒரு பெரும் கற்சட்டியில் பழைய சாதத்தைத் தயிர் விட்டு உப்பு போட்டு நன்றாகப் பிசைந்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு குழந்தையையும் உள்ளங் கையை நீட்டச் சொல்லி ஒரு பிடி சோற்றைக் கையில் வைத்து அதன் மேல் கொஞ்சம் எரிச்ச குழம்பை வைத்துச் சாப்பிடச் சொல்லி உபசரிப்பாள்.

சாப்பிடாது யாராவது இடக்கு செய்யாதிருக்க இந்த உபசரிப்பின் போது பாட்டி கதை சொல்லத் தொடங்கி விடுவாள்.

ராமாயணம் — மகாபாரதம் — பாகவதம் — நாடோடிக் கதைகள் என்று எனது பாட்டி சொல்லும் தொடர் கதையைக் கேட்க நாங்கள் அவள் கூப்பிடும் முன் காலை வேளைகளில் பழைய சோற்றுக்கு ஆஜர் ஆகிவிடுவோம். பாட்டி கதை சொல்வதில் மிகவும் கெட்டிக்காரி. ஒவ்வோர் இடத்திலும் ஒரு சஸ்பென்ஸை வைத்துக் கதையை நிறுத்தி விடுவாள் — மறுநாள் காலை எப்பொழுது விடியப் போகிறது என்ற ஆவலில் நாங்கள் துடிப்போம்.

பாட்டி மீனாட்சிக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் இலக்கிய உலகில் அவள் தனக்கென்று ஓர் இடத்தைக் கட்டாயம் உருவாக்கிக் கொண்டிருப்பாள் என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. அத்தனை கற்பனை அந்தக் கிழவிக்கு!

உறவினர் ஒருவரது வீட்டுக் கல்யாணத்திற்குத் தன் இரு குழந்தைகளுடன் என் தாய் புறப்பட்டுப் போயிருந்தாள்.

திரும்பி வந்தபோது என் தாயார், என் தங்கை, நான் மூவரும் பெரிய அம்மை நோயால் பாதிக்கப்பட்டுப் படுத்து விட்டோம். அத்துடன் வீட்டிலிருந்த மற்ற பேரக் குழந்தைகளுக்கும் அம்மை கண்டுவிடவே, வீடு ஓர் ஆஸ்பத்திரியாக மாறியது. வீட்டில் பெரிய அம்மை கண்டு விட்டிருக்கிறதைத் தெருவில் உள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்யப் பாட்டி வேப்பிலைக் கொத்தைவாயில்புறத்துக்கூரை முகப்பிலே செருகி வைத்தாள்.

அம்மை நோய் வராதிருக்க அம்மைப் பால் வைக்க வேண்டும் என்று என் தந்தை பல தடவை வற்புறுத்தி விட்டுப் போனதைப் பாட்டி அசட்டை செய்துவிட்டார் என்று என் தந்தை பின்னர் மிகவும் மனத்தாங்கல் அடைந்தார்.

பலர் வீட்டுக் குழந்தைகள் இந்த நோய்க்குப் பலியாகி விட்டனர்.



ஆனால், நாங்கள் அனைவரும் நோயினின்று பிழைத்து எழுந்து விட்டோம். யாருக்கும் அம்மை வடுக்கள் ஏற்படவில்லை. அது சமயபுரத்தாளின் கிருபை என்று பாட்டி அடிக்கடி சொல்வதைக் கேட்டிருக்கிறேன்.

அந்தக் காலத்தில் குழந்தைப் பருவத்தில் எங்களுக்கு விளையாட்டு வசதிகள் மிகவும் குறைவு. அதுவும் பெண் குழந்தைகள் இன்ன விளையாட்டுத்தான் விளையாடலாம் என்ற கட்டுப்பாடு வேறு. பாண்டி, பல்லாங்குழி, தாயக்கட்டம், கழற்சிக் காயைத் தூக்கியெறிந்து பிடித்தல் போன்ற விளையாட்டுக்கள்தான் பெண் குழந்தைகளுக்கு அனுமதிக்கப் பட்டன.

(அடுத்த இதழில் முடியும்)



தியாகராஜ சுவாமிகள்

தோற்றம்: 4-5-1767 மறைவு: 6-1-1847



ஹென்றி டூனண்ட்

தோற்றம் : 8-5-1828 மறைவு : 30-10-1910



தியாகராஜ சுவாமிகள்

தியாகராஜருடைய தந்தையார் பெயர் ராமப்பிரம்மம். அவர் சிறந்த பக்தர். சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் நல்ல புலமை உடையவர். அவர் தஞ்சாவூர் அரண்மனையில் வால்மீகி இராமாயணத்தை 24 முறைகள் பாடிப் பொருள் கூறியவர்.

சிறு வயதிலேயே தந்தையாருடன் தியாகராஜரும் அரண்மனைக்குச் செல்வார். தந்தையார் கூறும் இராமாயணத்தைக் கேட்பார்., அந்த வயதிலே இவருக்கு இராமரிடத்திலே மிகுந்த பக்தி ஏற்பட்டு விட்டது.

முதலில் இவர் சம்ஸ்கிருதத்திலே சில கீர்த்தனைகளை இயற்றினார். அந்தக் கீர்த்தனைகளை வீட்டுச் சுவரில் சுண்ணாம்புக் கட்டியால் எழுதி வைத்தார். அவற்றைக் கண்ட இவருடைய தந்தையார் மிகவும் வியப்படைந்தார். மகனை மனமாரப் பாராட்டினார். தந்தையார் கொடுத்த ஊக்கத்தால் இவர் மேன்மேலும் பல கீர்த்தனங்களை சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் பாடினார்.
இவரது கவி இயற்றும் திறமையையும், ஆழ்ந்த பக்தியுடன் அழகாகப் பாடும் திறமையையும் கண்டு மற்ற வித்வான்கள் ஆனந்தம் அடைந்தார்கள். 'இது மனித கானமல்ல; தேவ கானமே!' என்று அவர்கள் பாராட்டினர்கள்.

இராமபிரானிடம் இவர் அளவில்லாத பக்தி கொண்டு, உள்ளம் உருகிப் பாடிய கீர்த்தனைகள் நாடு முழுவதும் பரவியுள்ளன. இவரது கீர்த்தனைகளைப் பாடாத சங்கீத வித்துவானே இல்லை என்று சொல்லலாம்.


இவரது சமாதி திருவையாற்றில் உள்ளது. ஆண்டுதோறும் அங்கு பல சங்கீத வித்வான்கள் கூடி இவரது கீர்த்தனைகளைப் பாடிப் பரவசம் அடைகின்றனர்.




ஹென்றி டுனாண்ட்

இவர் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு பாங்கு முதலாளி. இவர்தான் செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவியவர். இத்தாலி நாட்டிலுள்ள சால்பெரீனோ என்னும் இடத்தில் பெரீனோ என்ற இடத்தில் போர் நடந்தது. அங்கு இறந்து கிடந்தவர்களையும் அவ்வழியாகச் சென்ற ஹென்றிடுனாண்ட்கண்டுமனம்கலங்கினார். குற்றுயிரும் குறையுயிருமாகக் கிடந்தவர்களைப் பிழைக்க வைக்க வேண்டுமென நினைத்தார். தமக்கு வேண்டியசிலருடன் அவர், தாகத்தால் நாக்கு வறண்டவர்களுக்குத் தண்ணீர் கொடுத்தார். காயம் பட்டவர்களின் புண்களில் மருந்து வைத்துக் கட்டினார். வேறு, அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்தார். டுனாண்டும் அவரது நண்பர்களும் செய்த உதவியால் நூற்றுக்கணக்கானவர்கள் உயிர் பிழைத்தனர்.

பிறகு, டுனாண்ட் சால் பெரீனோ நினைவுகள்' என்னும் புத்தகத்தை எழுதினார். அந்தப் புத்தகத்தில், தாம் கண்ட கோரக் காட்சிகளைப் பற்றிக் கூறியதோடு போரில் காயம் அடைபவர்களுக்கும், நோயினால் அவதிப்படுபவர்களுக்கும் உதவி புரிய ஒவ்வொரு நாட்டிலும் ஒரு சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்றும், அவ்வாறு ஏற்படுத்தப்படும் சங்கங்கள் அனைத்தையும் ஒன்றாக இணைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இவரது முயற்சியால் நாளடைவில் பல தேசங்களிலும் செஞ்சிலுவைச் சங்கங்கள் தோன்றின. போரில் ஈடுபடுபவர்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் உதவி செய்து வருகின்றது, செஞ்சிலுவைச் சங்கம். 1901 இல் இவருக்கும், பாசி என்பவருக்கும் கூட்டாக நோபல் பரிசு வழங்கப்பட்டது.






மேலே உள்ள ஒவ்வொரு படமும் எந்தப் பழமொழியை நினைவுபடுத்து கின்றது?

விடை: 62 ஆம் பக்கத்தில்

சிரிப்போம், சிந்திப்போம்




நல்ல பழக்கம்

"நான் நாலுமணிக்கே எழுந்துவிடுவேன்" என்றான் ஒருவன்.

"அப்படியா! சீக்கிரமாக எழுந்திருக்கும் நல்ல பழக்கம் உன்னிடம் இருக்கிறதே!" என்று ஆச்சரியப்பட்டான் அவனுடைய நண்பன்.

"ஆனால் நான் எழுந்திருக்கும்போது, சூரியன் மேற்குத் திசையில் இருக்கும்" என்று சொன்னான் அவன்.




குறிபார்க்கத் தெரியவில்லை

ஒருமுறை ரஷிய நாட்டுத் தலைவர் போலந்துக்குச் சென்றிருந்தார். அவருக்கு மரியாதை செலுத்தும் முறையில் 24 பீரங்கிகள் முழங்கின.

அவற்றின் முழக்கம் முடிந்தபின் ஒரு பாட்டி, சுட்டவர்களை நெருங்கிக் காரணம் கேட்டார்.

"ரஷியத் தலைவர் வந்திருக்கிறார்" என்று பதில் சொன்னார்கள்.

"இத்தனை தடவை சுட்ட பிறகும் உங்கள் குறி தவறி விட்டதே!" என்று கூறி வருத்தப்பட்டாள் அந்தப் பாட்டி.



கைதூக்கும் இரகசியம்

ஆறாம் வகுப்பு மாணவன் ஒருவனைத் தலைமை ஆசிரியர் தனியாகக் கூப்பிட்டு, "உங்கள் வகுப்பு ஆசிரியர் கேள்வி கேட்கும்போது, 'விடை தெரியும்' என்பதுபோல் எல்லோருமே கைதூக்குகிறீர்களே! உங்கள் ஆசிரியர் நன்றாகப் பாடம் சொல்லித் தருகிறாரா?" என்று கேட்டார்.

"எங்கள் ஆசிரியர் ஒரு கட்டளை போட்டிருக்கிறார். அதன்படி அவர் கேள்வி கேட்டால், நாங்கள் அத்தனை பேரும் கைதூக்க வேண்டும். ஆனால், பதில் தெரிந்தவன், வலது கையை உயர்த்த வேண்டும். பதில் தெரியாதவன் இடது கையைத் தூக்க வேண்டும். ஆசிரியர் வலது கையைத் தூக்கியவனிடமே கேள்வி கேட்பார்" என்று சொன்னான் அந்த உண்மை மாணவன்.



மேனேஜர் சாப்பிடமாட்டார்

ஓட்டலில் தோசை நன்றாக இல்லை என்று கத்தினார் ஒருவர். அவரைச் சமாதானப்படுத்திவிட முயன்றார் பரிமாறுபவர்.

"அதெல்லாம் முடியாது. மேனேஜரை உடனே இங்கே கூப்பிடு!" என்று பாய்ந்தார் அவர்.

"சார், மேனேஜர் இந்த ஓட்டல் தோசையைச் சாப்பிடுவதே இல்லை" என்று பதில் சொன்னார் பரிமாறுபவர்.

உயிருடன் இருப்பாய்



99 வயதான ஒரு கிழவரை அவருடைய பிறந்தநாளின் போது புகைப்படம் எடுத்தார் ஓர் இளைஞர். அந்தக் கிழவருக்கு நம்பிக்கை ஊட்டும் நோக்கத்துடன், "உங்கள் 100—வது பிறந்தநாளின்போதும் உங்களைப் படம் எடுக்கும் வாய்ப்பு எனக்கு இருக்கும் என்று நம்புகிறேன்" என்று சொன்னார் அந்த இளைஞர்.

"ஏன் நீ நன்றாகத்தானே இருக்கிறாய். நீ அடுத்த வருடம் கட்டாயம் உயிருடன் இருப்பாய்" என்றார் அந்தக் கிழவர்.


எவ்வளவு நேரம் பேசலாம்?



மேடையில் மணிக்கணக்காகப் பேசக் கூடிய ஒருவர், தன் பேச்சைத் தொடங்குவதற்குமுன் பக்கத்திலிருந்த தலைவரிடம், "நான் எவ்வளவு நேரம் பேசலாம்?" என்று கேட்டார்.

"நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், நாங்கள் அரை மணி நேரம் கழித்து எழுந்து போய் விடுவோம்" என்று பதிலளித்தார் தலைவர்.

ஏன் எழுப்பவில்லை?



"நேற்று இரவு அடிக்கடி இடி இடித்ததை நீ கேட்டாயா?" என்று தம்பியிடம் அக்காள் கேட்டாள்.

"அப்படியா! என்னை ஏன் எழுப்பவில்லை? இடி இடித்தால் நான் தூங்கமாட்டேன் என்று உனக்குத் தெரியுமல்லவா?" என்று கேட்டான் தம்பி.

இரண்டு நாற்காலிகளில் உட்காருங்கள்




ஓர் அலுவலகத்தில் ஒருவர் உள்ளே நுழைந்தார். ஒரு நாற்காலியைக் காட்டி அதில் உட்காரும்படி அவரிடம் சொன்னார் எழுத்தர்.

"நான் யார் தெரியுமா?" என்று ஆரம்பித்துத் தன் பட்டங்களை வரிசையாக ஒப்பித்தார் வந்தவர்.

"அப்படியா! மன்னிக்கவும். நீங்கள் இரண்டு நாற்காலிகளில் உட்காருங்கள்!" என்று சொன்னார் எழுத்தர் மிகுந்த பணிவுடன்.

— 'மலையமான்' தொகுத்த 'சிரிப்போம்; சிந்திப்போம்' என்ற புத்தகத்திலிருந்து.

வெளியிட்டோர்: ஒளிப் பதிப்பகம், சென்னை—18.





மிக்கி மௌஸின் கதை

— ஜானகிமணாளன்

குழந்தைகளே! உங்களுக்கு 'மிக்கி மௌஸ்' பற்றித் தெரியும் அல்லவா?

அது ஒரு சுண்டெலி!

கார்ட்டூன் சித்திரமாக வரையப்பட்டது. திரைப்படமாகக் கூட வந்துவிட்டது. மனிதர்களைப் போல நடக்கும், ஓடும், ஆடும், பாடும், பேசும், இன்னும் எல்லாம் செய்யும். பார்க்க வேடிக்கையாக இருக்கும்.

உங்களைப் போன்ற குழந்தைகள் மட்டுமல்ல. எங்களைப்போன்றபெரியவர்களும் கூட, அதை ரசித்துப் பார்ப்போம். அத்தனை பிரபலமானது.

முதன்முதலில், இந்தச் சுண்டெலியைக் கார்ட்டூன் சித்திரமாக வரைந்தவர் யார் தெரியுமா?

வால்ட் டிஸ்னி என்பவர்.

அது ஒரு சுவையான நிகழ்ச்சி.

அப்போது அவருக்கு இளமைப் பருவம். ஒரு சிறிய 'காரேஜில்' வசித்து வந்தார். மிகுந்த ஏழ்மை நிலை. கையில் பைசாக் கூட இல்லை. பல இடங்களில் வேலை தேடி அலைந்தார். கிடைக்கவில்லை.

அவர் நன்றாக ஓவியம் வரைவார். எனவே, ஓர் இடத்தில் சித்திரம் வரையும் வேலை கிடைத்தது. ஆனால், அங்கு இருந்தவர்களுடன் ஒத்துப் போக முடியவில்லை. கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டது. ஒரே மாசம்தான். வேலையை விட்டு நின்று விட்டார்.

பிறகு மீண்டும் வேலை தேடி அலையத் தொடங்கினார்.

ஒரு நாள் மிகவும் களைத்துப் போய் வீடு திரும்பினார். மிகவும் சிரமமாக இருந்தது. ஓய்வாகத் தரையில் மல்லாந்து படுத்தார். அவர் கண்முன் உயரே ஒரு காட்சி.

ஒரு ரொட்டித் துண்டை, சற்று உயரமான இடத்தில் வைத்திருந்தார். ஒரு சுண்டெலி குதித்துக் குதித்து ஓடி வந்தது. ரொட்டித் துண்டைக் கவ்வ முயன்றது. எட்டவில்லை. எம்பி எம்பிக் குதித்தது. அப்படியும் எட்டவில்லை. பொத்தென்று கீழே விழுந்தது. மறுபடியும் ஓடியோடி வந்து, ரொட்டியைக் கவ்வ முயன்றது.

உடனே, வால்ட் டிஸ்னியின்

மனத்தில் திடீரென்று ஓர் எண்ணம் பளிச்சிட்டது.

என்ன தெரியுமா?

அந்தச் சுண்டெலி ஓடுவதையும், துள்ளுவதையும், தாவுவதையும், ஏன் தனித் தனி கார்ட்டூன் சித்திரமாக வரையக் கூடாது என்று நினைத்தார்.

உடனே, எழுந்து உட்கார்ந்தார். காகிதம் — பேனாவை எடுத்து வரையத் தொடங்கிவிட்டார். சிலதினங்களில், ஏராளமான சித்திரங்களை வரைந்து தள்ளி விட்டார்.

எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, ஒரு தினசரிப் பத்திரிகை அலுவலகத்துக்குப் போனார். அதன் ஆசிரியரிடம் காட்டினார். அவருக்கு அவற்றை மிகவும் பிடித்துப் போய் விட்டது. அவற்றைத் தன் பத்திரிகையில் வெளியிட முடிவு செய்தார். எல்லாவற்றையும் விலைக்கு வாங்கிக் கொண்டார். டிஸ்னிக்கு நிறையப் பணம் கிடைத்தது.

அந்தச் சித்திரங்கள் பத்திரிகையில் வெளியாயின. அவற்றை மக்கள் மிகவும் ரசித்தனர். வரவேற்றனர். பாராட்டிக் கடிதங்கள் எழுதினர். பத்திரிகை அலுவலகத்துக்குத் தினசரி ஆயிரக்கணக்கான கடிதங்கள் வந்து குவிந்தன.

உடனே அந்தப்பத்திரிகைஆசிரியர் என்ன செய்தார் தெரியுமா?

வால்ட் டிஸ்னியை அழைத்தார். தினசரி அவருடைய கார்ட்டூன் ஒன்று பத்திரிகையில் வெளியாகும்படி வரைந்து கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டார்.

வால்ட் டிஸ்னி பிரபலமடைந்து விட்டார். அவர் மட்டுமா? அவருடைய படைப்பான 'மிக்கிமௌஸும்' கூடத்தான்!

பிற்பாடு, வால்ட் டிஸ்னி, 'டிஸ்னி லாண்டு' என்ற ஒரு விநோத உலகத்தையே படைத்து விட்டார்.

யாருக்காகத் தெரியுமா? எல்லாம் உங்களுக்காகத்தான்.

குழந்தைகளே! இந்த 'மிக்கி மௌஸ்' எப்படித் தோன்றியது என்பதைத் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா?



* டிஸ்னி லாண்டில்: நேருஜி, இந்திராகாந்தி யுடன் வால்ட் டிஸ்னி

கவிதை பிறந்த கதை

முயற்சி தொடர்ந்தால் முடியாதென்பது உலகில் கிடையாது!



—செல்ல கணபதி

கவிஞர் செல்லகணபதி அவர்களுக்குக் கவிதை பிறக்க, தன் வீட்டிலேயே நடந்த ஒரு சுவையான நிகழ்ச்சி காரணமாய் அமைந்தது. அதை அவரே கூறக் கேட்போம்:

ஒருநாள் என் மகன் அவன் அம்மாவிடம், 'ஆத்தா, ரொட்டி வேண்டும்' என்று கேட்டான்.

'அந்தப் பச்சை டப்பாவில் இருக்கிறது, எடுத்துக் கொள்' என்று என் மனைவி கூறினாள்.

டப்பாவைத் திறந்த பையன், 'ரொட்டி ஆம்பிப் போய்விட்டது' என்று கூறினான். காளான் பூத்துப் போவதை 'ஆம்பிப் போய்விட்டது' என்று கூறுவது செட்டி நாட்டு வழக்கு.



'அடடா, சோம்பேறித் தனத்தால் நான் ரொட்டியைப் பார்க்காமல் இருந்து விட்டேன்... கெட்டுப் போய் விட்டதே!' என்று மனம் வருந்தினாள் என் மனைவி. அவள் மேலும் தன் மகனிடம் கூறினாள்: 'சோம்பேறித் தனத்தால் பாராமல் இருந்ததன் பலன், பொருள் வீணாகப் போயிற்று; சோம்பல் இல்லாமல் வேலைகளைக் கவனித்திருந்தால் அதைத் தவிர்த்திருக்கலாமே! நீயாவது சோம்பல் இல்லாமல் காரியங்களைச் செய்து முடி!'

இந்த நிகழ்ச்சியில் என் உள்ளம் ஒன்றியது. ஆம்பிப் போன ரொட்டியும் சோம்பலால் வந்த ஆம்பலும் ஒரு பாடலாக உருவாயிற்று.

ஆம்பிக் கிடக்கும் ரொட்டித் துண்டுகள்
சாப்பிட உதவாது.
சோம்பிக் கிடந்தால் வாழ்வில் யார்க்கும்
காரியம் நடக்காது.

போர்த்திக் கொண்டு தூங்குவ தாலே
கடுங்குளிர் விலகாது.
வேர்க்க நடந்தால் மார்கழி மாதக்
குளிரும் தெரியாது.

கண்ணிருந் தாலும் மூடிக் கிடந்தால்
காட்சிகள் தெரியாது.
எண்ணம் இருந்தும் செயல் செய்யாவிடில்
ஏற்றம் கிடைக்காது.

அயர்ந்து படுத்தால் சோறிருந்தாலும்
சாப்பிட முடியாது.
முயற்சி தொடர்ந்தால் முடியாதென்பது
உலகில் கிடையாது!

இப்படிக் கவிதை நீளுகிறது.



கவிஞர் நண்பர்களுடன் குற்றாலத்திற்குச் சென்றிருந்தார். அருவியில் குளித்துவிட்டு வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்த பொழுது, ஒரு மரத்தின் கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு ஒரு குரங்குத் தாவியது. குரங்கினுடைய வயிற்றின் அடிப் பக்கத்தை இறுகத் தழுவிக் கொண்டிருந்தது அதன் குட்டி. இதைப் பார்த்த இவரது நண்பர் வியப்பில் ஆழ்ந்து போனாராம்.

எப்படித் தன் சிறு குட்டியைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தாய்க் குரங்கு தாவிச் செல்கிறது? தன் ஒரு கையால் குட்டியை அணைத்துக் கொள்ளும் எண்ணம்கூட எப்படி ஏற்படாமல்போயிற்று?' என்று அந்தத் தாய்க் குரங்கை, மானிடத் தாயுடன் ஒப்பிட்டு உள்ளம் உருகினாராம்.

அதற்குக் கவிஞர், ''போடா போ. இது என்ன அதிசயம்! கழைக் கூத்தாடியை நீ பார்த்ததில்லையா? அவன் தன் பிழைப்புக்காகத் தன் குழந்தையாய் இருந்தால் கூடத் தன் குழந்தை ஆயிற்றே என்றும் கவலைப்படாமல், குழந்தையை உயரத்தில் தூக்கிப் போட்டுப் பின்பு பிடரியில் தாங்கிப் பிடிக்கவில்லையா?'' என்று சொல்லி, இதற்குத் தன்னம்பிக்கையும், துணிச்சலும்தான் காரணம்'' என்றார். தன்னம்பிக்கையும் பழக்கமும் இருந்தால் எந்தக் காரியத்தையும் செய்து முடிக்கும் துணிச்சல் தானே வரும் என்று கூறும் கவிஞர், அதைப் பாட்டாகவும் பாடிவிட்டார்.

பழக்கம் இருந்தால் சர்க்கஸ் வித்தையும்
பார்த்திட எளிதாய்த் தோன்றும்.
பழக்கத் தாலே கம்பியில் கூடப்
பதமாய் நடந்திடக் கூடும்!

தாயின் மார்பைக் குட்டிகள் இறுகத்
தழுவிக் கொண்டிடும் போது
பாய்ந்து தாவிடும் குரங்குகள் மலையில்
பயமறி யாமல் ஏறும்!

முயன்று பழகினல் எவர்க்கும் எதுவும்
முடியா தென்பதும் உண்டோ?
அயர்ந்து தூங்கிடும் பிள்ளைக ளால்தான்
ஆவது ஒன்றும் இல்லை!

பேட்டி: பி. வி. கிரி

பாரதம் ஒன்றே

அழியா விழுதுகள் பலவானாலும்
ஆலமரந்தான் ஒன்றே.
மொழியால் இனங்கள் வேறுபட்டாலும்
முழுதும் பாரதம் ஒன்றே.

இடத்தால் மாநிலம் பிரிந்திருந்தாலும்
இந்தியர் அனைவரும் ஒன்றே.
திடமாய் ஒருமைப் பாட்டால் நந்தம்
தேசம் உயர்ந்திடும் நன்றே.

விதத்தால் விரல்கள் ஐந்தானாலும்
விளங்கும் கைதான் ஒன்றே.
மதத்தால் நாம்தான் வேறானாலும்
மனத்தால் அனைவரும் ஒன்றே.

—நடேச நாராயணன்



கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை -600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

உறுப்பினர் ஆனதும்.....

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதினாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப் பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனா நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங்களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது கோகுலத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில் பயன் தரும் வகையில் விழா நடத்தலாம்.

உறுப்பினராகக் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் மனு


பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து

பாபு துப்பறிகிறான்



பாபுவின் அம்மா சுந்தரிக்கு, தன் மகனைக் குறித்து ஒரு பக்கம் பெருமையாக இருந்தாலும் சில சமயங்களில் எரிச்சலாக இருக்கும்.

யாராவது வகுப்பில் படிக்கும் மாணவன் தெரியாமல் பாபுவிடம் போய், "டேய், பாபு! என்னுடைய பேனாவைக் காணோமடா!" என்று சொல்லி விட்டால் போதும்; உடனே துப்பறியக் கிளம்பி விடுவான் பாபு. அவன் தலையிட்ட எந்தக் காரியத்திலும் அவன் தோல்வியைக் கண்டதில்லை. இதனால், திருட்டுப் புத்தி கொண்ட சில மாணவர்கள் பாபுவைத் தங்களுடைய ஜென்ம விரோதியாக நினைத்தார்கள். ஆனால், பாபு இதற்கெல்லாமா கவலைப்படுவான்?

பாபுவின் பெரியம்மாவின் பெண்ணுக்குச் சென்னையில் திருமணம் ஏற்பாடாகியிருந்தது. முதல் நாளே பாபு, தன் பெற்றோர்களுடன் சென்னைக்குச் சென்றுவிட்டான்.

திருமணம் நடக்க இருந்த இடம் ஒரு பெரிய சத்திரம். மாலையில் மாப்பிள்ளை அழைப்பு வெகு விமரிசையாக நடந்தது.

அன்று இரவு 12 மணி இருக்கும். வெளியூரிலிருந்து வந்தவர்கள் மூலைக்கொருவராகச் சத்திரத்தில் உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

சத்திரத்தின் பெரிய திண்ணையில் சிலர் கூட்டங் கூட்டமாக உட்கார்ந்து சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

மாடியில் இருந்த அறையில் மாப்பிள்ளையும் அவருடைய உறவினர்களும் தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள்.

சத்திரத்தில் கூட்டம் அதிகமாக இருந்ததாலும், எங்கும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்ததாலும் பாபுவால் உறங்க முடியவில்லை.

தூக்கம் கலைந்த பாபு சத்திரத்தைச் சுற்றி வரலானான். சத்திரத்தின் பின் பக்கம் ஒரு பெரிய நெல்லி மரம் வளர்ந்திருந்தது. அந்த இடம் சற்று இருளடைந்து, ஆள் அரவமற்றதாக இருக்

ரா. கோ. வி.

கவே, தூக்கத்தைத் தொடரலாமென எண்ணி மரத்தின் வேரில் தலையை வைத்து, கால்களை நன்றாக நீட்டிக் கொண்டு கண்களை மூடினான் பாபு.

அப்போது —

யாரோ இருவர் அந்தப் பக்கமாக வந்தனர். பாபு அங்கு படுத்திருந்ததை அவர்கள் கவனிக்காமல் தங்களுக்குள் மெதுவாகப் பேசிக் கொண்டார்கள்.

"டேய், மூர்த்தி... இதுதாண்டா நல்ல சமயம்.. சத்திரத்தில் எல்லாரும் நல்லாத்தூங்குறாங்க.. சமையற்கட்டிலே தான் ஆள் நடமாட்டம் இருக்கு... கல்யாணப் பெண்ணோட நகைகளை நைசாகக் கிளப்பிக்கிட்டு வந்துட்டேண்டா... எப்படி வெளியே போறதுன்னுதான் இப்போ புரியல்லே..." என்றான் ஒருவன்.

"உஷ், சத்தம் போடாதேடா சின்னையா... பின்பக்கமா வழியைக் காணோம்...! நகைகளை எல்லாம் நம்ம சூட்கேஸிலே வை... கொஞ்ச நாழி ஆகட்டும்..." என்றான் மற்றொருவன்.

மெல்லத் தலையைத் தூக்கிப் பார்த்தான் பாபு. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. காரணம்? அந்த இருவரும் மிக நன்றாக உடை உடுத்தியிருந்தார்கள். நிலா வெளிச்சத்தில் அவர்களை ஓரளவு பார்க்க முடிந்தது.

ஒருவன் — பட்டு வேட்டி கட்டிக் கொண்டு மல்ஜிப்பா போட்டிருந்தான். காதிலே கடுக்கன், கைவிரல்களிலே மோதிரம் போட்டிருந்தான். தங்கப் பல் வேறு கட்டியிருந்தான்.

மற்றொருவன் — டெரிலின் பேண்ட்டும், சட்டையும் அணிந்திருந்தான். இடது கையில் விலை உயர்ந்த கடிகாரம் கட்டியிருந்தான்.

பார்ப்பதற்கு இருவரும் பெரிய மனிதர்களைப் போலக் காட்சியளித்தாலும் இருவரும் பக்காத் திருடர்கள்.

அவர்களை எப்படி மடக்கிப் பிடிப்பது என்று யோசிக்கலானான் பாபு.


சத்தம் போட்டால், மற்றவர்கள் வருவதற்குள் அவர்கள் நழுவி ஓடி விடலாம். தானே அவர்களைப் பிடிப்பதென்பதோ நடவாத காரியம். காரணம்? அவனோ பதின்மூன்று வயதுச் சிறுவன். ஆனால் அவர்களோ பலத்த முரடர்கள்.

பாபு ஒரு முடிவுக்கு வந்தான்.

திருடர்கள் இருவரும் அறியாமல் இருளில் தரையோடு தரையாக ஊர்ந்தவாறே மெதுவாக வாயிலுக்கு வந்தான் பாபு. அப்போது இருவர் சத்திரத்தினுள் நுழைந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் —

மாலி மாமா மற்றும் விசு சித்தப்பா. அவர்களைக் கண்டதும் பாபுவுக்கு உற்சாகம் பீறிட்டுக் கொண்டு



வந்தது.

அவர்களை அழைத்துக் கொண்டு தனியே ஓரிடத்திற்குச் சென்றான். பிறகு, மெல்ல அவர்களிடம்தான் கேட்டவைகளைக் கூறினான். பிறகு அவர்களிடம், "மாமா... சித்தப்பா, அந்த இரண்டு பேரும் மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தவர்கள் போலிருக்கு... நாம அவங்களைப் பிடித்தால் பெரியரகளையே ஏற்பட்டு, கல்யாணம் நின்று போனாலும் போய்விடும்... அவங்க வெளியே போகாமல் மட்டும் பார்த்துக் கொள்ளுங்கள்... நான் போய் போலீஸை அழைச்சுக்கிட்டு வந்துடறேன்" என்றான்.

பாபுவின் யோசனையை அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

மாலியையும், விசுவையும் அழைத்துக்கொண்டு சத்திரத்தின் பின் பக்கம் சென்றான் பாபு.

கைக்கு எட்டியது எங்கே வாய்க்கு எட்டாமல் போய்விடுமோ என்ற பயத்தில் சூட்கேசுடன் மெல்ல வந்து கொண்டிருந்தனர் திருடர்கள் இருவரும்.

அப்போது அவர்களைப் பார்த்து, "ஏன் சார், நீங்க இரண்டு பேரும் விழுப்புரத்திலிருந்துதானே வர்றீங்க?" என்று கேட்டான் பாபு.

'இல்லை' என்று சொன்னால் வேறு ஏதாவது விபரீதம் வந்துவிடுமோ என்று பயந்த அவர்கள் "ஹ... ஹீ... ஆமாம்... நீ யாரப்பா?" என்று கேட்டார்கள்.

உடனே பாபு, மாலி மாமாவைப் பார்த்து, "மாமா... இவங்க அப்பாவோட டியரஸ்ட் பிரண்ட்ஸ்... 'விழுப்புரத்திலிருந்து என்னுடைய பிரண்ட்ஸ் ராத்திரி 12 மணி ரயில்லே வருவாங்க... அவங்களை நன்றாகக் கவனிக்கணும்... வெளியே எங்கேயும் தங்க விடாமல் சத்திரத்திலேயே தங்க வைச்சுடு... இதோ வந்துடறேன்னு' சொல்லிட்டு அப்பா இப்போதான் வெளியே போனார்" என்றான் பாபு.

"அப்படியா! சரிடா பாபு... இவங்களை நாங்க நல்லா கவனிச்சுக்கிறோம். நீ போய் அப்பாவைக் கையோடு அழைச்சுக்கிட்டு வாடா" என்றார் மாலி மாமா.

அவ்வளவுதான் —



உலகிலேயே மிக வேகமாகப் பேசக் கூடிய மொழி பிரெஞ்சு மொழிதான்! நிமிடத்திற்கு 350 வார்த்தைகள், பேச முடியும். ஜப்பானிய மொழியில் 310 வார்த்தைகளையும், ஜெர்மன் மொழியில் நிமிடத்திற்கு 250 வார்த்தைகளையும் பேசுகிறார்கள்.

— ஆர். அரிகோபி.

போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சிட்டாகப் பறந்தான் பாபு.

திருடர்கள் இருவருக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை.

நகை காணமற் போன விஷயம் தெரிவதற்குள் நழுவினால்தான் உண்டு இல்லையென்றால் அவ்வளவுதான்!.. தர்ம அடி நிச்சயம் கிடைக்கும். என்ன செய்வதென்று புரியாமல் திரு திருவென விழிக்க ஆரம்பித்தார்கள். பிறகு அவர்களில் ஒருவன் துணிந்து, "மன்னிக்கணும் சார்! டிரெயின்லே எங்களாலே தூங்கவே முடியல்லே. நல்ல கூட்டம்... ரொம்ப அவஸ்தையாய்ப் போயிட்டது. கொஞ்ச நேரம் கண்ணை மூடினாத்தான் காலையிலே சுறுசுறுப்பா இருக்க முடியும். பக்கத்துத் தெருவில ஒரு லாட்ஜ் இருக்குதுன்னு சொன்னாங்க... அங்கே போய்த் தங்கிட்டு காலையில் வந்துடறோம்..." என்றான்.

"நோ... நோ... பாபுதான் சொல்லிட்டுப் போயிட்டானே... இன்னும் கொஞ்ச நேரத்திலே அவனோட அப்பா வந்துடுவார்... அவர்கிட்டே சொல்லிட்டு நீங்க தாராளமாகப் போகலாம்" என்றார் மாலி மாமா.

அதற்குள் விசு சித்தப்பா, திருடன் கையில் வைத்திருந்த சூட்கேசைப் பிடுங்கியவாறே, ''நீங்க இங்கேயே தங்கலாம்... பொண்ணோட ரூமுக்குப் பக்கத்திலேயே ஒரு ரூம் இருக்கு... நாங்க அங்கேதான் தங்கி இருக்கோம்... நாங்க வேணும்னு வெளியே படுத்துக்கிறோம்... நீங்க ரூமுக்குள்ளேயே படுத்து ரெஸ்ட் எடுத்துக்குங்க...'' என்றார்.

பாவம் திருடர்கள்! வேறு வழியில்லாமல் ரூமிற்குள் நுழைந்தார்கள்.

அவ்வளவுதான் —

பாய்ந்தோடிச் சென்று அறைக் கதவை இழுத்து மூடி, வெளிப் பக்கம் தாழ்ப் போட்டார் மாலி மாமா.

சற்று நேரத்தில் போலீஸ் ஜீப்பில் சப் இன்ஸ்பெக்டருடன் வந்திறங்கினான் பாபு.

அப்போது, ''அய்யோ... பொண்ணோட நகைகளைக் காணலியே...'' என்று கூக்குரலிடலாயினர் பாபுவின் பெரியப்பாவும், பெரியம்மாவும்.

''உஷ்... சத்தம் போடாதீங்க... நகைகளைக் கண்டுபிடிச்சிட்டோம்... திருடினவங்களும் இங்கேதான் இருக்காங்க'' என்று அமைதிப்படுத்தினான் பாபு.

இதற்குள் திண்ணையில் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தவர்களும், உறங்கிக் கொண்டிருந்தவர்களும் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

திருடர்களை அடைத்து வைத்திருந்த அறையின் கதவைத் திறந்தார் மாலி மாமா.

கதவைத் திறந்ததும் வெளியே பாய்ந்து வந்த திருடர்களை அமுக்கிப் பிடித்து அவர்கள் கையில் விலங்குகளை மாட்டினார் சப் இன்ஸ்பெக்டர்.

திருடர்கள் இருவரும்—மாப்பிள்ளை வீட்டாருக்கோ, பெண் வீட்டாருக்கோ உறவினர்கள் இல்லை.

கல்யாண வீட்டில் பெரிய மனிதர்களைப் போல நுழைந்து திருடும் கைதேர்ந்த திருடர்கள்!

அனைவரும் பாபுவை வெகுவாகப் பாராட்டினார்கள்.

பாபுவின் புகழ் மேலும் உயர்ந்தது என்று கூறவும் வேண்டுமா?



கால்கள் இருந்தும் ஊன்றுகோலா?

வி.ர.வசந்தன்



குளித்துவிட்டுத்தலையைத்துவட்டியவாறு தன் அறைக்குள் நுழைந்த மகேஷ், தன் தங்கை மாலதியிடம், ''என்னோட ஸ்கூல் யூனிஃபார்ம் எல்லாம் அயர்ன் பண்ணி வைக்கச் சொன்னேனே, வச்சிருக்கியா?'' என்று கேட்டான்.

''நேத்திக்கு சாயங்காலமே அயர்ன் பண்ணியாச்சு, அதோ பீரோவில வச்சிருக்கேன் பாரு'' என்ற மாலதி தன் பாடப் புத்தகத்தில் கவனத்தைச் செலுத்தினாள்.

மகேஷ் பீரோவில் அழகாக இஸ்திரி போட்டு மடித்து வைத்திருந்த தன் சீருடைகளை எடுத்து அணிந்து கொண்டான். அப்போது தன் பிள்ளைகளைச் சாப்பிட அழைக்கும் பொருட்டு அறைக்குள் எட்டிப் பார்த்தாள் மகேஷின் அம்மா.

அவளைப் பார்த்ததும் அவன், ''அம்மா எனக்கு ஸ்கூலுக்கு நேரமாயிடுச்சு. இந்த் அட்டவணையைப் பார்த்துப் புத்தகத்தையெல்லாம் கொஞ்சம் எடுத்து வையுங்களேன், ப்ளீஸ்'' என்று பரபரத்தான்.

எதையோ சொல்வதற்கு வாயெடுத்த அம்மா, தன்னை அடக்கிக் கொண்டு, அன்றைக்குத் தேவையான புத்தகங்களை மட்டும்எடுத்துக்கொடுத்தாள்.

கண்ணாடி முன் நின்று தலை சீவ ஆரம்பித்தவன், திடீரென்று நினைவு வந்தவனாக, ''ஆயா, என்னோட ஷூவுக்கு பாலீஷ் போட்டாச்சா?'' என்று அங்கிருந்தே சமையல் அறையைப் பார்த்துக் கத்தினான்.

இதுவெல்லாம் தினம் தினம் மகேஷின் வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிகள். அவன் பள்ளிக்கூடம் புறப்பட்டுவிட்டால், அவன் வேலைகளைச் செய்து கொடுத்து வழியனுப்பப் பத்துப் பேர் வேண்டும்!

அம்மாவால் அதற்கு மேலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சட்டென்று எழுந்து அவனிடம் வந்தாள். ''ஏண்டா, நானுந்தான் பார்க்கிறேன், அதைச் செய்தாச்சா, இதைச் செய்தாச்சான்னு எல்லார்க்கிட்டேயும் கேட்டுக்கிட்டு இருக்கிறே, உன்னோட வேலைகளை நீயே செய்துகொண்டால் என்ன?'' என்றாள் கடுமையாக.

அம்மாவின் கோபத்தைச் சற்றும் எதிர்பாராத மகேஷ், சமாளித்துக் கொண்டு, ''எனக்கு எங்கே நேரமிருக்கு, இதோ பாருங்க, இப்பவே மணி ஒம்பதைத் தாண்டியாச்சு'' என்றான்.

''இப்ப நேரமாகிப் போனதை விடு, ஏன் இதையெல்லாம் பொழுதோட திட்டமிட்டுச் செய்யக் கூடாது? உன்

தங்கச்சிக்கு மட்டும் எப்படி நேரம் கிடைக்குது?'' என்று அவன் முகத்தைப் பார்த்தபடியே கூறினாள் அம்மா.

அம்மாவின் கேள்விக்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனுக்குக் கோபம்தான் வந்தது. ''மால தின்னு போதும், கொஞ்சுவீங்க... நான்னு மட்டும் உங்களுக்கு இளப்பமாப் போச்சு. நீங்க ஒண்ணும் எனக்குச் செய்ய வேணாம், போங்க'' என்று கத்தினான்.

அவன் கோபத்தைப் பார்த்துத் திகைத்த அம்மா, ''அப்படி இல்லேடா மகேஷ், நீங்க ரெண்டு பேரும் எனக்கு ஒண்ணு போலத்தான்... தன்னுடைய வேலைகளைத் தானே செய்துக்கறது ஒரு நல்ல பழக்கம், எதுக்கெடுத்தாலும் அடுத்தவங்களை எதிர்பார்க்கிறது சரியில்லை... கால்கள் சரியாக இருந்தும் ஒருவன் ஊன்றுகோலோட நடந்தா, எப்படி இருக்கும்? யோசிச்சுப் பாரு. அது போலத்தான் அடுத்தவங்களைச் சார்ந்து வாழறதும்.. நாளைக்கு நீ வளர்ந்து மதிப்போட வாழணும்னு எதிலேயும் உனக்கு ஒரு பொறுப்பு இருக்கணும். தன்னம்பிக்கை இருக்கணும்...'' என்றாள்.

''அவசரத்துக்கு ஒரு சின்ன உதவி கேட்டதுக்குத்தானே இவ்வளவு பேசறீங்க?'' என்று அம்மாவைக் கடுகடுப்புடன் பார்த்தான் மகேஷ்..

''நீ உதவி கேட்டதுக்காகச் சொல்லலைடா, எதுக்கும் அடுத்தவங்களை எதிர்பார்க்கிற மனப்பான்மை வளரக் கூடாதுன்னுதான் சொன்னேன். பெற்றோரும், உடன் பிறந்தவங்களும் எத்தனை நாளைக்கு நமக்கு உதவுவாங்க? ஒவ்வொருத்தரும் தனியாத்தான் இந்த உலகத்துலே வாழ்ந்தாகணும். இந்தச் சின்னப் பருவத்தில பழகுகிற நல்ல பழக்கங்களும், கத்துக்கிற பண்புகளும்தான் பிறகு நமக்குத் துணையாக இருக்கும்'' என்றாள் அம்மா.

''சரி, சரி, எனக்கு ஸ்கூலுக்கு நேரமாச்சு, இனி, உங்ககிட்ட எதுவும் சொல்லலை'' என்று கோபம் தணியாமலே முணுமுணுத்தான் அவன்.

மகேஷ் பள்ளிக்கூடத்திற்கு நேரமாகிவிடவே தன் சைக்கிளில் விரைந்தான். தொலைவில் இரயில்வே கேட் திறந்திருப்பது தெரிந்தது.

அவன் இரயில் பாதையைக் கடக்கும் போது இரயில் ஒன்று படுவேகமாக வருவதைப் பார்த்தான். சாலையின் இருபுறமும் அடர்த்தியாக மரங்கள் இருந்ததால் தொலைவில் வரும்போது இரயில் தெரியவில்லை.


'என்ன இது? கதவு திறந்திருக்க இரயில் வருகிறதே, கதவை ஏன் மூடவில்லை?' என்று அவன் யோசித்து முடிப்பதற்குள்

எதிரே வந்து கொண்டிருந்த பேருந்து ஒன்று திறந்திருந்த கதவைத் தாண்டி இரயில் பாதையின் குறுக்கே புகுந்தது. அடுத்த நிமிடத்தில் அந்தப் பயங்கர சம்பவம் நிகழ்ந்தே விட்டது!

இடி முழங்குவதைப் போல, பெரும் சத்தத்தைக் கேட்ட மகேஷ் திடுக்கிட்டு சைக்கிளில் இருந்து இறங்கினான்.

படுவேகமாக வந்த இரயில் அந்தப் பேருந்தின் மீது மோதி அதைத் தூக்கி, வீசுவதையும், அப்படியும் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், அந்தப் பேருந்தை இரயில் தள்ளிக்

★★★★★★★★★★★




ஏன் குரைக்கிறார்?

''உங்க பக்கத்து வீட்டிலே இருக்கிற மாமா தினமும் காலையிலே எழுந்து நாய் மாதிரி 'லொள், லொள்'னு குரைத்துப் பார்க்கிறாரே, ஏன்?''

''சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாய்ப் பழக்கம்'னு யாரோ இவர் கிட்டே சொல்லித் தொலைச்சிட்டாங்களாம்!''

— டி. எல். ரெட்டி.



கொண்டே செல்வதையும் பார்த்தான்.

தடம் புரண்டு விடாமல் ஒரு வழியாக இரயில் நின்றது. அதில் பயணம் செய்தவர்கள் இறங்கிச் சின்னாபின்னமாக நசுங்கிக் கிடந்த பேருந்தை நோக்கி ஓடினார்கள்.

என்ன பயங்கரம்! காலிழந்து, கையிழந்து, உயிரிழந்து இரத்த வெள்ளத்தில் கிடக்கும் மனிதர்களும் வேதனைப் புலம்பல்களுமே அந்த இடத்தை நிறைத்திருந்தன.

எல்லோரும் அதிர்ந்து போய் நின்றனர். அப்போது கதவை மூடாமல் விட்டு விட்ட தொழிலாளி பதறிக்கொண்டு ஓடிவந்தான். கூட்டம் அவனைச் சூழ்ந்து கொண்டது.

அவன், "ஒரே வயத்து வலியா இருக்கேன்னு, மாத்திரை வாங்கப் போனேன்... 'இரயிலு வரப்போவுது, கதவை மூடுன்னு' இந்த ஆளுக்கிட்டே சொல்லிட்டுத்தான் போனேங்க. இவன் மூடாமே விட்டுட்டான், பாவி'' என்று யாரையோ காட்டிப் புலம்ப ஆரம்பித்தான்.

மகேஷ், தன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு மெதுவாக நடக்கலானான். அவனுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. அந்தக் கோரக் காட்சி அவன் கண்களில் இருந்து மறையவே இல்லை. தன் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டுப் போன ஒரு தனி மனிதனின் செயலல்லவா இத்தனை உயிர்களை ஒரு நொடியில் பறித்திருக்கிறது! இரயில் வருகிறது என்று தெரிந்தும் யாரோ ஒருவனிடம் கதவை மூடச் சொல்லிவிட்டுப் போன அவன் மெத்தனத்தை என்ன என்று சொல்வது?

அவனுக்கு அம்மா சொன்னது எல்லாம் நினைவுக்கு வந்தன. கால்கள் இருந்தும் ஊன்றுகோல்களைத் தேடுவதன் பலன் இதுதான்!

மகேஷுக்கு, காலையில் அம்மா மீது ஏற்பட்ட கோபம் எங்கோ ஓடிப் போயிற்று!

சிறு பருவத்தில் பழகும் நல்ல பழக்கங்கள்தான், பிற்காலத்தில் ஒரு மனிதனைப் பொறுப்புள்ளவனாக உருவாக்குகிறது என்று அம்மா சொன்னதை அவன் ஆழமாக இப்போது சிந்திக்கலானான்.



கலெக்டரைக் காப்பாற்றிய சிறுமி!

150 ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில்ரோஸ்பீட்டர்என்றஆங்கிலேயக் கலெக்டர் ஆட்சி புரிந்து வந்தார். அப்பொழுது அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் நிர்வாகம் கலெக்டர் பொறுப்பில் இருந்தது. நிர்வாகிஎன்றமுறையில்அவர்குதிரை மீது ஏறி மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றி இருக்கின்ற சித்திரை வீதிகளில் வருவாராம். அப்படியேமீனாட்சிஅம்மனால் ஈர்க்கப்பட்டு அடிக்கடி குதிரை மீதேறி மீனாட்சி அம்மனை வலம் வந்திருக்கிறார். தன்னை அறியாமல் பக்தி செலுத்தியிருக்கிறார். அப்பொழுது கலெக்டரின் பங்களா தல்லாகுளத்தில் இப்பொழுது காந்தி மியூஸியம் இருக்கிற இடத்தில் இருந்திருக்கிறது. ஒருநாள் மழை கடுமையாகப் பெய்திருக்கிறது. மாடியிலே கலெக்டர் படுத்து உறங்குகிறார். பாவாடை கட்டிக் கொண்டு ஒரு சிறிய குழந்தை கலெக்டரை எழுப்புகிறது. அவர் எழுந்து பார்க்கிறார். குழந்தை மாடியிலிருந்து இறங்கி மழையில் நனைந்து கொண்டே செல்கிறது. கலெக்டரும் அந்தக் குழந்தையின் பின்னால் நடக்கிறார். அந்தக் குழந்தை மீனாட்சி அம்மன் கோயிலை நோக்கி நடப்பது தெரிகிறது. அந்த நேரத்தில் பெரிய இடி இடிக்கிறது. கலெக்டர் படுத்திருந்த படுக்கை அறையில் இடி விழுந்து அது தரைமட்டமாகிறது. திரும்பிப் பார்க்கிறார் அவர். குழந்தையைக் காணோம். கலெக்டர், ''மீனாட்சி, மீனாட்சி'' என்று கதறுகிறார். தன்னைக் காப்பாற்றியது அன்னை மீனாட்சி என்று உணர்கிறார். அப்பொழுது அவர் முறைப்படி மீனாட்சியிடம் வேண்டுகோள் விடுக்கிறார். ''என்னைக் காப்பாற்ற நடந்தே வந்திருக்கிறாயே, குதிரையிலாவது வந்திருக்கக் கூடாதா? அப்படி நீ குதிரையில் வந்தால் உன் கால்களை வைத்துக் கொள்வதற்குதங்கத்திலேகால்மிதி(சேணம்) செய்து தருகிறேன்'' என்று சொல்லி அதன்படி தங்கத்திலேயே மிதி செய்து மீனாட்சி அம்மன் ஆலயத்திற்குக் காணிக்கையாக வழங்கியிருக்கிறார். அதில் 'ரோஸ்பீட்டர் அன்பளிப்பு' என தமிழில் பெயர் பொறிக்கப்பட்டு இன்றும் மீனாட்சி அம்மன் ஆலயக் கருவறையில் இருக்கிறது. அது மட்டுமல்ல, தான் இறந்த பிறகும் மீனாட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும் தன் உடலை மேங்காட்டுப் பொட்டலில் புதைக்க வேண்டுமென்றும் சொல்லிவிட்டு இறந்திருக்கிறார். அதன் பிறகு அவர் கூறியவாறு, அவர் உடலை மேங்காட்டுப் பொட்டலில் புதைத்திருக்கிறார்கள். அவர் இன்றும் மீனாட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தெய்வங்களுக்கு மனிதர்களிலே பேதமில்லை. அதே போல மனிதர்களுக்கும்தெய்வங்களிடத்திலேபேதமில்லை என்பதை ரோஸ்பீட்டர் நமக்கு உணர்த்துகிறார்.

— வி. என். சிதம்பரம்,
தக்கார், அருள்மிகு மீனாட்சி
அம்மன் கோயில், மதுரை.

(நன்றி: 'நகரத்தார் குரல்')

உருவகக் கதைகள்

—குரு. சீனிவாசன்



கொளுத்தும் கோடை வெயில். உருகி ஓடும் நகரத்தின் தார்ச் சாலையில் ஒரு வெளியூர் மனிதர் காலில் செருப்புடனும் கையில் விரித்துப் பிடித்த குடையுடனும் நடந்து போய்க் கொண்டிருந்தார்.

காலில் இருந்த செருப்பு தனது உழைப்பையும் தியாகத்தையும் பெரிதாக எண்ணிக் கர்வம் கொண்டது. அதனால் அது மற்ற உடைமைகளைத் துச்சமாக எண்ணியதோடு குடையைப் பார்த்து, "ஏ, குடையே, நீ ஒய்யாரமாக எஜமானன் கையில் உட்கார்ந்து கொண்டு வருகிறாய். ஆனால், நானோ நம் எஜமானனுடன் அவரது மற்ற உடைமைகளாகிய உங்களையெல்லாம் சுமந்து கொண்டு கொதிக்கும் தார்க் குழம்பில் அழுந்தி அல்லல் படுகிறேன். எனது சேவைக்கும் தியாகத்திற்கும் முன்னால் நீங்கள் எல்லாரும் எம்மட்டும்?" என்று ஏளனமும் ஆணவமும் தொனிக்க அங்கலாய்த்தது.

குடைக்கு உடனே கோபம் கொப்புளித்தது. அது எரிச்சலோடு செருப்பை நோக்கி, "அற்பக் காலணியே, யாரிடம் பெருமை பேசுகிறாய்? உச்சியி

பிறவிப்பயன்

லிருந்து நெருப்பாய்ப் பொழியும் சூரிய வெப்பத்தை என் தலையில் தாங்கிக் கொண்டு, நம் எஜமானரோடு உனக்கும் மற்ற உடைமைகளுக்கும் நிழல் கொடுத்து வரும் என்னிடம் உன் பெருமை மூட்டையை அவிழ்த்து விடாதே! நம் உரிமையாளரின் உடம்பை ஒட்டிக் கொண்டு உல்லாசமாக வருகின்ற வேட்டி கட்டையிடம் வேண்டுமானால் உன் தியாகத்தைப் பற்றிப் பேசு," என்று எரிந்து விழுந்தது.

குடை தன் வாயை மூடுமுன் வேட்டி பிடித்துக் கொண்டது: "குடையே, உனக்கும் காலணிக்கும் நடக்கும் பூசலில் என்னை ஏன் வம்புக்கு இழுக்கிறாய்? உங்கள் இருவருக்கும் நான் ஒன்றும் இளைத்தவன் அல்ல. நீங்கள் இருவரும் இல்லாமலே மனிதர்கள் வெளியில் நடமாட முடியும். ஆனால், மானம் காக்கும் என்னை உடுத்திக் கொள்ளாமல் அவர்கள் வீதிக்கு வர முடியுமா? மானம் காக்கும் நானே மனிதனின் முதல் தேவை. உங்கள் சேவை எல்லாம் எனக்கு அடுத்த படிதான். உல்லாசமாக உடலை ஒட்டிக் கொண்டு வருவது இடையில் இருக்கும் நானல்ல. மேனி

யில் மினுமினுக்கும் மேல் சட்டை தான். அறியாமல் பேசாதீர்கள்'' என்று பொரிந்து தள்ளியது.

இவ்வளவையும் கேட்டுக் கொண்டு மேல் சட்டை சும்மா இருக்குமா? அது வேட்டியைப் பார்த்து, ''ஏ வேட்டியே! என்னைக் குறை கூற உனக்கென்ன உரிமை? நீ எஜமானரின் இடையில் இருந்து கொண்டு அவரது மானத்தைக் காக்கலாம். ஆனால், அவருக்கு அந்தஸ்தை அளிப்பவன் நான் என்பதை மறந்து விடாதே! வெறும் வேட்டியுடன் வீட்டினுள் நடமாடிவிட முடியும். ஆனால், என்னை அணிந்து கொள்ளாமல் வெளியிலே போவதற்கு அவை வருமே கூசுவார்கள். அம்மட்டுக்கும் நம் உரிமையாளருக்கு நானும் அத்தியாவசியமான ஒருவன் தான். ஒரு பயனுமில்லாமல் அவரை ஒட்டிக் கொண்டிருக்கும் மற்ற உடைமைகளைப் பற்றிப் பேசுங்கள். என்னை இழுத்தால் எரிச்சல் வரும்'' என்று படபடத்தது.

அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த செருப்பு, ''அப்படியானால், நம்எஜமானரின் உடைமைகளில்எவர் தான் பயனற்றவர்?'' என்று நிதானமாகக் கேட்டது.

மணிக்கட்டில் உட்கார்ந்திருந்த கைக்கடிகாரம், ''நான் காலத்தைக் காட்டி, நம் உரிமையாளருக்கு உதவுகிறேன்,'' என்று தன் பயனைப் பறைசாற்றிப் பயனுடையோர் பட்டியலில் இடம் பெறுவதற்கு முந்தியது.

மூக்குக் கண்ணாடி, ''நான் பார்வைக் குறைவை நிவர்த்தி செய்து பயன்பட நிற்கிறேன்'' என்று தன் பங்கினை வலியுறுத்தியது.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு குடை மீண்டும் பேசியது: ''எல்லோரும் அவரவர் பணிகளை எடுத்துச் சொல்லி விட்டீர்கள். ஆனால், நம் எஜமானரின் விரலில் பகட்டாக ஏறிக் கொண்டு பளபளக்கிறாரே, மோதிரத் தம்பி, அவர் மட்டும் வாய் திறக்காமல் இருக்கிறாரே! அவருக்கு ஏதாவது சொல்வதற்கு இருக்கிறதா?''

உடனே எல்லா உடைமைகளும் மோதிரத்தைஏளனத்துடன் பார்த்துப் புன்னகை புரிந்தன.

''விலையில் உயர்வாக இருந்தாலும் பகட்டைத் தவிர வேறு எதற்குப் பயன்படப் போகிறார்?'' என்று குடை கூறி முடிக்குமுன் மற்றெல்லாப் பொருட்களும் அந்த மோதிரத்தைப் பார்த்துக் கெக்கலி கொட்டிச் சிரித்தன!

தன் நிலையை நினைத்துக் கூனிக் குறுகிப் போன மோதிரம் ஒன்றும் பேச முடியாமல் மௌனியாகி விட்டது.

பெரிய உணவு விடுதி ஒன்றில் நுழைந்து மதிய உணவு உட்கொண்ட அந்த வெளியூர்க்காரர் கல்லாவுக்கு அருகில் வந்தார். பணம் எடுக்கப் பையினுள் கையை விட்டவர் திடுக்கிட்டுத் தீயை மிதித்தவர் போன்று, ''ஐயோ, எனது பணப்பையைக் காணோம்! எங்கோ பறி கொடுத்து விட்டேன்'' என்று பரிதாபமாகக் கூவினார். அதற்குள் அங்கே ஒரு கூட்டம் கூடிவிட்டது.

கடைக்காரர்மிகுந்தகோபத்துடன், ''ஒழுங்காகப் பணத்தை எண்ணி வைக்காவிட்டால் போலீசைக் கூப்பிடுவேன்,'' என்று அதட்டிக் கொண்டு எழுந்தார்.

தமது மானம் பறிபோய்க் கொண்டிருப்பதை உணர்ந்த அந்த வெளியூர்க்காரர் மிகுந்த ரோஷத்துடன், ''நிறுத்தும் ஐயா, அதிகம் பேசாதீர்! உமக்குத் தேவை பணம்தானே? இதோ இந்தத் தங்க மோதிரத்தை ஈடாக வைத்துக் கொள்ளும். இன்று மாலையில் வந்து மீட்டுக் கொள்கிறேன்,'' என்று கூறி மோதிரத்தைக் கழற்றி மேசையின் மீது வைத்துவிட்டு வெளியில் நடந்தார்.

மேசையின் மீது பளபளத்த அந்தத் தங்க மோதிரம் மற்ற உடைமைகளால் காப்பாற்ற முடியாத தன் எஜமானனின் மானத்தையும் மதிப்பையும் காப்பாற்றித் தன் பிறவிப் பயனை அடைந்து விட்ட நிம்மதியோடு, கல்லாப் பெட்டிக்குள் அடைக்கலம் புகுந்தது.

சற்று நேரத்திற்கு முன் மோதிரத்தைப் பயனற்ற ஒன்று என்று பரிகசித்த மற்ற பொருட்கள் யாவும் இப்போது அதன் மகிமையை நினைத்து மனதிற்குள் போற்றத் தொடங்கின.

உரிமையை இழப்பதா?



ஒரு மரத்தின் கிளையில் மயில் ஒன்று மிகுந்த வருத்தத்துடன் உட்கார்ந்திருந்தது. அப்போது அங்கே ஒரு குயில் வந்து சேர்ந்தது. அது மயிலைப் பார்த்து, "என்ன மயிலண்ணா, மிக்வும் கவலையோடு காணப்படுகிறீர்களே! காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று பாசத்துடன் வினவியது.

"ஒன்றுமில்லை தம்பி. நீல வண்ணத்துடன் நீண்ட தோகையையும் எனக்குக் கொடுத்த இறைவன், உன்னைப் போன்று இனிமையான குரல்வளத்தைக் கொடுக்காமல் கோரமான குரலைக் கொடுத்து விட்டானே! அதை நினைத்துப் பார்த்துத்தான் வருந்துகிறேன்."

உடனே குயில், "எனக்கு மட்டும் என்னவாம்? குரலில்தான் இனிமையை வைத்திருக்கிறானே தவிர, தோற்றத்தில் அழகைக் கொடுக்காமல் வஞ்சனை செய்து விட்டானே! என் குறையை எவரிடம் சொல்வேன்?" என்று குறைப்பட்டது.

"நீ கூறுவதும் நியாயம்தான்" என்று ஆமோதித்த மயில் சிறிது நேரம் சிந்தித்துவிட்டு இப்படிக் கூறியது:


"குயில் தம்பி, நாம் ஒன்று செய்தால் என்ன? நாம் இப்போதே நான்முகனைச் சந்தித்து நமது மனக்குறையை அவரிடம் கூறலாமே!" என்றது. மயிலின் யோசனைக்குக் குயிலும் ஒப்புக் கொண்டது. உடனே இரு பறவைகளும் பறந்து சத்திய லோகத்தை அடைந்து பிரம்மாவிடம் முறையிட்டன.

நான்முகன் அவற்றின் மனக்குறைகளைக் கேட்டுத் தமக்குள் சிரித்துக் கொண்டார். இரக்கத்தோடு அவற்றைப் பார்த்து, "உங்கள் இருவரிலே ஒருவர் அழகிய தோற்றத்தையும், மற்றொருவர் இனிய குரலையும் பெற்றுள்ளீர்கள். ஆனால், உங்கள் பறவை இனத்தைச் சேர்ந்த காக்கையைப் பற்றி நீங்கள் இருவரும் நினைத்துப் பார்த்ததுண்டா? அந்தக் காக்கையோடு உங்களை ஒப்பிட்டுப் பார்த்து நமக்கு ஒன்றாவது கிடைத்ததே என்று திருப்தி அடையுங்கள், போங்கள்" என்று புத்திமதி கூறினார்.

அப்போது மயில் அவரை நோக்கி, "சுவாமி! எங்களைக் காட்டிலும் தாழ்வான காக்கையை உதாரணம் காட்டினீர்கள். உண்மைதான். ஆனால் எம்மினும் உயர்ந்த கிளியினத்தை மறந்து விட்டீர்களா? அதற்கு மட்டும் வனப்பான உடல், வளமான குரல் இரண்டையும் நீங்கள்தானே கொடுத்துள்ளீர்கள்! எங்களுக்கு மட்டும் பாரபட்சமா?" என்று வாதிட்டது.

சற்று நேரம் யோசித்த பிரம்மதேவன் அவற்றைப் பார்த்து, "அழகு, குரல் இரண்டையும் பெற்றிருப்பதால்தான் அந்தக் கிளிகள் மனிதர்களால் மிகவும் கவரப்பட்டுக் கூண்டில் அடைக்கப்படுகின்றன. அவை சுதந்திரத்தை இழந்து வாழ்நாள் முழுவதும் சிறைத் துன்பத்தை அனுபவிக்கின்றன. உங்களுக்கும் அழகு, இனிய குரல் இரண்டையும் கொடுக்கத் தயார். அந்தக் கிளிகளைப் போல உரிமையை இழக்க உங்களுக்குச் சம்மதமா?" என்று கண்டிப்புடன் கேட்டார்.

அதைக் கேட்ட மயிலும் குயிலும் திடுக்கிட்டன. "எங்களை மன்னிக்க வேண்டும். இருக்கின்ற ஒன்றே போதும். உரிமையையும் உல்லாசத்தையும் இழக்க நாங்கள் ஒருபோதும் தயாரில்லை" என்றுகூறிவிட்டு மண்ணுலகம் நோக்கிப் பறந்தன!



எஸ்ஜிப்போர்

கோடை விடுமுறைக்குப், பின் பள்ளிக்கூடம்திறந்தஇரண்டாம்நாள். அன்றுதான் பரத் புதிதாக அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தான். வகுப் பாசிரியர் பரத்தை வகுப்பு மாணவர் களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். எல்லா மாணவர்களும். இன்முகம் காட்டி அவனை வரவேற்றனர்.

அன்றே அவ்வாசிரியர் இன் ஞென்றையும் செய்தார். வகுப்பி லுள்ள நாற்பது மாணவர்களையும் உயர வரிசையின்படி நிற்க வைத்தார். பின்னர் அவ்வாறேகுள்ளமான மாண வர்களை முதல் வரிசையிலும், அவர் களைவிட சற்று உயரமானவர்களை அடுத்த வரிசையிலுமாக அனைவருக் கும் இருக்கைகளை ஒதுக்கிக் கொடுத் தார்.

மேசையும், சாய்வு பெஞ்சியும் இணைக்கப்பட்டு இருவர் மட்டுமே அமரக் கூடிய இரட்டை டெஸ்குகள் இருபது அங்கிருந்தன. அவை வரி சைக்கு நான்கு வீதம் ஐந்து வரிசை களாகப் போடப்பட்டிருந்தன. ஆசிரியரின் அவ்வேற்பாட்டின்படி பரத்தும் சீனியும் ஒன்ருக அமர வேண்டியதாயிற்று.

மாலை நான்கு மணி ; பள்ளி முடிந்து பரத் வீடு திரும்பிக்கொண்டிருந்தான். அவன் வகுப்பு மாணவர்கள் சிலர் அவனேடு வந்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் கண்ணன்.

''பரத், இந்தப் பள்ளிக்கூடத்துக்கு நீ புதியவன். எனவேதான் நான் இதை

லூர்து எஸ். ராஜ்

உனக்குச் சொல்லுகிறேன். உன்னருகில் இருக்கும் சீனி மிகவும் பொல்லாதவன்; முரடன். அவனை யாருக்கும் பிடிக்காது. அவனிடம் நீ மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள். இல்லாவிட்டால் நீ அவனிடம் மாட்டிக் கொள்வாய். அடி உதையால் உன்னை பின்னி எடுத்துவிடுவான்'' என்று கண்ணன் எச்சரித்தான். அவனோடு வந்த அனைவரும் இதை ஆமோதித்தனர்.

கண்ணனால் அறிவுறுத்தப்பட்ட பரத் மிகவும் கவனமாகத்தான் நடந்து கொண்டான். இயல்பாகவே நல்லவனான அவன் சீனியுடன் எந்தவித தகராறுக்கும் இடமில்லாமல் பார்த்துக் கொண்டான்.

அன்று கணித பாடத்தில் வடிவ இயல் நடந்து கொண்டிருந்தது. இணைகரம் ஒன்றை கரும்பலகையில் வரைந்து விளக்கிய ஆசிரியர், மாணவர்களை அதை வரையுமாறு கேட்டுக் கொண்டார். எல்லா மாணவர்களும் வரையத் தொடங்கினர்.

மாணவர்களின் மேஜை சற்று சிறியதாகத்தான் இருந்தது. எனவே இரு மாணவர்கள் தங்கள் வடிவ இயல் நோட்டை விரித்து வைத்து வரைவது சற்று கடினமாகவே இருந்தது.

பரத், சீனி இருவரின் நோட்டுகளும் ஒன்றை ஒன்று இடித்துக் கொண்டிருந்தன. இதைப் பார்த்ததும் சீனிக்கு பொசுக்கென்று கோபம் வந்துவிட்டது.

''என்னடா பரத், நீ மட்டும்தான் வரைய வேண்டுமா, நானெல்லாம் வரையக் கூடாதோ? மரியாதையாக உன் நோட்டை நகர்த்திக் கொள்'' என்றான் சீனி.

பரத்துக்கு தேள் கொட்டியது போல் இருந்தது. 'துஷ்டனைக் கண்டால் தூர விலகு' என்பது பழமொழி. எனவே அவன் தனது நோட்டை மேசையின் ஓரத்தில் தள்ளி வைத்துக் கொண்டு வரைந்தான். ஒருவழியாக நிலைமையைச் சமாளித்துக் கொண்டான்.

மறுநாள், வகுப்பறையினுள்ளே நுழைந்த பரத்துக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. சீனி அளவு கோலினால் அளந்து அவர்களின் இருக்கையை இரு சம பாகங்களாக பாகப் பிரிவினை செய்து கொண்டிருந்தான். காம்பஸ் ஊசியினால் மேசையிலும் சாய்வு பெஞ்சியிலும் அழுத்தமான ஒரு கோடு வரைந்து இருவருக்கும் இடையில் ஓர் எல்லையை ஏற்படுத்தி வைத்துவிட்டான்.

''டேய், அளந்து இரு சம பாகமாகப் பிரித்துவிட்டேன். உன் எல்லைக்குள் உன் வேலையைச் செய். என் எல்லைக்குள் நீயோ, உன் பொருட்களோ வரக் கூடாது. எல்லை மீறி வந்தால் நான் மிகவும் சீரியஸாக இருப்பேன்'' என்று கத்தினான் சீனி.

ஏதோ ஒரு பெரிய சண்டை வரப் போகிறது என சில மாணவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், பரத் சண்டை வருவதற்கான எல்லா சூழ்நிலைகளையும் தவிர்த்து விட்டான். எனவே, சண்டை ஏற்படவில்லை. ஆனால், எல்லையில் பதற்றமான ஒரு நிலை எப்போதும் ஏற்பட வாய்ப்பு இருந்து கொண்டே இருந்தது.

சில மாதங்கள் ஓடி மறைந்தன. அன்று வரலாறு வகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் இந்தியாவுக்கும் அதன் அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்காள தேசம், சீனா ஆகிய நாடுகளுக்கும் இடையிலான எல்லைக் கோட்டைப் படத்தில் விளக்

நாய் கடித்தது ஏன்?


''ரகு! என்னை எங்க வீட்டு நாய் கடித்து விட்டது!''

''திருடனைத்தானே நாய் கடிப்பது வழக்கம்! உன்னை நாய் கடிக்கும் போது நீ என்ன செய்து கொண்டு இருந்தாய்?''

''யாருக்கும் தெரியாமல் எங்கம்மா செய்து வைத்திருந்த பலகாரத்தை எடுத்துக் கொண்டிருந்தேன்!''

— மணியன் தர்மலிங்கம்.





எங்கு தேசிய கீதம் கேட்டாலும் எழுந்து நின்று மதிப்புத் தருபவள் நான். ஆனால், என் சிநேகிதியோ என்னைப் பார்த்துக் கேலி செய்வாள். 'நீ என்ன பெரிய தியாகியா?' 'இந்த நாட்டை ஆளப் போகிறாயா?' என்பாள்.

என் தாயார் மிகுந்த நாட்டுப் பற்று உடையவர். என்னையும் சின்ன வயது முதற்கொண்டே அறிவுக் கதைகளைக் கூறியும் நாட்டுப் பற்றை ஊட்டியும் வளர்த்து வருகிறார்.

தேசப் பற்றில்லாதவர்களைப் பற்றி மகாகவி பாரதியார் கூறுகிறார்:

'அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள் வேய்
பிணத்தோடொப்பார்'

அணிகளுடன் கூடிய பிணத்தைப் போன்றவர் என்கிறார். இதை என் போன்ற சகோதர சகோதரிகள் உணர வேண்டும் என்பதே என் ஆசை.

— நி. இலட்சுமி (3344), சென்னை.

இக் காட்டிக் கொண்டிருந்தார். அவர் சொல்லிய வண்ணமாக மாணவர்கள் தங்கள் பயிற்சிப் புத்தகத்தில் அவ்வெல்லைகளைக் குறித்துக் கொண்டிருந்தனர்.

வரலாறு புவிஇயலுக்கான பயிற்சிப் புத்தகம் சற்றுப் பெரியதாக இருந்தது. ஒரே மேசையில் இருவர் அப் புத்தகங்களை வைத்து எழுதவும், வரையவும் சற்று சிரமப்பட்டுக் கொண்டிருந்தனர். இருந்தபோதிலும், ஒருவருக்கொருவர், விட்டுக் கொடுத்து சுமுகமாக செயலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

பாடத்தில் கவனமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த பரத் தன்னை மறந்து விட்டான். அவனது பயிற்சிப் புத்தகம் எல்லையை மீறிவிட்டது. அதன் ஒரு பகுதி சீனியின் எல்லைக்குள் புகுந்து கொண்டது.

இதைப் பார்த்த சீனிக்கு, கோபம் வந்தது. உடனே அவன் பிளேடை எடுத்தான். ஒரே இழுப்பு! எல்லை மீறி நுழைந்த புத்தகத்தின் பகுதிகள் நறுக்கி எறியப்பட்டன!

பாடத்தில் கவனமாய்க் கருத்தாய் ஆழ்ந்து கிடந்த பரத்தின் கண்கள் இப்போது புத்தகத்தை நோக்கித் திரும்பின. அவனது பயிற்சிப் புத்தகத்தின் நறுக்கப்பட்ட சில பகுதிகள் கீழே இறைந்து கிடந்தன.

மணியடித்தது. ஆசிரியர் வகுப்பறையை விட்டு வெளியேறினார். பரத்தின் முகத்தை சோகம் கப்பிக் கொண்டது. அடுத்த நிமிடத்தில் அடுத்த பாட வேளைக்கான ஆசிரியர் வகுப்பறையினுள்ளே நுழைந்துவிட்டார். பரத்தின் மனம் ஒரு முடிவுக்கும் வராமல் சற்று நேரம் தடுமாறிக் கொண்டிருந்தது.

சில நிமிடங்கள் கடந்தன. 'இதை இப்படியே விட்டுக் கொண்டிருப்பது சரியல்ல; ஆசிரியரிடம் புகார் செய்ய வேண்டும்' என்ற தீர்மானம் இப்போது அவனுள்ளத்தில் மேலோங்கி நின்றது. இடத்தை விட்டெழுந்த அவன் ஆசிரியரிடம் சென்று முறையிட்டான். அவர் அவனை வரலாற்றாசிரியரிடம் அனுப்பி வைத்தார்.

வரலாற்றாசிரியர் பரத்தையும் சீனியையும் விசாரித்தார். பின்னர் அவர் இருவரையும் தலைமை ஆசிரியரிடம் அனுப்பி வைத்தார். தலைமை ஆசிரியர் சீனிக்கு ஐந்து ரூபாய் அபராதம் விதித்தார். 'புதுப் பயிற்சிப் புத்தகம் ஒன்றை வாங்கி பரத்துக்கு கொடுக்க வேண்டுமென்று சீனிக்குக் கட்டளையிட்டார். அத்துடன் அவனுக்கு நான்கு பிரம்படிகளும் வழங்கப்பட்டன.

பரத் இதுவரை ஏழு பள்ளிக்கூடங்களில் பயின்றுள்ளான். சீனி

யைப்போன்ற முன்கோபியும் முரடனுமான மாணவனை அவன் எங்கும் பார்க்கவில்லை.

சில வாரங்கள் சென்றன. பரத் சீனியுடன் பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். ஆனால் சீனி இவனுடன் பேசவே விரும்பவில்லை, எப்போதும் முகத்தை கடுகடுப்பாகவே வைத்துக் கொண்டான்.

'சீனியும் நல்லமாணவனாகத் திகழ வேண்டும். எல்லா மாணவர்களும் அவன் நட்பை விரும்ப வேண்டும். அவனது முரட்டுக் குணம் மறைய வேண்டும். விட்டுக் கொடுத்து அனைவரிடமும் அவன் அன்பாய்ப் பழக வேண்டும். இவ்வாறு அவனை மாற்ற என்ன செய்யலாம்?' இவ்வாறு பல நாள் சிந்தித்தான் பரத்.

அந்தச்சமயத்தில் பள்ளியில் கலைக் குழு, மலர்க் குழு, அறிவியல் மன்றம், கணித மன்றம் போன்ற பல்வேறு குழுக்களை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று பள்ளி நீதிமன்றம். ஒவ்வொரு வகுப்பின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு மாணவன் பள்ளி நீதி மன்றத்திற்கு தேர்வு செய்யப்பட இருந்தான்.

பரத் வகுப்பு மாணவர்கள் அனைவரும் பரத்தையே பள்ளி நீதி மன்றத்துக்குத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டுமென முடிவு செய்திருந்தனர். ஏனென்றால், பள்ளியில் சேர்ந்த சில மாதங்களுக்குள்ளே சீனி நீங்கலாக அனைவருக்கும் பரத்தைப் பிடித்து விட்டது.

மாணவர்கள் பரத்திடம் தங்கள் முடிவைத் தெரிவித்தனர். அவர்கள் அனைவரும் தன்மேல் வைத்துள்ள அன்புக்காக பரத் நன்றி கூறினான். ஆனால், பள்ளி நீதி மன்றத்துக்கு, தான் தேர்வு செய்யப்படுவதை அவன் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டான்.

''என்மேல் அன்பு காட்டி வரும் நண்பர்களே! என்னை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டாம். ஆனால், நமது வகுப்பு மாணவர்களின் நலனைக் கருதி நான் ஒரு செயலைச் செய்ய விரும்புகிறேன். அதன் ஆரம்ப கட்டமாக ஒரு மாணவனை பள்ளி நீதி மன்றத்திற்கு அனுப்பலாம் என எண்ணுகிறேன். நான் முன்மொழியும் அம்மாணவனையே நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்'' என்று வேண்டுகோள் விடுத்தான் பரத்.

மாணவர்கள் அனைவரும் அவனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டனர். யாரும் மறுத்துரைக்கவில்லை.

வரலாறு புவியியல் பாட வேளை. பள்ளி நீதிமன்றத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறிய ஆசிரியர் தேர்தலை நடத்தத் தொடங்கினார்.

உடனே பரத் எழுந்தான். ''பள்ளி நீதிமன்றத்துக்கு பத்தாவது வகுப்பு 'அ' பிரிவின் பிரதிநிதியாக சீனியை நான் முன்மொழிகிறேன்'' என்றான்.


மாணவர்களில் பலர் இதை எதிர்பார்க்கவில்லை! அனைவருக்கும் பேரதிர்ச்சி! நிமிடங்கள் ஓடிக்கொண்டிருந்தன. பரத்தின் முன்மொழிதலை யாரும் வழிமொழியவில்லை. இறுதியாக பரத் திரும்பத் திரும்ப ரகசியமாக வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதால் முன்பெஞ்சில் அமர்ந்திருந்த சேகர் எழுந்து அதை வழிமொழிந்தான்.

ஒன்னரை ஆப்பிள்

கடைக்காரன்: ''என்ன தம்பி, ஒன்னரை ஆப்பிள் கேட்கிறாய்?''

பாபு: ''எங்கப்பா மூன்று ரூபாய் கொடுத்து மூன்று ரூபாய்க்கும் ஆப்பிள் வாங்கி வரச் சொன்னாங்க! நீங்க ஒரு ஆப்பிள் இரண்டு ரூபாய்ன்னு சொன்னீங்களே!''

— மணியன் தர்மலிங்கம்.



வேறு எப்பெயரும் முன்மொழியப் படாததால் சீனியே தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளான் என ஆசிரியர் அறிவித்தார்.


சீனியின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. 'நான் இப்பள்ளியில் ஐந்து ஆண்டுகளாகப் படிக்கிறேன். ஆனால் எப்பதவியும் இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை. பார்க்கப் போனால், இவ்வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் இந்த ஐந்து ஆண்டுகளில் எப்போதேனும் ஏதாவது ஒரு பதவியில் இருந்து வந்துள்ளனர். ஆனால், எப்பதவியும் வகிக்காதவன் நான் ஒருவன்தான். இப்போதுதான் முதன்முதலாவதாக இப்பொறுப்பு வந்துள்ளது. இப்பதவி யாரால் வந்தது? ஆம், பரத்தின் முயற்சியால் அல்லவா வந்தது! பரத்துக்குஎத்துணை உயர்ந்த உள்ளம்!' இவ்வாறு எண்ணிய சீனி உள்ளத்தால் அவனுக்கு நன்றி கூறினான்.


பரத் சீனியைப் பார்த்தான். அவன் முகத்தில் கடுகடுப்பு மறைந்தது. பரத்தைப் பார்த்துப் புன்னகை செய்தான். மறைவாய் தன் வலது கையை நீட்டி பரத்தின் வலது கையைப் பற்றிக் கொண்டான்.

சீனியின் உள்ளத்தில் அன்புப் பயிர் இளந்தளிராய் முளைவிட்டு எழுந்தது. அது பரத்தையும் அவன் போன்ற எல்லா மாணவர்களையும் நோக்கி வளர்ந்தது.


தேர்தலை ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொண்ட வரலாற்றாசிரியர் பாடத்தைத் தொடர்ந்தார்: ''நம் பாரத நாடு அண்டை நாடுகளுடன் எப்போதும் நல்லுறவு கொள்ளவே விரும்புகிறது. 1962—ல் சீனா நம்மைத் தாக்கியது. லடாக், நேபா ஆகிய பகுதிகளில் ஆக்கிரமிப்புச் செய்து கொண்டது. நாம் நமது போர்த்திறமையினால், பகைவனை சமாதானத்தை நாடி வருமாறு செய்துள்ளோம். பகைவன் என்றும் பாராமல், ஐக்கிய நாட்டுச் சபையின் பொதுக் குழுவில் சீனாவுக்கு இடங்கொடுக்கப்பட வேண்டுமென வாதாடி வெற்றியும் பெற்றுள்ளோம்....'' ஆசிரியரின் உரை நீண்டு கொண்டிருந்தது.

மாணவர்களில் பலர் பரத்தையும் சீனியையும் பார்த்துப் புன்னகை செய்து கொண்டனர்.




மொகலாயரை எதிர்த்துப் போராடிய ராஜபுத்திரர்கள் அவர்களைச் சமாளிக்க முடியாமல்....
செஞ்சிக் கோட்டைச் சிங்கம்
கதை: ஆனந்தி
படம்: விநு
தெற்கு நோக்கி வெகுதூரம் வந்து விட்டோம்; குதிரைகள் களைத்து விட்டன.
நாலு புறமும் பாதுகாப்பான மலைகள், பூமியை வளப்படுத்தும் நதி...
இங்கேயே தங்கலாம்...
அப்போது ஆடு மேய்த்தபடி ஒரு முதியவர் வர...
ஐயா, இது என்ன இடம்?
செஞ்சி என்று இந்தப் பகுதிக்குப் பெயர்...
உடன் வந்திருந்த மொழிபெயர்ப்பாளர் துணையுடன்....
நாலு குன்றுகள் இயற்கை அரணாக உள்ளன.
கோலகிரி, கிருஷ்ணகிரி, ராஜகிரி, ரத்னகிரி...



இங்கும் இதற்கு அப்பாலும் மூன்று ஆறுகள் பாயும் வளமான பிரதேசம் என்கிறீர்கள்...
பாலாறு, பெண்ணை, சங்கராபரணி என்று அவற்றுக்குப் பெயர்...
வட்டார மக்கள் திரண்டனர்.
ராஜபுத்திரர்களாம்; போர்க்கலையில் வல்லவர்களாம்!
அந்நியரை எதிர்த்துத் தாய் நாட்டின் மானம் காக்கத் தயங்காதவர்கள்!
செஞ்சி நகரை அடைந்தனர்.
நம் இளைஞர்களுக்குப் போர்ப் பயிற்சி அளித்து நல்ல வீரர்களாக உருவாக்குவார்கள்; வரவேற்போம்...
ஊர்ச்சபை கூடி...
நமக்கும் பாதுகாப்பு
அளிக்க யாருமில்லை. வந்திருப்பவர்கள் சுத்த வீரர்கள். ராஜ குலத்தவர்கள்.
அவர்களை ஏற்போம்!....
ஏற்போம்!...
செஞ்சிக்கு வந்து குடியேறிய ராஜபுத்திரர்கள், நன்றி மறவாமல் கருணையோடும் நீதி தவறாமலும் ஆண்டார்கள். அவர்கள் வழித்தோன்றியவன் சர்ப்பசிங்.
அப்பா! உங்களுக்கு ஏன் பாம்பு என்று பெயர் வைத்தார்கள்?


ஹஹ்ஹஹா! மகனே! தமிழனுக்கு எதையும் தமிழ்ப்படுத்திப் பார்ப்பதில் ஆசை! ஸ்வரூப்சிங் என்பதை சர்ப்பசிங் ஆக்கி விட்டார்கள்!
அதாவது பிறக்கும் போதே நீங்கள் அழகாயிருந்தீர்கள். நற்குணங்களையும் வளர்த்துக் கொண்டீர்கள்...
ஆமாம், உன்னைப் போலவேதான்!
நான் உங்களைப் போல் வீரனாகவும் விளங்கப் போகிறேன் அப்பா!
வீரத்துடன் கருணையும் வேண்டும்....
மகாராஜா! இந்த வருஷம் விளைச்சல் சரியில்லே; உங்களுக்கே தெரியும்...
இந்த வருஷம் வரி செலுத்த வேண்டாம்... மழைக்குப் பிரார்த்திப்போம்...
சர்ப்பசிங் வாழ்க! இளவரசர் தேசிங்கு வாழ்க!
மகனே! 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது தமிழ்ப் பழமொழி.
அப்பா! நீங்கள் சொன்னது சரிதான்! தேஜ்சிங் என்ற என் பெயரை தேசிங்கு ஆக்கிவிட்டார்களே!
அப்பா! இந்தக் கோயில் ரொம்பப் புராதனமானது என்று கூறுகிறார்களே!


தேசிங்கு! இப்படி உட்கார்ந்து கொள்! இந்தக் கோவிலின் கதையைக் கூறுகிறேன். ரொம்பக் காலம் முன் நமது முன்னோர்களான ராஜ புத்திரர்கள் இங்கு வந்தது போல, அதற்குப் பலகாலம் முன் யாதவ குலத்தவர் வந்தனர்...
பாசறை அமைத்துத் தங்கினர்....
நல்ல வேளை மகாராஜா தண்டு இறக்கினார்; கால்கள் கெஞ்சுகின்றன....
மகாராஜாவும் ராணியும் இளைப்பாற, இருவருக்கும் ஒரே கனவு!
நான் இந்த மலைத் தெய்வமான கமலக் கண்ணி. குன்றின் மேல் என் கோயிலுக்குப் பின்னால் புதையல் இருக்கிறது!
கோயிலுக்குப் பின்னால் ஆலமரத்தடியில் தோண்ட...
என்ன அதிசயம்!
கனவு உண்மையாயிற்று! இதைக் கொண்டு ஒரு நகரை நிர்மாணிப்பேன்!
தேசிங்குக்குக் கதை கூறி முடித்தான் சர்ப்பசிங்.
கிருஷ்ணக் கோன் என்ற அந்த யாதவ குல மன்னன், செஞ்சி நகரை அமைத்து அரசாண்டான். அந்தக் குலம் சந்ததி இல்லாது போன சமயம் ராஜபுத்திரர்களாகிய நமது முன்னோர்கள் இங்கு வந்து சேர்ந்தார்கள்!



ஒரு இளவரசன் படிக்க வேண்டிய நூல்களையெல்லாம் தேசிங்கு படித்தான்...
திருக்குறளைத் திரும்பத் திரும்பப் படி! இறைவனை இதயத்தால் வணங்கு!
சகல கலாவல்லவனாக வளர்ந்தான்.....
சபாஷ்!
தந்தையும் மகனும் செஞ்சிக் கோட்டையைப் பலப்படுத்தினார்கள்...
போர்க் கலையுடன் மக்களை மகிழ்விக்கும் கிராமக் கலைகளையும் வளர்த்து வருவோம்!
தில்லியிலிருந்து ஷா ஆலம் சக்கரவர்த்தி தூது அனுப்பினார்.
மாமன்னர் நடத்தும் வீர விளையாட்டுக்களில் கலந்து கொள்ள உங்களுக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார்.
அழைப்பு சபையில் படிக்கப் பட்டது...
என் குதிரையை அடக்கியவருக்கு பதினாறு பாரம் பொன், பரிசு அளிக்கப்படும்!


சர்ப்பசிங் மனைவி, மகனிடம் விடை பெற்றான்...
அவ்வளவு தூரம் நீங்கள் போய்த்தான் ஆக வேண்டுமா?
சக்கரவர்த்தி அழைக்கும் போது போகாமலிருப்பது சரியல்ல என்பதோடு என் வீரத்துக்கு இழுக்கு... கவலைப் படாதே!....
எனக்கு ஒன்றும் நேராது; அப்படியே ஏதாவது ஆனாலும் தேசிங்கு இருக்கிறான்... எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வான்!
தில்லி சென்ற பிறகுதான் ஷா ஆலம்மின் வஞ்சனை புரிந்தது....
பஞ்ச கல்யாணி குதிரையை அடக்கினால் பதினாறு பாரம் பொன், பரிசு... அடக்கா விட்டால் பதினாறு ஆண்டு சிறை வாசம்!
கூடியிருந்த சிற்றரசர்கள் திகைத்தனர்.
இது எங்கள் ராஜ்யங்களைப் பிடுங்கிக் கொள்ள நடக்கும் சூழ்ச்சி!
ஹஹஹ்ஹ ஹா! கோழைகள்!


சில சிற்றரசர்கள் முயன்று பார்த்துத் தோற்றனர்...
பலர் முயற்சி மேற்கொள்ளாமலே பின் வாங்கினர்.
தோல்வியை ஒப்புக் கொள்ளுகிறோம்... ... ஊர் திரும்புகிறோம்..
ஹஹஹா! குதிரை ஏறத் தெரியாதவர்கள் நாட்டை எங்கே ஆளப் போகிறீர்கள்...!
இவர்கள் எல்லாரையும் சிறையில் தள்ளுங்கள்!
முன் வைத்த காலை பின் வைக்க விரும்பாத சர்ப்பசிங்...
நான் முயன்று பார்க்கிறேன்! ஜெய் துர்க்கா மாதா!
சொரூப்சிங்! நீ ஒருவனாவது எனக்கு ஏமாற்றமளிக்காமலிரு!
ஆனால் ஏறுகிற கணத்தில் குதிரை முன் கால்களை உயர்த்த...



ஐந்தாறு ஆண்டுகள் சென்றன...
அம்மா, அப்பா எப்போ திரும்புவார்...?
தேசிங்கு! டில்லி பாதுஷா அப்பாவையும் வேறு சிற்றரசர்களையும் வஞ்சித்து விட்டார்...
...நடந்த உண்மைகளைக் கூறினள் தாய்.
இதையெல்லாம் சொல்ல, நீ வாலிப வயதை அடையக் காத்திருந்தேன்.
வருந்தாதீர்கள் அம்மா! எனக்கு விடை கொடுங்கள்!
நான் டில்லி சென்று அந்தக் குதிரையை அடக்கி அப்பாவை விடுவித்து அழைத்து வருவேன்!
தனது ஆப்த நண்பன் மகமத்கானுடன் சேர்ந்து பயணப்பட்டான் தேசிங்கு.
டில்லியில் சக்கரவர்த்தியின் தர்பாரில்....
ஸலாமையா! ஸலாம்! என் தந்தையை விடுவித்து அழைத்துப் போக வந்திருக்கிறேன்!
தேஜ்சிங் மண்டியிட்டுக் கெஞ்சிக் கேட்டால் ஸ்வரூப்சிங்கை விடுதலை செய்கிறேன்!


தேசிங்கு கம்பீரமாக...
என் தந்தையை யாசித்துப் பெற நான் வரவில்லை! பஞ்ச கல்யாணி குதிரையை அடக்கிவிட்டு அவரை அழைத்துச் செல்வேன்!
மைதானத்தில்......
ஆஹா! தேசிங்கு! இது தேவ லோகப் புரவி போலல்லவா இருக்கிறது!
மகமதுகான்! நீ அருகிலிருந் தால் எதையும் சாதிப்பேன்!
ஷா ஆலம் சிறுவனுக்கு இரங்கி....
தேஜ்சிங்! மாபெரும் வீரர்களால் முடியாத காரியத்தில் இறங்கப் போகிறாயா? நன்கு யோசி!
என்ன நடக்கிறது என்பதையே குதிரை உணர்வதற்குமுன், அதன் மீது தாவி ஏறினான் தேசிங்கு!
சபாஷ்! மின்னல் வேகம்!
குதிரை துள்ளியது.
பூகம்பத்தைச் சமாளிக்கிறான் தேசிங்கு! வாஹ்ரே வா!




இடிமுழக்கம் போல் கனைத்து, முன் கால்களை உயர்த்தியது குதிரை....
பூமி அதிர ஓடியது பஞ்சகல்யாணி...
தேசிங்கு! விடாதே! இழுத்துப்பிடி! இனி இடத்தொடங்கும்! ஜாக்கிரதை!
அச்சா! புயல்வேகத்தைச் சமாளிக்கிறான் தேசிங்கு!
வெகுநேரம் அடம் பண்ணிய குதிரை அடங்கியது. உடல் வியர்க்க, நுரை தள்ள, நின்றது.
வீராதி வீரன்! சூராதி சூரன்! உன் தந்தையை விடுதலை செய்வதுடன், பஞ்சகல்யாணியை உனக்கே பரிசளிக்கிறேன்!
தந்தையும் மகனும் இணைந்தனர்.
மகனே! உன்னால் இன்று நான் பெருமை அடைந்தேன்!
செஞ்சிக் கோட்டையில் மாபெரும் வரவேற்பு....


சில காலம் சென்றது...
அரசே! தங்கள் மகன் தேசிங்கின் வீரப் புகழைக் கேட்டு, எங்கள் ஜாகீர்தார் தம் மகள் பத்மினியை அவருக்கு மணம் செய்து கொடுக்க விரும்புகிறார்!
விவாகம் கோலாகலமாய் நடந்தது...
கணவனும் மனைவியும் தனித்திருந்த சமயம்...
பத்மினி! உனக்கு நான் ஏதாவது பரிசு அளிக்க விரும்புகிறேன்... என்ன வேண்டுமோ கேள்!
உங்கள் அன்பு மட்டுமே போதும்.
.... ஆனால்...
ஆனால்...?
ரங்கநாதரைப் பூஜிக்க விரும்புகிறேன்.
காக்கும் கடவுளுக்கு உடனே கோயில் கட்ட ஏற்பாடு செய்கிறேன்!
மகமத்கானும் தேசிங்கும் இணைபிரியாதிருந்தனர். பாட்டாளி மக்களை ஜாகீர்தார்களின் கொடுமையிலிருந்து விடுவித்தனர்.
ராசா! நீ நல்லா இருக்கணும்!


ஜாகீர்தாரிகளுக்கு நீங்கள் ஆறில் ஒரு பங்கு செலுத்தினால் போதும்! அதற்கு மேல் கேட்டால் 'தேசிங்கைக் கேட்டு வாங்கிக்கொள்' என்று சொல்லுங்கள்!
எங்க வயத்திலெ பாலெ ஊத்தினீங்க!
மகமத்கான் என்ற பெயரும் மருவி மோவுத்துக்காரன் ஆயிற்று!
மோவுத்துக்காரனும் தேசிங்கு ராஜனும் அர்ச்சுனனும் கிருஷ்ணனும் போல!
முஸ்லிமுக்கும் இந்துவுக்கும் இடையில் எத்தனை ஒற்றுமை!
ஆர்க்காடு நவாபுக்கு டில்லி சக்கரவர்த்தியிடமிருந்து செய்தி வந்தது....
செஞ்சி ராஜன் புகழ் அதிகமாகி வருகிறது.. ..ஜாக்கிரதை!
தூண்டிவிடப்பட்ட நவாபுக்குக் கோபம் தலைக்கேற.....
கணக்குப் பிள்ளை! எல்லாப் பாளையக்காரர்களும் கப்பம் கட்டுகிறார்கள், தேசிங்கு ராஜன் தவிர. உடனே காரணம் கேட்டுவா!
கணக்குப் பிள்ளை நவாபின் கட்டளையை நிறைவேற்ற...
இந்தத் தேசிங்கு ஆண்டவனுக்குத்தான் கப்பம் செலுத்துவான்; அந்நியருக்கு அல்ல!




தேசிங்கு ராஜன் கப்பம் கட்டாததால் கோப மடைந்த நவாப்....
தோன்றமல்லன்! செஞ்சி மீது படையெடுத்துப் போ!
மனைவி விருப்பப்படி தேசிங்கு, ரங்கநாதர் கோயில் கட்டி முடித்திருந்தான்....
நவாபின் சேனை படையெடுத்து வருகிறது!
தேசிங்கு கலங்கவில்லை....
எதற்குப் பரபரப்படைந்து கூச்சலிடுகிறீர்கள்? பூஜையை முடித்து விட்டு வந்து யுத்தம் செய்வேன்!
நண்பனுடன் ஆலோசித்தான் தேசிங்கு....
முகமத்கான்! நமது படைகளை இரண்டாகப் பிரிப்போம்! நாம் இருவரும் தலைமை தாங்கி நவாப் படைகளை இருபக்கங்களில் தாக்குவோம்!
பெரிய யுத்தம் நடந்தது. நவாப் படைகள் முறியடிக்கப்பட்டுத் தோற்றோடின....



போரில் மகமத் கானுக்குப் பலத்த அடிபட்டிருந்தது.
நண்பனே! உனக்கு ஓய்வு தேவை. மேலும் உன் தந்தை உனக்குத் திருமணம் நிச்சயித்திருக்கிறார். ஊருக்குப் போய் வா!
ஆர்க்காட்டு நவாபிடம் சுபங்கி துரை வந்தான்...
இது மகமத் கான் இல்லாத சமயம். உத்தரவு கொடுங்கள், தேசிங்கை மண்ணைக் கவ்வச் செய்கிறேன்!
அச்சா!
தேவனூரைக் கொள்ளையடித்துத் தீ வைத்தான் சுபங்கி துரை...
ஹஹ்ஹஹா! தேசிங்கு உங்களைக் காப்பாற்று வானா?
ஆ!
ஐயோ!
நாட்டையும் மக்களையும் காக்கப் புறப்பட்டான் தேசிங்கு...
அன்பே! சகுனம் சரியில்லை...
அசடே! சண்டைக்கு அஞ்சாதவன் சகுனத்துக்கா அஞ்சுவான்?
இதற்கிடையில் மகமத் கான்...
தேசிங்கு ஆளை அனுப்பியிருக்கிறான்... நாட்டுக்கு ஆபத்து! நான் உடனே கிளம்புகிறேன்!
கல்யாணம்?



சண்டையில் ஜெயித்து வந்தால் கல்யாண சொர்க்கம்; மாண்டு மடிந்தால் வீர சொர்க்கம்!
தேசிங்குடன் சேர்ந்து கொண்டான் மகமது கான்.
கல்யாணத்தை நிறுத்தி உன்னை வரச் செய்து விட்டேனே!
நவாப்பைக் கொன்ற பின் ஆர்க்காட்டி -லேயே நடக்கும் கல்யாணம்
தேசிங்கு குதிரை ஏறப் போகும் போது மீண்டும் சகுனத் தடை...
நண்பனே! ஏன் கண்ணீர் விடுகிறாய்? பயப்படாதே! நீ இறந்து போனால் உன் பக்கத்தில் நானும் உயிரை விடுவேன்!
உக்கிரமாகப் போர் புரிந்தான் மகமது கான்... பீரங்கிகளுக்கு அஞ்சாமல் பாய்ந்தது நீலவேணி!
சுபங்கிதுரையின் கையை வெட்டி வீழ்த்தினான் மகமதுகான்!
செஞ்சிக் கோட்டையைப் பிடிப்பதாகச் சபதம் செய்தது இந்தக் கரம் தானே?



அன்றையப் போர் முடிந்து, யுத்த களத்திலிருந்து திரும்பிய மகமத் கானைப் புதரில் ஒளிந்திருந்த தாவுத்கான்...
ஒழிந்தான்!
ஆ! அம்மா!
நீலவேணி தனியே திரும்பிவர, தேசிங்கு ராஜன்....
ஆருயிர் நண்பனை இழந்தேன்! மறைந்திருந்து கொன்ற நீசர்களைப் பழிக்குப் பழி வாங்குவேன்!
மீண்டும் நடந்த யுத்தத்தில் தேசிங்கின் பாராசாரிக் குதிரை, கால்கள் வெட்டுண்டு வீழ்ந்தது...
ஆ! இரு நண்பர்களையும் இழந்தேன்!
ஆர்க்காடு நவாப் ஓடி ஒளிய, தேசிங்கு, வாளைச் சுழற்றி மேலே எறிந்து விட்டு, அது தன் கழுத்தை வெட்ட, அண்ணந்தான்.
பழி வாங்க முடியாத போது நான் வாழ்ந்து என்ன பயன்?
சுதந்திர தாகம் கொண்ட மாவீரன் தேஜ்சிங், சரித்திர புருஷன். அவனைச் சுற்றிக் கர்ண பரம்பரைக் கதைகளும் நாடோடிப் பாடல்களும் எழுந்தன. இந்தச் சித்திரக் கதை நாடோடிப் பாடல்களையும் அடிப்படையாகக் கொண்டது.




லியூ வம்சத்தின் ஆறுவது பேரரசன். அவன் பீகிங் நகரைத் தலைநகராகக் கொண்டு சீன நாட்டை ஆண்டு வந்தான். அவன் மிகவும் நல்லவன். பொதுமக்களின் நலனையே தன் ஆட்சியின் குறிக்கோளாகக் கொண்டிருந்தான். அவனுக்காக மக்கள் தங்கள் உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்தனர். அவனுக்கு வயதாகியது. உடல் நலம் சீர்குலைந்தது. படுத்த படுக்கை ஆனான். அதைப் பயன்படுத்தி ஒரு சில கயவர்கள் நாட்டில் கிளர்ச்சிகளைத் தூண்டினர். அவர்கள் அரசாட்சியைக் கைப்பற்ற முயல்வதாகப் பேரரசனுக்குச் செய்தி கிடைத்தது.

பேரரசனுக்கு ஒரே ஒரு பிள்ளை. வயது பதினான்கு. ஒருநாள் பேரரசன் தன் பிள்ளையைக் கூப்பிட்டு அனுப்பினான். "மகனே! நாளுக்கு நாள் என் உடல்நலம் குறைந்து வருகிறது. நீண்ட நாட்கள் இந்த அரியணையில் இருப்பேன் என்று சொல்ல முடியாது. என்னுடைய காலத்திற்குப் பிறகு உனக்குப் பல ஆபத்துகள் வரலாம். நீ சின்னஞ்சிறுவன். ஆட்சியைப்பிடிக்கவும், அரசபீடத்தில் அமரவும் சிலர் சதித் திட்டங்களைத் தீட்டுவதாக அறிகிறேன். ஆகவே, நீ பீகிங்கை விட்டுத் தலைமறைவாகப் போய்விடு. நான்யாங் நகரில் ஒரு விவசாயி இருக்கிறான். சியாங் என்று பெயர். நான் அவனுக்கு ஏராளமான உதவிகளைச் செய்துள்ளேன். அவன் நமது குடும்ப நண்பன். நீ நேராக அவனிடம் போ. அவன் உன்னை வரவேற்பான். உதவி செய்வான். உனக்குச் சாதகமான நாட்கள் வருகின்ற வரையில் யார் கண்ணிலும் படாமல் உன்னை மறைத்து வைக்கவும் செய்வான்," என்று சொன்னான்.

அதற்குப் பிறகு அந்த ஆறுவது பேரரசன் நீண்ட நாட்கள் உயிரோடு இருக்கவில்லை. மாண்டான். அவன் சொன்னது போலவே இளவரசனை ஆபத்துக்கள் சூழ்ந்தன. அவனைச் சிறைப் பிடிக்கவும், கொலை செய்யவும் சிலர் தீவிரமாக முயன்றனர்.

வாங் மாங் என்பவன் முதல் மந்திரி. பேரரசனுடைய உறவினன். தானே பேரரசனாக வேண்டும் என்பது அவனுடைய பேராசை. அவன் ஒரு கொடியவன். பழி பாவங்களுக்கு அஞ்சாதவன். பேரரசனுடைய மறைவையும், இளவரசனுடைய இளம் வயதையும் அவன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். தனக்குப் பொது மக்களின் ஆதரவு இருக்கிறது என்று அவன் காட்டிக் கொள்ள விரும்பினான். ஆகவே, குடிசைப்பகுதியிலிருந்து சில குழந்தைகளைக் கூப்பிட்டான். "வாங்மாங் மன்னர் வாழ்க! வாங்மாங் மன்னர்



<u>குட்டு வெளிப்பட்டது</u>

"தினமும் காலண்டர் தாளைக் கிழித்து அதில் பல்பொடியை வைத்துக் கொண்டு பல் துலக்குவேன்!"

"நாலு தேதி கிழிக்காம இருக்கே. நீ பல் துலக்கி நாலு நாள் ஆச்சா?"

— மணியன் தர்மலிங்கம்.

வாழ்க!'' என்று முழங்கிக் கொண்டே நீங்கள் ஊர்வலம் வாருங்கள்!'' என்று சொன்னான். அவர்களுக்குப் பல பரிசுகளையும் அளித்தான். குழந்தைகள் அவ்வாறு கூறிக் கொண்டே தலைநகரைச் சுற்றி வந்தனர்.

முதல் மந்திரியாக இருந்த வாங் மாங் அதிகாரிகளைச் சிறையிலிட்டான். அரியணையைக்கைப்பற்றினான். தானே அடுத்த பேரரசன் என்று சொல்லி அரச விளம்பரம் கொடுத்தான். எதிர்ப்புத் தெரிவித்தவர்களை இரக்கம் இல்லாமல் கொன்றான். பலருக்குக் கடுமையான தண்டனைகளை விதித்தான்.

இளவரசன் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வடதிசையை நோக்கிப் பயணம் செய்தான். அவன் தனியாகவே போனான். அவனுக்குச் சரியான வழி தெரியவில்லை. இருந்தாலும், நடந்து கொண்டே இருந்தான். இரவு வந்தது. இருள் சூழ்ந்தது. சாலையை அடுத்து ஒரு குன்று. குன்றின் மேல் ஒரு பாறை. இளவரசன் அந்தப் பாறை மேல் ஏறி அமர்ந்தான். நிமிர்ந்து உட்கார்ந்த நிலையிலேயே உறங்கினான்.

'நான்யாங்' நகரத்திலிருந்த சியாங்கின் மகன், அன்றிரவு ஒரு கனவு கண்டான். நகர எல்லையில் இருந்த பாறை மேல் ஒரு சிறுவன் அமர்ந்திருப்பதைப் போல அவன் கனவு கண்டான். மறு நாள் காலையில் எழுந்ததும், தான் கண்ட விநோதமான கனவைப் பற்றி அவன் தன் அப்பாவிடம் கூறினான்.

"மகனே! நீ கனவில் கண்டவன் லியூ வம்சத்து இளவரசன். அவன் அரண்மனையைத் துறந்து ஓடி வருகிறான். அவன் இப்போது எங்கே இருக்கிறான் என்று எனக்குத் தெரியாது. நீ கனவில் கண்ட பாறை உனக்குத் தெரியுமானால், உடனே போய் இளவரசனை அழைத்து வா. பீகிங் சிம்மாசனத்திற்குச் சட்டப்படி உரியவன் அவன்தான். ஆனால் இதைப் பற்றி யாரிடமும் பேசாதே. கவனமாக இரு!'' என்று அப்பா எச்சரிக்கை செய்தார்.

சியாங்கின் மகன் கனவில் கண்ட குன்றுக்குச் சென்றான். அங்கே பாறை மீது கம்பீரமாக உட்கார்ந்திருந்த இளவரசனைக் கண்டான். அவனுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, அன்பாக அவனைத் தன் இல்லத்திற்கு அழைத்துப் போனான்.

ஓர் அரசனுக்குரிய எல்லா மரியாதைகளுடன் சியாங் அவனை வரவேற்று உபசரித்தான். இளவரசனைத் தன் வீட்டிலேயே தங்குமாறு வேண்டினான். அதற்குரிய வசதிகளையும் செய்தான். ஆனால், சியாங்கோ, அவனது மகனோ இளவரசனைப் பற்றி ஒரு வார்த்தை கூட வெளியே பேசவில்லை. அந்த விஷயத்தை ஒரு பெரிய ரகசியமாகப் போற்றிப் பாதுகாத்தனர். ஆகவே, இளவரசனைப் பற்றிய தகவல்கள் யாருக்கும் தெரியாமலே இருந்தன.

தனக்கு உரிமை இல்லாத அரசைத் தகாத வழியில் பெற்றதும் அல்லாமல் வாங் மாங் இளவரசனுக்கு எதிராக விளம்பரங்களும் செய்தான்.

"இளவரசன் அரண்மனையிலிருந்து ஓடிவிட்டான். புதிய அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறான். அவன் மீது குற்றச்சாட்டுக்கள் பல இருக்கின்றன. உயிரோடு அவனைப் பிடித்துத் தருபவர்களுக்கு நூறு கிராமங்கள் பரிசாக அளிக்கப்படும். இளவரசனுக்கு உதவி செய்பவர்களுக்குத் தண்டனை கிடைக்கும். இது பேரரசன் ஆணை,'' என்று புதிய

அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது.

பேர்ரசனுடைய அறிவிப்பு நாடு முழுவதும் எழுதப்பட்டது. அது நான்யாங் நகரத்திலும் எழுதப்பட்டது. மறைந்துள்ள இளவரசனைக் கண்டு பிடிக்க அந்தக் கொடுங்கோல் மன்னன் இன்னொரு வழியையும் கையாண்டான்.

நாட்டின் எல்லைப்புறங்களிலும், நகரின் நாற்சந்தி மூலைகளிலும் மூங்கில் கம்பங்கள் நடப்பட்டன. ஒவ்வொரு கம்பத்தின் மேலும் ஒரு முரசு கட்டப்பட்டது. முரசுகள் பொதுவாகத் தோலால் செய்யப்பட்டிருக்கும். ஆனால், அந்த முரசுகள் புது மாதிரி ஆனவை. தோலுக்குப் பதிலாக மெல்லிய துணியால் அவை மூடப்பட்டிருந்தன. ஓர் உண்மையான பேரரசனோ அல்லது அவனுடைய உண்மையான வாரிசுகளோதான் அத்தகைய புதிய முரசுகளை முழக்கி ஒலி எழுப்ப முடியும். அவர்களுக்குத் தான் அந்தக் கலை தெரியும். மற்றவர்களால் அவ்வாறு செய்ய முடியாது.

ஒவ்வொரு முரசுக் கம்பத்தின் அருகிலும் ஒரு வீரன் நின்று கொண்டிருந்தான். சாலையில் போகும் பயணிகளை நிறுத்தி, அந்த முரசைக் கொட்டச் செய்வதே அவனுடைய வேலை.

“இளவரசனைப் பிடித்துத் தருபவர்களுக்குப் பரிசு,” என்ற விளம்பரப் பலகையும் அந்தக் கம்பத்தில் காணப்பட்டது. அத்தகைய ஏற்பாடுகள் மூலம் இளவரசனைக் கைது செய்து விடலாம் என்று கொடுங்கோல் மன்னன் நம்பினான்.

நாடு முழுவதும் அந்தச் சாலை வீரர்கள் தங்கள் பணிகளை ஒழுங்காக ஆற்றினர். மக்களும் முரசுகளைத் தட்டிச் சென்றனர். ஆனால் ஒருமுறை கூட முரசுகளிலிருந்து ஒலி எழவில்லை.

நான்யாங் நகரின் நாற்சந்தி மூலையிலும் ஒரு கம்பம் நடப்பட்டது. அதன் மேல் வழக்கம் போல விளம்பரம், துணி, முரசு — ஆகியவை காட்சி அளித்தன. அருகில் ஒரு வீரன் காவல் காத்தான்.

ஒருநாள் ஒரு சிறுவன் தனியாக வந்தான். அந்த முரசைக் கடந்து போனான். “டேய், தம்பி! இந்த முரசைத் தட்டிவிட்டுப் போ!” வீரன் அதட்டினான்.

“முடியாது!” என்று சிறுவன் தொடர்ந்துநடந்தான். வீரன் அவனைப் பிடித்து நிறுத்தினான்.

“நில்! நீ ஏன் மறுக்கிறாய்? இது பேரரசன் கட்டளை!” என்று வீரன் மிரட்டினான்.

“நான் இந்த முரசைத் தட்டினால், உலகில் பல பயங்கரங்கள் நிகழும்!” என்றான் சிறுவன்.

“என்ன பயங்கரங்கள்?”

“நான் இதை ஒரு முறை தட்டினால், இந்த நாட்டிலுள்ள மற்ற முரசுகள் எல்லாம் ஒலி எழுப்பும். நான் இதை இரண்டு முறைகள் தட்டினால், இந்த நாட்டில் உள்ள நதிகள் எல்லாம் பொங்கி எழும். நான் இதை மூன்று முறைகள் தட்டினால், ஆகாயமும்,





பூமியும் இருண்டுவிடும்,'' என்று சொல்லிக் கொண்டே அந்தச் சிறுவன் ''பட, பட, பட'' வென மூன்று முறைகள் அந்த முரசைத் தட்டினான்.

உடனே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. நீல வானைக் கரிய மேகங்கள் போர்த்தி மூடின. திடீரென ஒளி மறைந்தது. இருட்கடலில் பூமி பல மணி நேரங்கள் மூழ்கியது.

அந்த முரசைத் தட்டிய சிறுவன் வேறு யாரும் அல்ல. அரண்மனையை விட்டு ஓடி வந்த லியூ வம்சத்து இளவரசனே தான்! வீரர்கள் இளவரசன் மீது பாய்வதற்கு முன்பே, இளவரசன் இருளில் பாய்ந்து மறைந்தான். நொடிப் பொழுதில் நான்யாங் நகர எல்லையைத் தாண்டி இருளில் ஓடினான்.

ஒரு நாள் கழிந்தது.

இளவரசன் அடுத்த ஊரை அடைந்தான். அங்கு வயலை உழுது கொண்டிருந்த ஓர் உழவனைக் கண்டான். உழவன் தனித்துவேலை செய்துகொண்டிருந்தான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் வேறு யாருமே காணைப்படவில்லை.

இளவரசன் உழவனை நோக்கிக் கம்பீரமாக நடந்தான். ''நான் லியூ வம்சத்து இளவரசன். கொடுங்கோலன் வாங்மாங் என்னைக் கைது செய்ய விரும்புகிறான். ஒவ்வொரு கம்பத்திலும் அந்த விளம்பரம் எழுதப்பட்டுள்ளது. ஆயுதம் ஏந்திய அவனுடைய வீரர்கள் என்னைத் துரத்தி வருகின்றனர். நான் மறைந்து கொள்ளுவதற்குப் பாதுகாப்பாக ஓர் இடம் வேண்டும். உன்னால் உதவி செய்ய முடியுமா?'' என்று உழவனிடம் கேட்டான்.

உழவன் வாயைத்திறக்கவேஇல்லை. ஆனால், படுவேகமாக வயலில் ஒரு குழியைத் தோண்டினான். குழி மூன்றடி ஆழமாகவும், ஒருமனிதன் படுக்கக் கூடிய அளவு நீளமாகவும் இருந்தது. உழவன் வாய் திறந்து பேசாவிட்டாலும், தான் என்ன செய்ய வேண்டும் என்பதை இளவரசன் புரிந்து கொண்டான். இளவரசன் தானே அந்தக் குழியில் இறங்கிப் படுத்துக் கொண்

டான்.

உழவன் ஏழு முழு அரிசிகளை எண்ணிப் பொறுக்கி எடுத்தான். அவற்றை இளவரசனின் வாயில் போட்டான். ஒரு நீண்ட மெல்லிய மூங்கில் குச்சியை எடுத்து, இளவரசனுடைய உதடுகளுக்கிடையில் திணித்தான். பிறகு, மண்ணை வாரிப் போட்டு இளவரசனை மூடினான். மூங்கில் குழாயின் வழியாக இளவரசன் மூச்சு விட்டான். மேலும், ஒரு நாளைக்கு ஓர் அரிசி வீதம் சாப்பிட்டான்.

முரசை ஒலிக்கச் செய்த இளவரசனைத் தேடி வீரர்கள் நாடெங்கும் அலைந்தனர். ஆனால், இளவரசனைப் பற்றி ஒரு சின்னத் தகவல் கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, அவர்கள் ஒரு பிரபல ஜோதிடக் கலைஞரிடம் சென்று, இளவரசனைப் பற்றிக் குறி கேட்டனர்.

சோதிடர் கண்களை மூடிக்கொண்டு சிறிது நேரம் மௌனமாகத் தியானம் செய்தார். பிறகு, கண்களைத் திறந்து பேசத் தொடங்கினார்.

''ஓடிப் போன இளவரசனை நான் இப்போது என் மனக்கண்ணால் காண்கிறேன். மண்ணுக்கு அடியில் மூன்று அடி ஆழத்தில் அவன் புதையுண்டு கிடக்கிறான். அவனுடைய வாய் மீது பூச்சிகளும், பூரான்களும் ஊர்கின்றன. கண் மீது ஒரு மூங்கில் முளைத்திருக்கிறது. இவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். அது எந்த ஊர் என்றோ, மற்ற விவரங்களோ எனக்குத் தெரியவில்லை,'' என்று சொன்னார்.


சோதிடரின் பேச்சைக் கேட்ட வீரர்கள், ''இளவரசன் இறந்து விட்டான். புதையுண்டு கிடக்கிறான்,'' என்று நம்பினர். அவ்வாறே தங்கள் தலைவனிடமும் கூறினர். வீரர் தலைவன் அந்தச் செய்தியை வாங்மாங் மன்னனிடம் தெரிவித்தான்.

''இளவரசன் இறந்து விட்டான்,'' என்று கேட்டதும், வாங்மாங் மன்னன் சந்தோஷத்தில் ஆழ்ந்தான். தன் பதவிக்கு வரக் கூடிய ஆபத்து நீங்கியது என்று கருதினான். செய்தி கொண்டு வந்த வீரர்களுக்குப் பல பரிசுகளை வழங்கினான். பொதுமக்கள் இளவரசனை மறந்துவிட வேண்டும் என்பதற்காக, நாடு முழுவதும் நட்ட கம்பங்களையும், இளவரசனைப் பற்றிய விளம்பரங்களையும் அகற்றுமாறு ஆணையிட்டான்.

அரசனின் புதிய ஆணை உழவனின் காதுகளுக்கு எட்டியது. உடனே அவன் அந்தக் குழியிலிருந்து இளவரசனை வெளியே எடுத்தான். அடுத்து என்ன செய்யலாம் என்று இளவரசன் உழவனிடம் ஆலோசனை கேட்டான். அதுவரையில் அமைதியாக இருந்த உழவன் வாய்திறந்து பேசலானான். ''இளவரசே! நான் ஓர் ஏழை உழவன். அரசாங்க விஷயங்களெல்லாம் எனக்கு என்ன தெரியும்? நீங்கள் குன்லன் மலைக்குச் செல்லுங்கள். அதன் உச்சியில் ஒரு பெரிய வெள்ளை நட்சத்திரம் இருக்கிறது. அந்த நட்சத்திரத்திடம் ஆலோசனை கேளுங்கள். உங்கள் பாதங்களின் வேகத்தையும், கைக



கூட்டுச் சவாரி



ளின் பலத்தையும், உள்ளத்தின் துணிவையும் மட்டும் நம்பியிருந்தால் போதாது. அந்த நட்சத்திரம் காட்டும் வழியையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!'' என்று பேசினான்.

இளவரசன் குன்லன் மலை மீது ஏறினான். உச்சியில் இருந்த அந்த வெள்ளை நட்சத்திரத்தைப் பார்த்துத் தனக்கு அறிவுரை தருமாறு வேண்டினான். ''மகனே! உனக்கு ஒரு சிறிய படை போதும். அதை அமைத்துக் கொள். பிறகு, தலைநகரை நோக்கி முன்னேறு. வெற்றி உனக்குத்தான்!'' என்று கூறியது.

அவ்வாறே இளவரசன் ஒரு சிறிய படையைத் திரட்டினான். அவனுடைய தலைமையில் அந்தப் படை பீகிங்கை நோக்கி அணிவகுத்துச் சென்றது.

உடனே மக்கள் லியூ வம்சத்து இளவரசனை அடையாளம் தெரிந்து கொண்டனர். தங்களுடைய உண்மையான இளவரசனை மீண்டும் சந்தித்து விட்டோம் என்று அவர்கள் ஆனந்தக் கூத்தாடினர். ''இளவரசன் வாழ்க! இளவரசன் வாழ்க!'' என்று கூக்குரல் இட்டுக் கொண்டே அவர்கள் இளவரசனைப் பின்பற்றி அந்தப் படையில் சேர்ந்து கொண்டனர். ஊர்கள் தோறும், மக்கள் அலை அலையாக வந்து இளவரசனை ஆதரித்தனர். பின்பற்றி நடந்தனர். வீரர்களின் எண்ணிக்கை பெருகியது.

இளவரசனும், படை வீரர்களும் தலைநகரை நெருங்கினர். அரண்மனைக் காவலாளர்கள் இளவரசனின் படையில் சேர்ந்து கொண்டனர். தப்பிச் செல்ல வழி அறியாமல் கொடுங்கோலன் வாங்மாங் தற்கொலை செய்து கொண்டான்.

சட்டப்படி தனக்கு உரிய அரியணையில் லியூ வம்சத்து இளவரசன் பட்டம் சூட்டிக் கொண்டான். நீதியை நிலைநாட்டினான். மக்களுக்குப் பல தொண்டுகளைச் செய்தான். நாட்டுப் பற்று மிகுந்த சியாங்கையும், அந்த உழவனையும் தனக்கு ஆலோசகர்களாக அமர்த்தினான். சியாங்கின் பிள்ளையையும் அவன் மறக்கவில்லை. அவனுக்கும் தகுந்த பதவியை அளித்துக் கௌரவித்தான்.

பழமொழிப் புதிர் விடை:


புதிர்: 11

உரலுக்கு ஒரு பக்கம் இடி
மத்தளத்துக்கு இருபக்கமும் இடி

புதிர்: 12

சிவபூஜையில் கரடி புகுந்தது போல்

ஒன்றும் புரியவில்லை



நான் யூ. கே. ஜி. யிலிருந்து ஒண்ணாம் கிளாஸ் போயிருக்கிறேன். முதல் நாள் பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்கு வந்ததும் யூனிஃபார்மைக் கழற்றிவிட்டு விளையாடச் சென்று விட்டேன். சிறிது நேரத்தில் தூரத்தில் அப்பா வந்து கொண்டிருப்பது தெரிந்தது. கூடவே, என்னை விடக் கொஞ்சம் பெரிய பையன் ஒருவன் அப்பாவின் பெரிய பெட்டியைத் தலைமேல் சுமந்து வந்துகொண்டிருந்தான். நான் ஆர்வத்துடன் வீட்டிற்குள் நுழைந்தேன்.

அவன் தலையிலிருந்த பெட்டியை அவனும் அப்பாவும் சேர்ந்து மிகுந்த சிரமத்துடன் கீழே இறக்கினார்கள். அவனிடம், அப்பா இரண்டு ரூபாய் கொடுத்தார்.

"ஐயா, கூட 50 காசு போட்டுக் கொடுங்கய்யா" என்று அவன் கெஞ்சினான்.

"நீ கேட்ட கூலியைத் தந்துவிட்டேன். கூட எதுக்குக் காசு தருவது?"

ரிசம்பூர் சந்துரு

என்று அப்பா எரிந்து விழுந்தார். அவன் பணிவாகச் சொன்னான். "பெட்டி ரொம்பக் கணமுங்க. கழுத்துக் கடுக்குதுங்க. கூட ஐம்பது காசு கொடுத்தா, ஒரு டீ குடிப்பேனுங்க."

"அதெல்லாம் தர முடியாது. இந்த ரெண்டு ரூபாயிலே டீ குடி. நியாயம்னா நியாயம்தான். நீ கேட்டதை நான் குறைத்துக் கொடுத்திருந்தால் சொல்லு" என்று அப்பா அவனை மிரட்டினார்.

அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

தான் என்ன சொன்னாலும், மேலே ஒரு காசுக் கூடக் கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்ட அவன் மெதுவாக நகர்ந்துவிட்டான். எனக்கு மிகவும் பாவமாக இருந்தது. அப்பா அவனுக்கு ஐம்பது காசு கொடுத்திருந்தால் சந்தோஷமாகப் போயிருப்பானே என்று தோன்றியது.

பிறகு ஒரு மணி நேரம் கழித்து அப்பா என்னைக் கடைத் தெருவிற்கு அழைத்துப் போனார். வாங்க வேண்டிய சாமான்களை வாங்கிவிட்டு, ஒரு நல்ல ஓட்டலுக்கு என்னை அழைத்துப்

போனார். இரண்டு 'டுட்டி ஃப்ரூட்டி' ஐஸ்கிரீம் வரவழைத்து நாங்கள் சாப்பிட்டோம். சர்வர் ஒரு சிறு தட்டிலே பில்லைக் கொண்டு வந்து வைத்தார். பில்லிலே எட்டு ரூபாய் என்று போட்டிருந்தது. பத்து ரூபாய் நோட்டை அப்பா தட்டிலே வைத்தார். பாக்கி இரண்டு ரூபாயை ஒரு தட்டில் வைத்துப் பணிவுடன் அப்பாவிடம் நீட்டினார், சர்வர். அப்பா அலட்சியமாக, ''அதை நீயே வைத்துக் கொள்'' என்று சொல்லி விட்டார். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

வெளியே வந்ததும் அப்பாவிடம் நான் கேட்டேன்.


''என்னப்பா, ரொம்பப் பெரிய பெட்டியை ஒரு பையன் தூக்கிண்டு வந்து கொடுத்துவிட்டு ஒரு ஐம்பது காசு கூடக் கேட்டான். நீங்க தரமாட்டேன்னு சொன்னீங்க. இந்த சர்வர் சின்ன ஐஸ்கிரீமைத் தூக்கிண்டு வந்ததுக்கு, அவன் கேட்காமலேயே இரண்டு ரூபாய் கொடுத்தீங்க. இது எதுக்கு?'' என்றேன்.


''இது 'டிப்ஸ்'. உனக்குச் சொன்னால் புரியாது'' என்று என்னை அடக்கி விட்டு நடந்தார் அப்பா.

ஏன் புரியாது, அம்மாவிடம் கேட்டுப் பார்க்கலாம் என்று நினைத்துக் கொண்டேன்.

வீட்டிற்கு வந்ததும் முதல் காரியமாக நடந்ததை அம்மாவிடம் சொல்லி, ''எனக்குப் புரியாது என்று அப்பா சொல்கிறாரே, 'டிப்ஸ்' என்றால் என்ன அம்மா?'' என்று கேட்டேன்.

''அட, அதுக்குப் பெயர்தான் வறட்டு கௌரவம்'' என்றார் அம்மா. நானும் தலையை, புரிந்து கொண்டது போல் ஆட்டி வைத்தேன். உண்மையிலேயே எனக்குப் புரியவில்லைதான்! 'வறட்டுக் கௌரவம்னா என்ன? யாராவது புரிய வைத்தால் தேவலை!'





புதையல் வீடு

டாக்டர் பூவண்ணன்

8. தாத்தா சொன்ன கதை

ஒரு காலத்தில் விஜயமங்கலத்தின் புகழ் கொங்கு நாட்டின் எல்லையைத் தாண்டித் தமிழகம் எங்கும் பரவியிருந்தது. அதற்குக் காரணம் பெருமாள் கோயில். மற்றக் கோயிலில் இல்லாத ஒரு சிறப்பு இந்தக் கோயிலுக்கு இருந்தது. இது இரட்டைக் கோயில். நிலத்துக்கு மேலே ஒரு கோயில் எந்த அளவு இருந்ததோ அதே அளவு நிலத்துக்குள்ளும் இருந்தது. அதை உட்கோயில் என்றும் நிலவறைக் கோயில் என்றும் குறிப்பிட்டார்கள்.

விஜயமங்கலம் உட்கோயில் பெற்றதாலேயே புகழ்பெற்று விடவில்லை. உட்கோயிலில் ஒரு மண்டபத்தில் திருமாலின் பத்து அவதாரச் சிலைகள் இருந்தன. அவை கற்சிலைகள் அல்ல; பொற்சிலைகள். உயர்ந்த தங்கத்தில் உருவாக்கிய உன்னதச் சிலைகள். சிலைகள் உற்சவமூர்த்திகளைப் போலச் சிறியவையாக இல்லை. ஒவ்வொரு சிலையும் ஓர் ஆள் உயரம் இருந்தது. இப்படிப் பத்துப் பொற்சிலைகள் நிலவறை இருட்டையும் ஒளிமயமாக்கின. ஒவ்வொரு சிலையும் முத்து, பவளம், மரகதம், மாணிக்கம், வைரம் முதலிய விலை மதிப்பற்ற மணிகள் பதித்த மாலைகளும் பிற ஆபரணங்களும் தரித்து, காண்போர் கண்ணைப் பறித்தன. இந்த உட்கோயிலைப் 'பூலோக சொர்க்கம்' என்று மக்கள் கூறினர்.

உட்கோயிலுக்குள் எப்போதும் சென்றுவிட முடியாது. கோயிலில் விழா நடக்கும் நாட்களில் மட்டுமே மக்கள் அங்கு செல்ல முடியும். உட்கோயிலில் இருந்த பத்துப் பொற்சிலைகளாலும் அவற்றின் ஆபரணங்களாலும் விஜயமங்கலம் புகழ் பெற்றது. இக்கோயிலின் பொறுப்பு சோமு தாத்தாவின் குடும்பத்தைச் சார்ந்தது. பல நூற்றாண்டுகளாக அவர் குடும்பத்தினரே உட்கோயிலையும் வெளிக் கோயிலையும் காத்து வந்தனர்.

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு கொங்கு நாடு ஹைதர் அலியின் ஆட்சியில் சிக்கியது. ஒரு சாதாரண போர் வீரன் ஹைதர் அலி மைசூர் சாம்ராஜ்யத்தின் அரசனான பிறகு, அதைப் போல, அரசனாகும் ஆசை அவனுடைய படைத்தலைவர்களில் சிலருக்கும் ஏற்பட்டது. அந்தச் சிலரில் ஒருவன் மகமத்கான். அவனும், "என்னிடம் பணபலம் மட்டும் இருந்தால் போதும்; ஒரு பெரிய படையைத் திரட்டி நானும் ஒரு பேரரசன் ஆகிவிடுவேன்" என்று நினைத்தான். நினைத்-

தவை நெருங்கிய நண்பர்களிடமும் சொல்லி வந்தான். நண்பர்கள் அவன் வேடிக்கை பேசுவதாக நம்பினுர்கள். ஆனுல் மகமத்கான் உண்மையாகவே அப்படி நினைத்தான். அதோடு பெரும்பொருள் கிடைக்க ஏதாவது வழியிருக்கிறதா என்றும் யோசித்து வந்தான்.

அவன் படையில் பணியாற்றிய சாதாரண வீரர்களில் ஒருவன் மாரியப்பன். அவனுக்கு, தான் ஒரு படைத் தலைவன் ஆக வேண்டும் என்று ஆசை. அவன் காதில் மகமத்கானின் மன்னுகும் ஆசையும் அதற்காகப் பெரும்பொருள் தேடும் சேதியும் விழுந்தன. ஒருநாள் மாரியப்பன் மகமத்கானின் அறைக்கு வெளியே காவல் இருக்க நேர்ந்தது. மகமத்கான் தனியே இருக்கும் சந்தர்ப்பம் வந்ததும் மாரியப்பன் அவனைக் கண்டான்.

''படைத் தலைவரே! நீங்கள் பெரும் பொருள் தேடுவதாக அறிந்தேன். அது கிடைக்க நான் வழிகாட்ட முடியும். உங்களுக்குப் பெரும் பொருள் கிடைக்கச் செய்தால் எனக்கு என்ன தருவீர்கள்?'' என்று பேரம் பேசினுன் மாரியப்பன்.

மகமத்கான் அவனை ஏற இறங்கப் பார்த்தான். ''எனக்குத் தேவை எவ்வளவு பொருள் என்று தெரியுமா?'' என்று கேட்டான்.

''பல லட்சம் வராகன் பொன். நான் காட்டப் போகும் செல்வம் நீங்கள் எதிர்பார்ப்பதைப் போலப் பல மடங்கு இருக்கும்,'' என்று மாரியப்பன் சொன்னதும் மகமத்கான் அசந்துவிட்டான். ''மாரி, நீ சொல்லும் அளவு பொன் கிடைத்தால், நீ கேட்டதைக் கொடுக்கிறேன், உனக்கு என்ன வேண்டும் சொல்,'' என்று கேட்டான்.

''என் கோரிக்கை இரண்டு. நீங்கள் உருவாக்கப் போகும் அரசில் என்னை ஒரு படைத்தலைவனுக உயர்த்த வேண்டும். உங்களுக்குக் கிடைக்கும் பொருளில் நூறில் ஒரு



பங்கு தர வேண்டும்''.

மாரியப்பன் கேட்டதும் மகமத்கான் ஒப்புக் கொண்டு, ''சொல்லு! நீ குறிப்பிடும் பொருள் எங்கே இருக்கிறது?'' என்று ஆவலோடு கேட்டான்.

மாரியப்பனின் சொந்த ஊர் விஜயமங்கலம். அவன் பெற்ற தாயைக் காட்டிக் கொடுப்பதைப் போல, விஜயமங்கலத்து உட்கோயிலில் உள்ள பொற்சிலைகளைப் பற்றியும் அவை அணிந்துள்ள ஆபரணங்களைப் பற்றியும் குறிப்பிட்டான்.

''இவன் சொல்வது உண்மையானால் பெரும் பொருள் கிடைக்கும். அந்தப் பொருளின் துணை கொண்டு உருவாக்கும் படையினால் இந்த மைசூரைக் கூட வென்று விடலாம்'' என்று நினைத்தான் மகமத்கான்.

''மாரி, நீ சொன்னது பொய்யாயிருந்தால் உன்னை விஜயமங்கலத்திலேயே கொன்று விடுவேன்'' என்று எச்சரித்து, அவனை எப்போதும் தன் அருகில் இருக்கச் செய்தான் மகமத்கான். ''இந்த விஷயம் பற்றி இனி நீ யாரிடமும் பேசக் கூடாது என்று தடையுத்தரவும் பிறப்பித்தான்.

மாரி சொல்வது உண்மையா?

மைசூரிலிருந்து புறப்படுமுன் இதை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினான் மகமத்கான். மைசூர் படையில் விஜயமங்கலம் ஊரைச் சேர்ந்த வீரர் வேறு யாராவது இருக்கிறாரா என்று விசாரிக்கச் செய்தான். மலைச்சாமி என்று ஒருவன் இருப்பதை அறிந்து அவனை வரவழைத்தான். அவனிடம் ஊரைப் பற்றிக் கேட்டான். பெருமாள் கோயில் உள்ளே இருக்கும் பொற்சிலைகள் பற்றியும் நவமணி மாலைகள் பற்றியும் கேட்டான். மலைச்சாமி அவையெல்லாம் உண்மை என்பதை உறுதிசெய்தான். உடனே, மகமத்கான் அவனுக்கு ஐந்து பொற்காசுகள் பரிசு கொடுத்து அனுப்பி விட்டான்.

விஜயமங்கலத்தின் செல்வத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகி மாரி



யப்பன் பிறந்த அதே மண்ணிலே பிறந்தவன்தான் மலைச்சாமி. ஆனால் அவன் தியாகி. பிறந்த ஊரைச் சிறந்த தெய்வமாக மதிப்பவன். அவன் மகமத்கானைச் சந்தித்த நொடியிலிருந்து, "இந்துக் கோயிலைப் பற்றி இந்த இஸ்லாமியப் படைத் தலைவனுக்கு என்ன அக்கறை? மகமத்கானின் விசாரணையில் ஏதோ மர்மம் இருக்கிறது. அதைக் கண்டுபிடிக்க வேண்டும்" என்று நினைத்தான்.

மகமத்கான் உடனே விஜயமங்கலம் செல்ல விரும்பினான். ஆனால், ஹைதர் அலியிடம் என்ன காரணத்தைச் சொல்லிவிட்டுப் புறப்படுவது? ஹைதர் இஸ்லாமிய மன்னனாக இருந்தாலும் இந்து மதத்துக்கு எதிரான செயல்களை ஆதரிக்க மாட்டான் என்பது அவனுக்குத் தெரியும். மகமத்கான் யோசித்துக் கொண்டிருக்கும்போது பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போல அவனைக் கொங்கு நாட்டுக்குச் சென்று வருமாறு ஹைதர் ஆணையிட்டான்.

"மகமத்கான்! கோயமுத்தூர்க் கோட்டையை நம் ஆணையின்படி ஆண்டு வரும் மாதையன் நமக்குச் செலுத்த வேண்டிய பெருந்தொகையை இன்னும் செலுத்தவில்லை. நீயே சென்று பெற்று வா. அவன் தர மறுத்தால், அவன் தலையைக் கொய்துவிட்டு வேறொரு தலையாட்டி பொம்மையை அக்கோட்டையின் தலைவனுக்கு."

ஹைதர் சொன்னதைக் கேட்டதும் மகமத்கான் முகத்தில் ஒரு மலர்ச்சி படர்ந்தது. அதை ஒரு நொடியில் மிகத் திறமையாக மறைத்துக் கொண்டு, ஆணையின்படி செய்வதாகக் கூறி விடை பெற்றான். கோயமுத்தூருக்குச் செல்லும் வழியில் விஜயமங்கலத்துச் செல்வத்தைக் கொள்ளையிட வேண்டும்; பிறகு கோயமுத்தூர்க் கோட்டைக்குச் சென்று அதைத் தன் வசமாக்கிக் கொண்டு படையைப் பெருக்க வேண்டும். அந்தப் படையுடன் வந்து மைசூரைக் கைப்பற்ற வேண்டும். இத்திட்டங்களுடன் மகமத்கான் மைசூரை விட்டுப் புறப்பட்டான்.

மகமத்கான் மீதே கண்ணாயிருந்த மலைச்சாமிக்கு அவன் கோயமுத்தூர் புறப்படுவது தெரிந்தது. அதே நேரத்தில் விஜயமங்கலத்தைச் சேர்ந்த மாரியப்பன் இப்போது மகமத்கானின் அன்புக்கு உரியவனாக மாறியிருக்கிறான் என்பதையும் கண்டுபிடித்தான். உடனே மாரியப்பனைச் சந்தித்து, "மாரியப்பா! நானும் விஜயமங்கலத்துக்காரன். நீயும் நானும் வணங்கும் பெருமாள் மீது ஆணையிட்டு உண்மையைச் சொல். மகமத்கான் போவது விஜயமங்கலத்து உட்கோயிலைக் கொள்ளையடிக்கத் தானே?" என்று கேட்டான்.

மாரியப்பன் திகைத்துப் போய் "உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான். அதற்குள் ஒரு முஸ்லிம் வீரன் அங்கே வரவே, மலைச்சாமி அங்கிருந்து நழுவி விட்டான்.


ஹைதர் அலி ஆணையிட்ட மூன்றாம் நாள் மகமத்கானின் படை கோயமுத்தூரை நோக்கிப் புறப்பட்டது. மலைச்சாமி சாதாரண சேவகன். அவன் எப்படியாவது விஜயமங்கலத்துச் செல்வத்தைக் காக்க விரும்பினான். மகமத்கானின் படையைத் தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும், கோயில் சொத்தைக் கொள்ளையடிக்க ஒரு படை வருவதை விஜயமங்கலத்து மக்களுக்கு

ஒட்டகச்சிவிங்கியின் இரத்த அழுத்தம்

உயிரினங்களிலேயே மிக அதிகமாக இரத்த அழுத்தமுள்ளது ஒட்டகச்சிவிங்கிதான். அதற்கேற்றபடி அதன் இதயம் 2 அடி நீளமும், இரத்தக் குழாய்கள் 3 அங்குலப் பருமனும் கொண்டு அமைந்துள்ளன.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.





முன்கூட்டியேதெரிவித்துவிட விரும்பினான். தான் அதுவரை சேர்த்து வைத்த பணத்தைத் திரட்டி ஒரு குதிரை வாங்கிக்கொண்டு, "தாயாருக்குஉடல் நலம் இல்லை. பார்த்து விட்டு வருகிறேன்" என்று அரண்மனையில் கூறி அனுமதி வாங்கிக் கொண்டு புறப்பட்டான்.

மகமத்கான் படை, பகல் உணவுக்கு ஒரு மணிநேரம் தங்கி, இரவு முழுவதும் பயணம் செய்யாமல் ஓய்வு பெற்றது. ஆனால் மலைச்சாமி எங்கும் தாமதிக்காமல் விரைந்தான். ஊட்டியில் மகமத்கான் படை தங்கியிருந்த போது, மலைச்சாமி அந்த மலையிலிருந்து கீழிறங்கினான். மகமத்கானின் படை வீரர்கள் பார்வையில் படாமல், குறிப்பாக மாரியப்பனின் கண்ணில் படாமல் வேறு வழியில் உதகையிலிருந்து இறங்கினான். அன்று நள்ளிரவு விஜயமங்கலத்தை அடைந்து விட்டான்.

அந்த நள்ளிரவிலேயே ஊர்த் தலைவர், கோயில் தர்மகர்த்தா, கோயில் காவலர், அர்ச்சகர், முதலியவர்களின் வீட்டுக் கதவைத் தட்டி விஷயத்தைச் சொன்னான்.

"பெரியவர்களே! என் உயிரைப் பணயம் வைத்து ஒரு மணி நேரம் ஓய்வும் எடுத்துக் கொள்ளாமல் ஓடோடி வந்து சொல்லியிருக்கிறேன். மகமத்கானின் படை நாளையோ, நாளை மறுநாளோ இங்கு வந்துவிடும். அவனிடமிருந்து பெருமாளின் சொத்தைக் காப்பது உங்கள் கடமை! விஜய மங்கலத்தின் பழம்பெருமையை நிலைக்கச் செய்வது உங்கள் பொறுப்பு!"

மலைச்சாமி மூச்சு வாங்கப் பேசி முடித்தான். அவன் சொன்ன அனைத்தையும் கேட்ட அங்கிருந்தவர்கள் சிலை ஆயினர். முதலில் உயிர் பெற்றவர் ஊர்த் தலைவர்தான். அவர், "மலைச்சாமி! பாற்கடலில் விஷமும் அமுதமும் தோன்றியதாகப் படித்திருக்கிறோம். அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். இதோ இந்த மண்ணிலே மாரியப்பன் என்னும் விஷமும் மலைச்சாமி என்னும் அமுதமும் தோன்றியிருக்கின்றனவே! உனக்கு எங்கள் நன்றி! பெருமாள் அருள் உனக்கு எப்போதும் இருக்கும். அந்தப் பெருமாளின் அருளோடு உட்கோயில் சொத்தைக் காப்பாற்றுவோம் என்று நம்புகிறேன். நீ மிகவும் களைத்திருக்கிறாய், முதலில் உணவு கொள், பிறகு தூங்கு." என்றார்.

"ஐயா! உட்கோயில் சொத்தைக் காக்கும் பணியில் நானும் உதவுகிறேன்" என்றான், மலைச்சாமி.

"இதுவரை நீ செய்ததே பெரிய உதவி! இதற்குமேல் நாங்கள் பார்த்

துக் கொள்கிறோம்!'' என்ற ஊர்த் தலைவர், அருகே இருந்தவரிடம் ''இந்தக் கடமை வீரனை நம் வீட்டுக்கு அழைத்துச் சென்று, சாப்பிடச் செய். அங்கேயே படுத்துக் கொள்ளட்டும்,'' என்றார்.

மலைச்சாமி அங்கிருந்து சென்றான். அப்போதும் அவன் மனம் முழுத் திருப்தி அடையவில்லை. "மகமத் கானின் முரட்டுப் படையிடமிருந்து, குறுகிய காலத்தில் இவ்வளவு அரிய — பெரிய செல்வத்தை இவர்கள் எப்படிக் காப்பாற்றுவார்கள்?'' என்று நினைத்துக் கொண்டே இருந்தது.

ஊர்த் தலைவர் முதலியவர்கள் அன்றிரவும் அடுத்த நாளும் அதையே யோசித்தனர். அவர்களுக்கு ஒரு வழியும் புலப்படவில்லை. ஆள் உயரப் பொற்சிலைகளை எங்கே மறைப்பது? அந்த ஊரிலே மறைத்தால் எப்படியும் கண்டுபிடித்து விடுவார்கள். வேறு ஊருக்கு எடுத்துச் செல்லப் போதிய நேரம் இல்லை.

என்ன செய்வது?

மாலை வந்தது. மகமத்கான் படை அன்றிரவு அல்லது மறுநாள் காலை உறுதியாய் நுழையும் தூரத்தில் வந்து விட்டது.


''இனிப் பெருமாளே தன் சொத்தைக் காப்பாற்றிக் கொள்ளட்டும்'' என்று ஊர்ப் பெரியவர்கள் முடிவு செய்து விட்டார்கள்.

மறுநாள் பொழுது புலரும் நேரம்.

மகமத்கானின் படை விஜயமங்கலத்துக்குள் நுழைந்தது.

(தொடரும்)

ஓவியராகலாம்





தலைவலியைத் தவிர்க்கலாமே!

ரவிக்குமார் நல்லபையன். படிப்பில் கெட்டிக்காரன். தனியார் பள்ளியொன்றில் ஒன்பதாவது வகுப்பு படிக்கிறான். அன்பாகப் பேசுவான். அடக்கமாகப் பழகுவான். அவனை எனக்கு மிகவும் பிடிக்கும்.

ரவிக்குமார் வீடு பக்கத்துத் தெருவில்தான் இருக்கிறது. அடிக்கடி என்னைச் சந்திக்க வருவான். பல விஷயங்களைப் பேசுவான். பாடப் புத்தகத்தில் ஆரம்பித்து, பார்லிமெண்ட் நியூஸ் வரை சந்தேகம் கேட்பான். அவனுக்குப் பதில் சொல்வதென்றால் எனக்குச் சர்க்கரை சாப்பிடுகிற சந்தோஷம்.

இதோ —

இப்போதுகூட வருகிறான் ரவிக்குமார் —

ரவிக்குமார்: மாமா, வணக்கம்.

நான்: வணக்கம், ரவி. வா! உட்கார். என்ன ரவி, பரீட்சையெல்லாம் முடிந்ததா? எப்படி எழுதியிருக்கிறாய்?

ரவி: எப்போதும் போல் நன்றாக எழுதியிருக்கிறேன். கண்டிப்பாக முதல் ரேங்க் வாங்குவேன்.

நான்: வெரிகுட். ரொம்ப சந்தோஷம். விடுமுறையில் என்ன செய்யப் போறதா உத்தேசம், ரவி?

ரவி: காலையில் எழுந்ததும் வீட்டில் அம்மாவுக்கு உதவியாக வேலைகள் செய்வேன். பகலில் நூலகத்துக்குப் போய்ப் புத்தகங்கள் படிப்பேன். மாலையில் விளையாடுவேன். மீதி நேரங்களில் இங்கே வந்திடுவேன். நீங்கள் எனக்கு மருத்துவம் சம்பந்தமாகப் பல விஷயங்களை விளக்கிச் சொல்லணும்... சரியா மாமா?

நான்: ஓ. எஸ்... பேஷா சொல்றேன்.

ரவி: மாமா, கேட்க மறந்துட்டேனே... தலைவலி எதனால் வருது? காலையிலிருந்து அம்மாவுக்கு ஒரே தலைவலி. நெற்றியில் எதையோ அரைச்சுப் போட்டுக்கிட்டு வீட்டிலே படுத்திருக்காங்க...

நான்: தலைவலி பல காரணங்களி

—டாக்டர். கு. கணேசன்

னால் வரலாம். பெரும்பாலான தலைவலிகளுக்கு நம் மன உளைச்சல்தான் காரணமாக இருக்கும். அதாவது கோபம், எரிச்சல், பயம், மனத்தில் அமைதி இல்லாமை, சரியான தூக்கம் இல்லாமை போன்றவற்றால்தான் தலைவலி வரும். இது தவிர, நம் உடம்பில் வரக் கூடிய சில நோய்களின் காரணமாகவும் தலைவலி வரும்...

ரவி: அதைப் பற்றியும் எனக்கு விளக்கமாகச் சொல்லுங்கள், மாமா.

நான்: முதலில் குழந்தைகளுக்குத் தலைவலியைத் தரக்கூடிய நோய்களைப் பற்றிச் சொல்கிறேன்.

ஏதேனும் ஒரு நோய்த் தொற்று **(Infection)** குழந்தையின் உடம்பில் இருந்தால் போதும்; உடனே காய்ச்சலோடு கூடிய தலைவலி வந்துவிடும். அதே மாதிரி காதில் சீழ் வடிதல், தொண்டையிலும் மூக்கிலும் சதை வளர்தல் போன்ற காரணங்களால் குழந்தைகளுக்குத் தலைவலி வரலாம்.

மூளைக்காய்ச்சல் வந்தாலும் தொடர்ந்து விடாத தலைவலி வரும். சொத்தைப் பல் இருந்தால்கூட தலைவலி வரக்கூடும்.

புரோட்டீன் மற்றும் வைட்டமின் சத்துக் குறைவு இருந்தால் குழந்தைகளுக்குத் தலைவலி வரும்.

சில குழந்தைகள் படிக்கும் போது தவறான பார்வைப் பழக்கங்களைக் கையாள்வார்கள். அவை கூடத் தலைவலியை உண்டாக்கலாம்.

ரவி: அந்தத் தவறான பழக்கங்கள் என்ன மாமா? நான் தெரிஞ்சிக்கலாமா?

நான்: சொல்றேன். தெரிஞ்சிக்கோ. சில குழந்தைகள் நடந்து கொண்டே படிப்பார்கள்; சிலர் குப்புறப்படுத்துக் கொண்டும், சில பேர் மல்லாந்து படுத்துக் கொண்டும் படிப்பார்கள் இல்லையா? இதன் காரணமாகவும் தலைவலி வரலாம்.

அதே மாதிரி குறைந்த வெளிச்சத்தில் படித்தாலும், மிகச் சிறிய எழுத்துக்களைக் கூர்மையாகக் கவனித்தாலும், கண்ணுக்கு மிக அருகில் புத்தகத்தை வைத்துப் படித்தாலும் தலைவலி வரலாம்.

இப்போதுள்ள வாழ்க்கை முறையில் தொலைக்காட்சி பார்ப்பதும், திரைக்காட்சி பார்ப்பதும் அனைவருக்கும் சகஜமாகி விட்டதல்லவா? அவ்வாறு தொலைக்காட்சியையும் திரைக் காட்சியையும் பார்க்கும் போது திரைக்கு மிக அருகில் அமர்ந்து பார்த்தால், தலைவலி வரும். தொடர்ந்து பல மணி நேரம் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் கண்டிப்பாகத் தலைவலி வரும்.

ரவி: அது சரி மாமா... தலைவலிக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டால் சரியாகி விடும் என்று சொல்கிறார்களே, அது உண்மையா?

நான்: அதில் பாதிதான் உண்மை, ரவி! எல்லாத் தலைவலிகளுக்கும் கண்ணாடி போட்டுக் கொண்டால் சரியாகி விடாது. கண்ணில் கிட்டப் பார்வை, தூரப் பார்வை போன்ற பார்வைக் கோளாறுகள் இருந்து, அதன் காரணமாகத் தலைவலி வந்தவர்களுக்கு வேண்டுமானால் கண்ணாடி அணிந்து தலைவலியைப் போக்கிக் கொள்ளலாம். மற்றதலைவலிகளுக்குக் காரணம் கண்டுபிடித்து அதற்கேற்ப வைத்தியம் செய்து கொள்வதே முறை.

ரவி: என்ன மாமா, பெரியவங்களுக்கு எதனால் தலைவலி வருது?

நான்: இரத்தக் கொதிப்பு **(Blood (Pressure)**, மூளையில் இரத்தக் கசிவு, இரத்த உறைவு, புற்று நோய் போன்ற உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய நோய்களினாலும் தலைவலி வரலாம்.


அதே சமயம் ஏற்கெனவே சொன்ன மாதிரி மன உளைச்சல், நோய்த்தொற்று, உடல் அசதி போன்றவற்றாலும் தலைவலி வரலாம்.

'ஸைனுசைட்டிஸ்' **(Sinusitis)** எனப்படுகிற காற்றறை அழற்சி நோயினாலும் பெரியவர்களுக்குத் தலைவலி வரலாம்.

கண் நோய், கண்ணில் ஏற்படும் பார்வைக் கோளாறுகள் மற்றும் கண்ணில் நீர் அழுத்த நோய் **(Glaucoma)**, கருந்திரை அழற்சி நோய் போன்றவற்றாலும் தலைவலி வரக்கூடும்.

ரவி: ஒற்றைத் தலைவலின்னு ஒரு தலைவலி இருக்கா மாமா? என் அம்மா அடிக்கடி சொல்வாங்களே.

நான்: ஆமாம் ரவி. ஒற்றைத் தலைவலி என்பது தலையின் ஒரு பக்கம்



மட்டுமே வரக்கூடிய மிகக் கொடிய தலைவலி. இது பெரும்பாலும் பெண்களுக்குத்தான் வரும். உன் அம்மாவுக்குக் கூட இந்த ஒற்றைத் தலைவலி வந்திருக்கலாம்.

ரவி: சரி, மாமா... தலைவலி வந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லுங்கள் முதலில்?

நான்: தலைவலிதானே என்று அலட்சியம்செய்யாமல் முறையாக மருத்துவரிடம் சென்று காண்பித்து, தலைவலிக்குக் காரணம் கண்டறிந்து வைத்தியம் பெற வேண்டும். சில பேர் அவர்களாகவேகடைகளில்மாத்திரைகள் வாங்கிச் சாப்பிடுவார்கள். அது தவறான செயல். காரணம் — தலைவலி என்பது ஒரு நோயல்ல; ஏதோ ஒரு நோயின்* வெளிப்பாடு. அது சாதாரண நோயாகவும் இருக்கலாம்; உயிருக்கு ஆபத்துத் தரக்கூடியதாகவும் இருக்கலாம். அதை மருத்துவர்தான் கண்டறிந்து சொல்வார்.

ரவி: என்ன மாமா, தலைவலியைத் தவிர்க்க வழிவகைகள் கிடையாதா?

நான்: இருக்கிறதே... அதையும் சொல்கிறேன், கேள்! குழந்தைகள் நல்ல வெளிச்சத்தில் பாடப் புத்தகங்களைப் படிக்க வேண்டும். உட்கார்ந்துகொண்டுதான் படிக்க வேண்டும். கண்ணுக்கும் புத்தகத்திற்கும் இடைப்பட்ட தூரம் 30 செ. மீ. இருக்கிற மாதிரி பார்த்துக் கொள்ள வேண்டும்.

மிகச் சிறிய அளவில் உள்ள எழுத்துக்களைக் கூர்மையாக நீண்ட நேரம் பார்க்கக் கூடாது; படிக்கவும் கூடாது. பஸ், ரயில் பயணங்களின் போதும் புத்தகங்களைப் படிக்கக் கூடாது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பல மணி நேரம் பார்க்கக் கூடாது.

தினமும் குறைந்தது எட்டு மணி நேரம் குழந்தைகள் தூங்க வேண்டும். பெரியவர்களுக்கு ஆறு மணி நேரத் தூக்கம் போதுமானது.

சத்துள்ள உணவுகளை — குறிப்பாக பச்சைக் காய்கறிகளை — உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். பால், முட்டை போன்றவையும் நல்லது.

எதற்கெடுத்தாலும் கோபப்படக் கூடாது. மனத்தில் பயம் இருக்கக் கூடாது. வெற்றி தோல்விகளை ஒரே மாதிரி மனநிலையில் சந்திக்கும் மனப்பக்குவம்வேண்டும்.மனத்தில்எப்போதும் அமைதி நிலவ வேண்டும்.

நோய்த் தொற்று காரணமாகத் தலைவலி வந்தால், உடனே மருத்துவரிடம் சென்று முறையாக மருந்து, மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும்.

நாற்பது வயதைத் தாண்டியவர்கள் ஆறு மாதத்திற்கு ஒரு முறை மருத்துவரைச் சந்தித்து, இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு, ஆகியவை சீராக உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

இத்தனை வழிமுறைகளையும் மேற்கொண்டால் குழந்தைகளுக்கும் சரி, பெரியவர்களுக்கும் சரி தலைவலி என்பதே வராது என்று உறுதியுடன் கூறலாம்.

ரவி: நன்றி மாமா, நன்றி. தலைவலியைப் பற்றி இவ்வளவு தெளிவாகச் சொன்னதற்கு என் மனப்பூர்வமான நன்றிகள். இதோ இப்போதே வீட்டிற்குப் போய் அம்மாவிடம் விவரத்தைச் சொல்லி உங்களிடம் அழைத்து வருகிறேன். நீங்கள்தான் அம்மாவின் தலைவலியைக் குணப்படுத்த வேண்டும்...

நான்: நிச்சயம் குணப்படுத்துகிறேன்.

ஒரு குட்டிப்

எஸ். லட்சுமி



''அட்! இது என்ன? இந்தியா மொத்தமும் நம்மை வரவேற்க வந்துடுத்தா என்ன?'' — என்று உள்ளே நுழையும் எல்லாரும் மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சர்யப்பட்டனர்.

இங்கே பார்த்தால் பட்டு மாமி, பட்டுப் புடைவை சரசரக்க, ''வாங்கோ!'' என்று பன்னீர் தெளிக்கிறார். அங்கேயோ, பஞ்சாபி மணப்பெண் ''ஆயியே!'' என்று ரோஜாப் பூ கொடுக்கிறார். 'எங்கே நுழைவது?' என்ற சந்தேகமேயில்லை. ஏனென்றால், இருவரும் நம்மை ஒரே ஹாலுக்குள் அழைத்துச் சென்றனர்.

உள்ளே ஹாலில் அமர்ந்தால், ஹாலே ஜொலிக்கிறது. ஹால் முழுக்க பட்டம் வாங்க வந்த குட்டி மாணவர்களின் எல்லையில்லா ஆனந்தம்.

நூற்றுக் கணக்கில் நவராத்திரிக் கொலுப் பொம்மைகளின் அணி வகுப்பைப் போல், எந்த வேடத்தையும் விட்டு வைக்கவில்லை!

காந்தித் தாத்தா, கிறிஸ்துமஸ் தாத்தா, போர் வீரன், புட்டபர்த்தி சத்ய சாயி பாபா, பாரதியார், ஔவையார், வீரபாண்டிய கட்டபொம்மன், ரெட்ரைடிங் ஹூட், பஸ்மாசுரன், சிவபெருமான், மஹாவிஷ்ணு என்று உலகெங்கிலும் இருந்து கடந்த கால, நிகழ் கால, சரித்திர, புராணப் பெரியோர்கள்!

அதுசரி இத்தனை கொண்டாட்டமும் எதுக்குத் தெரியுமா? ஆதர்ஷ் வித்யாலயா மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளியின் நர்சரி மாணவர்களுக்குப் பட்டமளிப்பு விழாவாம்! அதற்காகவாம்!

''என்ன? பத்து வயசு பாப்பாவுக்கெல்லாம் பட்டமளிப்பா? தமாஷா இருக்கே!'' என்று பள்ளியின் தலைமையாசிரியை, திருமதி சுபலட்சுமியை விசாரித்தபோது,

''பின்னே? பி.ஏ. முடிச்சவங்க அந்த வயசுலே, எடுக்கிற முயற்சி மாதிரித் தானே, என் ஸ்டூடண்ட்ஸ் பத்து வயசுலே, அஞ்சாம் கிளாஸ் முடிக்கிறதுக்கு முயற்சி பண்றாங்க'. அதனாலே இவங்க முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் இவங்களுக்கும் நர்சரி ஸ்கூலைச் சிறப்பா முடிச்ச



பட்டமளிப்பு விழா!



துக்கு 'பட்டம்' அளித்து விழா எடுத்து, ஹைஸ்கூலுக்கு அனுப்புகிறோம்.

''நாங்களும் இந்த விழாவை நான்கு வருடங்களாக நடத்தி வருகிறோம்; நாங்கள் பட்டம் அளித்த முதல் செட் மாணவர்கள், 1988—ல் பத்தாம் வகுப்பு மெட்ரிகுலேஷன் தேர்வுக்குப் போகவிருக்கிறார்கள். இவர்களில், பலரை ஏன் அனைவரையும் கூட, ஸ்டேட் ராங்க் எடுக்கக் கூடிய அளவுக்கு நாங்கள் தயார் செய்திருக்கிறோம். இதற்கெல்லாம் அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதே நாங்கள் எடுக்கும் இந்தப் பட்டமளிப்பு விழா தானே!'' என்று உறுதியாகக் கூறினார்.

விழாவில் பட்டங்களை அளித்து, சிறுவர்களை வாழ்த்திய மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் இன்ஸ்பெக்டர், திரு வேணுகோபாலன்,

''இப்படியொரு பிரமாதமான வரவேற்பை அளித்து, எனக்குச் சிறந்த பெருமையை தேடித் தந்துவிட்டீர்கள்! நீங்கள் படிப்பில் மட்டுமல்லாது, கலை, பண்பாடு, நாகரீகம் என்று எந்தத் துறையையும் விட்டு வைக்காது, சகல கலாவல்லவர்களாக உருவாகியிருக்கிறீர்கள். எத்தனையோ விதமான பண்பாடு உடையவர்களா யிருந்தாலும், எத்தனையோ இனத்தவராயிருந்தாலும், நீங்கள் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் போற்றி வரும் உங்கள் ஒற்றுமை உணர்வே உங்களுக்கு எல்லாவிதமான வெற்றிகளையும் தேடித் தரும்'' என்று பாராட்டியவுடன், அந்தக் 'குட்டிப் பட்டதாரி'கள் எழுப்பிய கைத்தட்டல் ஓசை, அடுத்த பத்து நிமிடங்களுக்கு ஓயவில்லை.

புகைப்படங்கள்: ஆதர்ஷ் போட்டோ ஸ்டூடியோ.


என்ன காரணம்?

அன்பர் ஒருவர் காந்திஜியைச் சந்திக்கும் போது ''காந்திஜி! தாங்கள் ரயில் பயணம் மேற்கொள்ளும் போது எப்போதும் மூன்றும் வகுப்பையே தேர்ந்து எடுக்கிறீர்களே, ஏன்?'' என்று கேட்டார்.

காந்திஜி பதில் அளித்தார். ''அதுவா, நான்காம் வகுப்பு இல்லாத காரணத்தினால்தான்!''

— ஏ. கே. நாசர்.





"என்ன கொடுமை இது! ஏன் இப்படிச் செய்தாய்? நீ என்ன சிறுபிள்ளையா? உன்னை என் மனைவி என்று கூறுவதே பாவம். இனி, நான் உன்னுடன் வாழ மாட்டேன்" என்று படபடப்புடன் தம் மனைவியிடம் கூறினார் நீலநக்கர்.

ஆமாம், அவருக்கு இவ்வாறு கோபம் வரும்படி அவருடைய மனைவி என்னதான் செய்திருப்பார்?

நீலநக்கர் காவிரிக் கரையில் உள்ள சாத்தமங்கை என்ற ஊரிலே வாழ்ந்து வந்தார். அவர் சிறந்த சிவபக்தர். சிவனடியார்களை மதித்து, அவர்களுக்கு உணவு அளிப்பார்; வேண்டிய உதவிகளைச் செய்வார்.

அந்த ஊரில் உள்ள ஆலயத்திற்கு அயவந்தி என்று பெயர். தினந்தோறும் நீலநக்கர் அந்த ஆலயத்திற்குச் சென்று வழிபடுவார்.

அன்று திருவாதிரைத் திருநாள். அவரும் அவர் மனைவியும் பூசைக்கு வேண்டிய சாமான்களுடன் புறப்பட்டனர். கோயிலை அடைந்தனர். பூசைக்குரிய சாமான்களை மனைவி எடுத்து எடுத்துக் கொடுக்க, நீலநக்கர் முறைப்படி பூசை செய்து கொண்டிருந்தார்.

அப்போது மேலேயிருந்து ஒரு சிலந்தி சிவலிங்கத்தின் மேல் விழுந்தது. அதை நீலநக்கரின் மனைவி பார்த்தாள். உடனே அதைத் தன் வாயால் 'ஊ ஊ' என்று ஊதி நீக்கினாள். அப்படி ஊதும் போது, அவர் வாயிலிருந்து சிறு துளி உமிழ்நீரும் லிங்கத்தின் மேல் தெறித்துவிட்டது. அதைக் கண்டுதான், நீலநக்கர் அப்படிக் கோபம் கொண்டார்.

"சிலந்தி விழுந்தால், அதை அகற்ற வேறு வழியில்லையா? உன் வாயால் ஊதி, எச்சிலையும் சிவபெருமான் தலையில் துப்பி விட்டாயே! இது அபசாரம் அல்லவா? இனி உன்னுடன் நான் வாழ முடியாது?" என்று சீறி எழுந்து வேகமாக நடந்து வீட்டை அடைந்தார்.

அப்போது சூரியன் மறையும் நேரம். கணவரின் ஆணையை மீறவும் முடியவில்லை, வேறு எங்கேயும் செல்லவும் மனமில்லை, அங்கேயே

இறைவனை வணங்கியபடியேகோவில் வாசலில் அமர்ந்திருந்தார், நீலநக்கரின் மனைவி.

வீட்டுக்குத் தனியாக வந்த நீலநக்கர், கோவிலில் நடந்ததை நினைத்துப் பார்த்தபடியே தூங்கிவிட்டார். அப்போது, அவர் கனவிலே அயவந்தியில் எழுந்தருளியுள்ள கடவுள் தோன்றினார்.

"அன்பனே, என் உடம்பைப் பார்," என்றார்.

நீலநக்கர் இறைவனின் உடம்பைப் பார்த்தார். "உடம்பு முழுவதும் கொப்புளங்களாக இருக்கின்றனவே!" என்று நினைத்துத் துடித்தார்.

"பக்தனே, பதற வேண்டாம். நன்றாக என் உடம்பைப் பார். உன் மனைவி ஊதிய இடத்தில் மட்டும் கொப்புளம் இல்லை. மற்ற இடங்களிலெல்லாம் கொப்புளங்கள் இருப்பது தெரிகிறதா?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட நீலநக்கர் திடுக்கிட்டு விழித்தார். சட்டென்று எழுந்தார். உடனே கோயிலை நோக்கிப் புறப்பட்டார். கோயிலின் வாசலில் இறைவனை வழிபட்டபடியே இருந்த தம் மனைவியைக் கண்டார். உடனே, நடந்ததைச் சொல்லி, அவரை அன்போடு வீட்டுக்கு அழைத்து வந்தார். இருவரும் இறைவனை மகிழ்வுடன் வழிபட்டு இல்லறம் நடத்தி வந்தனர்.

இவர்தான் பிற்காலத்தில் 'நீலநக்க நாயனார்' என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.

ஆலமரம்



பந்தலிட்டு நிற்குததோ
பசுமையான ஆலமரம்!
வந்துயாரும் தங்கிடலாம்!
வாடகைதான் இல்லையே!

பத்துநூறு ஆயிரம்பேர்
படைதிரண்டு தங்கலாம்.
நித்திரைக்கு ஏற்றபந்தல்
நிம்மதியாய்த் தூங்கலாம்!

இயற்கைவிட்ட பந்தல்இதில்
எத்தனையோ விழுதுகள்!
பயன்மிகுந்த விழுதிவைகள்
பந்தலுக்குக் கால்களோ!

சலசலக்கும் இலைகளிலே
ஜலதரங்க ஓசைகள்!
கலகலக்க வைக்குதுபார்
கிளையிலதோ குருவிகள்!

நீளமான விழுதைவெட்டி
நித்தம்பல்லைத் துலக்கலாம்!
ஆலமரத்துக் காற்றையாரும்
அனுபவித்துப் பார்க்கலாம்!

—காரைமணி

கம்ப்யூட்டர்

தம்பிநீயும் விஞ்ஞானத்தை
தெளிந்து கற்றிடு — பல
தலைமுறைக்கும் பயனைத்தரும்
புகழைப் பெற்றிடு.

'கம்ப்யூட்டர்' மொழிபெயர்ப்பு
செய்யப் போகுதாம் — தம்பி
கவலையினித் தேவையில்லை;
எங்கும் போகலாம்!

'கம்ப்யூட்டர்' நினைவகத்தில்
இலக்கண மெல்லாம் — நாம்
காட்டிவிட்டால் அது.தானே
மொழி பெயர்க்குமாம்!

நம்பிக்கையை நமக்குள்ளே
நாளும் வளர்ப்போம் — பல
நற்செயல்கள் செய்துபுகழ்
என்றும் குவிப்போம்!

—நீரை அத்திப்பூ



பிருந்தாவனக் கவியரங்கம்

சித்திரைக் காட்சி

சித்திரை மாத ஆட்சி
செய்திடும் சிறப்புக் காட்சி
முத்திரைக் காட்சி யன்றோ!
முறைப்பட எண்ணிப் பார்த்தால்,
இத்தரை வெயில் காலம்
இனியபல் காட்சி காட்டும்!
மொத்தமாய்ச் சொல்லிப் பார்த்தால்,
முறுவலோர் காட்சி யாகும்!

கடைகளில் அடைந்து தூங்கும்
குடையெலாம் நடந்து போகும்
வடைகளும் தயிரில் ஊறும்
வழிகளில் நீர்மோர்ப் பந்தல்!



உடைகளில் மென்மை தோன்றும்
ஊருக்குள் பதநீர் சுற்றும்
தடையிலா இளநீர் தோன்றும்
தண்ணீர்க்கும் விலைகள் தோன்றும்!

செருப்புகள் இல்லா மாந்தர்
சிறுமணல் வழியில் சென்றால்
நெருப்பினைத் தாண்டல் போல
நடந்திடும் காட்சி தோன்றும்!
அருவியில் கூட்டம் கூடி
ஆடிடும் காட்சி தோன்றும்
இருமிகு 'சித்ரா' தேவி
தெரிவிக்கும் காட்சி என்னே!

பனிநிறக் கட்டி எல்லாம்
பயணமும் செய்யும் பாரீர்!
கனிகளின் சாற்றை விற்கும்
கடைகளும் மலிவாய்த் தோன்றும்
துணிகளும் கையு மாகத்
துடைப்பவர் பலராய்த் தோன்றும்!
வணிகரின் கடைகள் முன்னே
வளநிழல் குடையோ பந்தல்!

— நா. ரா. சித்தார்த்தன் (7555)
பாலையம்பட்டி

பாடம்மா

அம்மா அம்மா என் அம்மா
அழகாய்ப் பாட்டுப் பாடம்மா
கம்பன் பாட்டைப் பாடம்மா
கவிஞர் கதையைப் பாடம்மா

ஆரா ரோவெனப் பாடம்மா
அன்புப் பாட்டுப் பாடம்மா
பாராண்ட வரைப் பாடம்மா
பைந்தமிழ்ச் சுவையைப் பாடம்மா

இனிய தமிழில் பாடம்மா
இதயம் குளிரப் பாடம்மா
நானும் தமிழின் சிறப்பினையே
நாளும் மகிழப் பாடம்மா

— எஸ். லதா (392).
நாட்டரசன்கோட்டை



எனக்குப் பிடித்தது

எனக்குப் பிடித்த விளையாட்டு — அது
எவரும் விரும்பும் கிரிக்கெட்டு!

எனக்குப் பிடித்த ஆட்டக்காரர் — அவர்
எந்தன் குருவாம் மொஹீந்தர்

எனக்குப் பிடித்த அறநூலாம் — அது
இருவரி கொண்ட திருக்குறளே!



எனக்குப் பிடித்த கனிஎதுவோ — அது
இளையவர் விரும்பிய மாங்கனியே!

எனக்குப் பிடித்த நபர் எவரோ — அவர்
என் உயிர் தாயும் தந்தையுமே!

எனக்குப் பிடித்த புத்தகமோ — அது
எழில்மிகு கோகுலம் புத்தகமே!

— டி. ஆர். சிவகுமார் (+3753),
ஓசூர்.

முல்லைப் பந்தல்

முல்லைப் பந்தல் மீதினிலே
முத்துப் பூக்கள் பூத்திருக்கு
பத்துப் பேரும் பறித்திடலாம்
பாங்காய் மாலை தொடுத்திடலாம்



தொடுத்த மாலை தனைஎடுத்துத்
தோத்திரம் பாடி முருகனுக்கே
பக்தி யோடு சூட்டிடுவோம்
பாத மலர்கள் பணிந்திடுவோம்

பாடும் பாடல் அனைத்திலுமே
பால முருகன் பெயர்சொல்வோம்
அன்பு என்பது நம்மதமே
அதுவே நமக்குச் சம்மதமே!

— ஆர். மீனாட்சி (16292), கோவை.

புதுமழை பெய்யாதா?

வானம் கறுக்காதா?
மழை மேகம் சூழாதா?
தேனைப் பொழிவது போல்
திரண்டு மழை பெய்யாதா?

வாடிக் கிடக்கின்ற
மக்கள் முகம் மலராதா?
பாடிப் பரவிடவே
பலத்த மழை பெய்யாதா?



குளங்கள் நிரம்பாதா?
குறையெல்லாம் தீராதா?
வளங்கள் பெருகாதா?
வரப்புயர்ந்து தோணுதா?


எங்கள் தாய்க்குலத்து
ஏக்கங்கள் தீராதா?
பொங்கி மலர்ந்திடவே
புது மழைதான் பெய்யாதா?

— ஜி. கணேசன் (3751), பெருவிளை


எண்ணத்தைக் கவரும் வண்ணத்துப் பூச்சி!

'விமலன்'





சிவந்த மேனியையுடைய வண்ணத்துப் பூச்சி முசுக்கட்டை இலையின் மீது அமர்ந்து முட்டையிடும். அதன் கூட்டுப்புழு ஏற்ற இலையை தேர்ந்தெடுத்து தின்று வளர்ந்து புதிய உருவம் பெறுகிறது. இறுதியாக தன் உணவினை நிறுத்தி இலையின் பின்புறம் பட்டுப்போன்ற தட்டை உருவாக்கிக் கொண்டு தலைகீழாகத் தொங்கும். இதுவே கம்பளிப் புழுவாக மாறும் காலமாகும்.



கம்பளிப்புழுவின் முதுகில் பிறை காணப்படுகிறது. ரோமம் மறைந்து திரவம் போன்ற பொருள் பழுந்து கெட்டியான ஓடு போன்ற உருவம் காணப் படுகிறது.

நாளடைவில் இவ்வோடு உடைந்து அழகான வண்ண நிறப் பூச்சி வெளி வருகிறது.

இது தலைகீழாக நின்று தனது ஈரமான உடலைக் காயவைக்கிறது.

தன்னுடல் முழுதும் நன்கு காய்ந்தவுடன் தானே பறக்கத் துவங்கும் அருகிலுள்ள மலர்களிலிருந்து தனது நீண்ட உறிஞ்சி மூலம் தேனை உறிஞ்சி உண்டு வாழ்கிறது.





மாணவர்களுக்கான கோடை விடுமுறைப் போட்டிகள்

வருகின்ற கோடை விடுமுறையில் மாணவர்கள், தங்கள் தாய் நாட்டை எண்ணிப் பார்த்து, கடவுளிடமும், தர்மத்திடமும், தேசத்திடமும் பக்தி கொண்டு சீரிய வாழ்வினை அமைத்துக் கொள்ளும் வகையில் கீழ்க்கண்ட போட்டிகளை காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் அறிவித்துள்ளார்கள் :

வகுப்பு	மனப்பாடம்	கதை அல்லது கட்டுரை	கவிதை	ஓவியம்
3, 4, 5	ஆத்தி சூடியும் கொன்றை வேந்தனும்	துருவன் அல்லது பிரகலாதன் அல்லது கிருஷ்ணனின் ஒரு லீலை	சரஸ்வதி	கணபதி அல்லது கண்ணன்
6, 7, 8	நன்னெறி (முழுவதும்)	ஆஞ்சநேயர் அல்லது படேலின் நாட்டுத் தொண்டு	வ. உ. சி.	கஜேந்திர மோட்சம் அல்லது மார்க்கண்டன் சிவ பூஜை
9, 10, 11, 12	குமரேச சதகம் (1 முதல் 50 செய்யுட்கள்)	ஆதிசங்கரர் அல்லது சிவாஜி	சேர, சோழ, பாண்டிய மன்னர்களில் நாட்டிற்குப் பெருமை தேடித் தந்த ஒருவர்	கம்பராமாயணம் அல்லது வில்லி பாரதத்தில் ஒரு காட்சி (செய்யுளுடன் — அதன் விளக்கமாக)

போட்டி விதிகள் :

1. போட்டிகளில் பங்கு கொள்ளும் மாணவர்கள், தங்கள் பெற்றோரிடமிருந்தோ ஆசிரியரிடமிருந்தோ தங்கள் படைப்பிற்கான சான்றிதழைப் பெற்று அனுப்ப வேண்டும்.

   மனப்பாடப் போட்டிக்குப் பெற்றோர் அல்லது ஆசிரியரின் பரிந்துரையே போதுமானது.

   (———— பெயர் கொண்ட மாணவன்/மாணவி/என் மகள்/மகன் ———————— நூலை மனப்பாடம் செய்து விட்டதற்கான சான்றிதழ் இது.

   கையொப்பம்: ....

2. கதை, கட்டுரை, கவிதை, ஓவியம் ஆகிய போட்டிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு முதற்பரிசாகத் தங்கப் பதக்கம் வழங்கப்பெறும். தவிர பங்கு பெறுவோர் அனைவருக்கும் சான்றிதழுடன் நீதி நூல்கள் அன்பளிப்பு உண்டு.

3. ஒப்புவித்தல் போட்டிகளில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழுடன், ஸ்ரீ மடம் பெயருடன் கூடிய பேனாவும், அன்பளிப்பாகத் தரப்படும்.


4. படைப்புகள், 'கோடை விடுமுறைப் போட்டி, 'கோகுலம்,' 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034' என்ற முகவரிக்கு 31.5.1987 க்குள் வந்து சேர வேண்டும்.


5. தங்கப் பதக்கம் பெறும் கதை கட்டுரை ஓவியங்களில் சில கோகுலத்தில் பிரசுரமாகும். பிரசுரமாகாதவற்றைத் திருப்பி அனுப்புதல் — கடிதப் போக்குவரத்து கிடையாது.

— ஆசிரியர்

பாட்டியின் வீட்டு எலி

படக்கதை: S.K.ராமானுஜம் (ராஜு)





ஆத்திரங்கொண்ட பாட்டி அத்திருட்டுப்பூனையை அடித்துத்துரத்தினாள்
பொல்லாத எலி, பாட்டிக்குப்பல விதத்-தில் தொல்லைகளைக்கொடுத்து வந்தது.
எலியினால், வருமான-மின்றி வறுமையில்.... வாடினாள்..அந்தப்பாட்டி
அதனால் பாட்டி தன் வீட்டைக் காலிசெய்து கொண்டு வெளியூருக்குப்போய் விட்டாள்.
பாவம் எலி.... ஆகாரமின்றி... பசியில் வாடியது.
பசி தாங்கமுடியாத எலி பக்கத்துக் குடிசையில் திருடிச்சாப்பிட ஓடியது.
அந்தக் குடிசை வீட்டில் எலிக்குச்சாப்பிட ஒன்றும் கிடைக்கவில்லை.
அக்குடிசையில் வாழும் முரடன் ஒருவன் அந்தப் பொல்லாத எலி -யின் மண்டையில் தடியால் ஓங்கி அடித்து விட்டான்.
ஐய்யோ!
இது பாட்டியின் வீட்டு எலி இதை சும்மா விடக்கூடாது.



ஒன்றே ஒன்றுதான்!

நானும் என் தந்தையும் உதக மண்டலத்திற்கு ரயிலில் சென்று கொண்டிருந்தோம். எங்கள் அருகே இருந்த பெரியவர் எதிரேயிருந்த ஓர் இளைஞரைப் பார்த்து, ''தம்பி, பார்க்க நன்றாக இருக்கிறாயே, ஒழுக்கத்திலும் நன்றாயிருக்கிறாயா?'' என்று கேட்டு



விட்டு, ''சிகரெட் பிடிக்கும் பழக்கம் உண்டா?'' என்று கேட்டார்.

''இல்லை'' என்றார் இளைஞர்.

சீட்டுப் பழக்கம் உண்டா?'' என்று கேட்டார் பெரியவர்.

''இல்லை'' என்றார் இளைஞர். ''சபாஷ், வேறு ஏதாவது கெட்ட பழக்கம் உண்டா?'' என்று கேட்டார் பெரியவர். ''ஒரே ஒரு கெட்ட பழக்கம் மட்டும் இருக்கிறது ஐயா'' என்றார் இளைஞர்.

''அது என்ன?''

''பொய் சொல்வது மட்டும்தான்'' என்றார் இளைஞர்.

— ஆர். சிவகுமார் (12840)
த.நா. பட்டி.

நாட்டுப் பற்று

குடியரசு தினத்தன்று ஒரு பத்து




வயதுச் சிறுவன் பேருந்துக்குக் காத்து நின்ற சிலருக்கு அருகிலுள்ள தன் குடிசையிலிருந்து ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து வந்து கொடுத்தான். வெயில் தாங்காமல் தாகத்துடன் நின்ற அவர்கள் அவனிடம் தண்ணீர் வாங்கிக் குடித்தார்கள். பிறகு அவன், ''எனக்கு அவசரமாக ஒரு பத்துப் பைசா வேண்டும்'' என்றான்.

அவனுக்கு அவர்கள் ஒவ்வொருவரும் பத்துப் பைசா கொடுக்க முன் வந்தார்கள். ஆனால், அவன் முதலில் கொடுத்தவரிடம் மட்டுமே வாங்கிக் கொண்டு, ''இதுபோதும், எல்லாருக்கும் நன்றி'' என்றான்.

கையில் பத்துப் பைசாவுடன் ஓடிய அவன், பக்கத்திலிருந்த கடைக்குச் சென்று திரும்பி வந்தான். அப்போது அவன் சட்டையில் நம் தேசியக் கொடி இருப்பதைப் பார்த்து அனைவரும் வியப்படைந்தார்கள்.

அவனது நாட்டுப் பற்றை மெச்சிய அவர்கள் அவனைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டினார்கள்.

— ஆர். ஆனந்தா (11667),
மன்னார்குடி.



'ளி'யில் முடிவது

கீழே சில குறிப்புக்கள் உள்ளன. அவற்றிற்கான விடை ஒவ்வொன்றும் 'ளி'யில் முடியும், எங்கே, கண்டு பிடியுங்கள்:

1. முருகப் பெருமானின் மனைவி —
2. பறவைகளில் ஒன்று —
3. உணவில் நாம் சேர்ப்பது —
4. நாம் ஒருவரிடம் வேலை செய்தால், அவரை அழைப்பது —

விடை: 1. வள்ளி; 2. கிளி; 3. புளி; 4. முதலாளி.

— ஜி.எம். குமாரமங்கலம்,
அரியநாயகிபுரம்.

பல் வலி

"டாக்டர், எனக்குப் பல்வலி."

"வாயைத் திறங்க பார்க்கலாம்"

அவர் வாயைத் திறக்க,

"என்னங்க.... பல்லையே காணோம். பல் வலிங்கிறீங்க!"



"அடடா! மறந்து போய் பல் செட்டை வீட்டிலே வச்சுட்டேன் போலிருக்கு."

— வே. லோகநாதன் (16864),
ஆலம்பாக்கம்.

ஏன் கூடாது?

சில சமயங்களில் நாம், நம் மனிதர்களை மிருகங்களுடனே பறவைகளுடனே ஒப்பிட்டுப் பேசுகிறோம். கணக்கில் புலி, ஓட்டத்தில் முயல், பாடலில் குயில் என்றெல்லாம் கூறுகிறோம். அவ்வாறு கூறாமல், கணக்கிலே ராமானுஜம், ஓட்டத்தில் பி.டி. உஷா, பாடலில் எம். எஸ். சுப்புலட்சுமி, என்று அந்தந்தத் துறையில் சிறந்த மனிதர்களுடன் ஒப்பிட்டு ஏன் கூறக் கூடாது?



— ம. சங்கர்கணேஷ் (4981).



பிடித்த நிறம்

கொசுக்களுக்குப் பிடித்த நிறம் சிவப்பு. ஈக்களுக்குப் பிடித்த நிறம் நீலம். எறும்புகளுக்குப் பிடித்த நிறம் மஞ்சள்.

— எஸ்.ஜெயஸ்ரீ (1254), திருச்சி—14.

வேண்டியவை



1. மதிக்க வேண்டியவை — முதுமை, சட்டம்.
2. நேசிக்க வேண்டியவை — தூய்மை, நேர்மை
3. புகழ வேண்டியவை — அறிவு, அழகு.
4. நிலை நிறுத்த வேண்டியவை — வாக்குறுதி, நட்பு
5. அடக்க வேண்டியவை — நாக்கு, கோபம்
6. வளர்க்க வேண்டியவை — மன உறுதி, இனிய சுபாவம்
7. கவனிக்க வேண்டியவை — பேச்சு, நடத்தை
8. தடுக்க வேண்டியவை — பொய்மை, பொறாமை.

— ஹ. சபீர் சலாம் (10,926), பனைக் குளம்.

விடை கொடு

"பரீட்சைக்குப் போகிறேன். விடை கொடு தாயே."



"சத்தியமாச் சொல்றேன். எனக்கு எந்த விடையும் தெரியாது. பரீட்சை எழுதற இடத்திலே பாரு."

— சி.எல். சரவணன் (706), மதுரை—1

முயல் + ஆமை

"உலகில் எத்தனையோ உயிரினங்கள் இருக்க முயல் — ஆமை கதையை மட்டும் எடுத்துக் கூறுகிறோமே, இதன் காரணம் என்ன?" என்று கூட்டத்தில் ஒருவர் கேட்டார். உடனே கூட்டத்திற்குத் தலைமை வகித்த மாவட்டக் கல்வி அதிகாரி, "கதையிலே வரும்



முயல், முயலாமையால் ஆமையிடம் தோற்றது." என்று பதிலளித்து, "ஆகவே, இளஞ்சிறுவர்களிடம் முயலாமை என்பது இருக்கக் கூடாது" என்றும் அறிவுரை கூறினார்.

— அச்சகம் இராசகோபால் பேசியதைக் கேட்டு எழுதியவர்: அ. சாகிர் (5450), மழையூர்.

புத்தகம்



* புத்தகம் இல்லாத வீடு, ஜன்னல்

இல்லாத அறைக்கு ஒப்பாகும்.

— மான்

* எந்த வீட்டில் புத்தக சாலை இருக்கிறதோ, அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது. — பிளாட்டோ

* புத்தகம், நீங்கள் மற்றவர்களைப் புரிந்து கொள்ளும்படி செய்ய வல்லது; அது போலவே, உங்களை நீங்களே அறிந்து கொள்ளவும் செய்யும்.

— எட்வர்டு பிரேக்கர்

* புத்தகங்களை இரவல் கொடுக்காதீர்கள். யாரும் அவற்றைத் திருப்பிக் கொடுப்பதில்லை. என் நூல் நிலையத்திலுள்ள புத்தகங்கள் எல்லாம் பிறரிடமிருந்து இரவல் வாங்கியவையே.

— அனடோல் பிரான்ஸ்

— 'கொய்த மலர்கள்' நூலிலிருந்து தொகுத்தவர்: இரா. கிருஷ்ணன் (7515), தூத்துக்குடி

மலைப் பாம்பு



* பாம்பு இனங்களிலே மிகப் பெரியது மலைப்பாம்புதான்!
* பெயர்தான் மலைப்பாம்பு. ஆனால், மரங்கள் அடர்ந்த காடுகளில்தான் அது வசிக்கும்.
* மலைப்பாம்புக்கு விஷப் பையோ, விஷப் பல்லோ கிடையாது.
* குரங்கு, ஆடு, பன்றி, முயல் சிறு மான் போன்றவற்றைத் தின்னும்
* இரையைப் பிடிக்க ஆடாமல் அசையாமல் இருக்கும். இரை அருகில் வந்ததும், அதைச் சுற்றியபடி இறுக்கி எலும்பை நொறுக்கும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உண்ணும். வயிறு நிறைந்து விட்டால் அது பல நாட்கள் உணவைத் தேடாது.
* இரண்டு தலையுள்ள மலைப் பாம்புகள் ஆப்பிரிக்கக் காடுகளில் உள்ளன.
* அழகிய தோலுக்காக வேட்டையாடுவதால், மலைப்பாம்பு இனம் அழிந்து வருகிறது.

— ராக செள. கருணாகரன், சேலம்—1

ஏது? ஏது?

1. காந்திஜி நடத்திய பத்திரிகை எது?—பயனீர், லீடர், ஹரிஜன், சர்ச் லைட்.
2. முதல் இந்தியத் தலைமைத் தளபதி யார்? — திம்மையா, ஸ்ரீ நாகேஷ், கரியப்பா, ராஜேந்திர சிங்க்.
3. அரசாங்க வருமானம் அதிகமாகக் கிடைப்பது எதில்? — வீட்டு வரி, வருமான வரி, கலால் வரி.



4. விண்வெளியில் சென்ற முதல் இந்தியர் யார்? — ரமேஷ் மல்ஹோத்ரா, ராகேஷ் சர்மா, ரவீந்திர சர்மா, ரங்கராஜ்.

விடை: 1. ஹரிஜன், 2. கரியப்பா, 3. கலால் வரி, 4. ராகேஷ் சர்மா.

— ஆர். ராஜா (1006), சென்னை—40

கேளுங்கள் சொல்லுகிறோம்


* பாம்பு 'உஸ்... உஸ்....' என்று சீறுவதைப் பார்த்திருக்கிறேன். அதற்கு வேறு மாதிரி கத்தத் தெரியாதா?

— சி. இளங்குமரன், திருத்துறைப்பூண்டி

தெரியாது. 'உஸ் உஸ்' என்ற ஒலி கூட அதன் குரல்வளையிலிருந்து வருவதில்லை. பாம்புக்கு குரல்வளையும் இல்லை; குரல் நாணும் (Vocal Chord) இல்லை. அது தன் நுரையீரலுக்குள் காற்றை உள்ளே இழுக்கும்போதும், காற்றை வெளியில் விடும் போதும் 'உஸ்... உஸ்...' என்ற ஒலி உண்டாகிறது. எவ்வளவுக்கு எவ்வளவு வேகமாக, காற்றை உள்ளே இழுத்து வெளியே விடுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு சத்தம் அதிகமாயிருக்கும்.

* உலகிலேயே மிகப் பெரிய பறவை எது?

— எச். சுவாமிநாதன், இராசபாளையம்



நெருப்புக் கோழிதான் இன்றுள்ள பறவைகளில் மிகப் பெரிய பறவை. ஆறு அடி முதல் எட்டு அடி வரை உயரம் இருக்கும்.

* பெ. தூரன் அவர்கள் தயாரித்த சிறுவர் கலைக் களஞ்சியம் எங்கு கிடைக்கும்?

— செ. குமார், மயிலாடுதுறை—2.

'தமிழ் வளர்ச்சிக் கழகம், பல்கலைக் கழகக் கட்டடம், சென்னை—5' என்ற முகவரியில் கிடைக்கும்.

* 'பரீட்சையில் பாஸ் செய்வது எப்படி?' என்ற புத்தகத்தை வாங்கிப் படித்தால் சுலபமாக பாஸ் செய்ய இயலுமா?

— மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.

ஆசிரியர் சொல்வதைக் கவனமாகக் கேட்டு, அன்றாடம் நடக்கும் பாடங்களை ஒழுங்காகப் படித்து வந்தாலே, பரீட்சையில் சுலபமாகத் தேறிவிடலாம். வேறு குறுக்கு வழி கூறும் எந்தப் புத்தகத்தையும் படிக்க வேண்டாம்.

* 'பாவம் செய்தவர்கள் இறந்த பிறகு நரகத்திற்குச் செல்வார்கள்' என்று கூறுகிறார்கள். இதே போன்ற நம்பிக்கை, கிறிஸ்தவ மதத்திலோ, இஸ்லாம் மதத்திலோ இருக்கிறதா?

— ம. தெய்வநாயகம், வேளச்சேரி.

நரகத்தை கிறிஸ்தவர்கள் Hell என்றும், முஸ்லிம்கள் கெஹன்னம் (Gehenna) என்றும் கூறுவதால், அவர்களிலும் சிலர் நரகம் என்ற ஒன்று இருக்கிறது என்றே நம்புகின்றனர் எனத் தெரிகிறது.

* 'டிங் டாங்' என்று சிறுவர் பத்திரிகை ஒன்று புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்ததாக என் மாமா சொன்னார். அது இப்போது வருகிறதா? அதை நடத்தியவர் யார்?

— என். மீனாள், திருச்சி—2.

'டிங் டாங்' இப்போது வெளிவருவதில்லை. அதை பரசுராமய்யர் என்பவரும் அவருடைய புதல்வர் வடமலையழகனும் நடத்தி வந்தார்கள்.

* நம் சட்டையில் வைத்துத் தைக்கிறோமே, பட்டன், அதைக் கண்டு பிடித்தவர் யார்?

— கு. மலையாண்டி, திண்டிவனம்.

யார் கண்டு பிடித்தார் என்பது தெரியவில்லை. ஆனால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, கிரேக்கரும், எகிப்தியரும் சீனர்களும் பயன்படுத்தி வந்ததாகத் தெரிகிறது. சிப்பி, எலும்பு, பித்தளை, கல், கண்ணாடி, பிளாஸ்டிக், தந்தம், வெள்ளி, தங்கம்— இப்படிப் பலவற்றிலும் பித்தான்களைச் (பட்டன்) செய்து வருகின்றனர்.

* சென்னையில் முதல் முதலாக மேயர் பதவி

வகித்தவர் யார்?

— ஆர். மாதவன், சென்னை—18.



1933—ஆம் ஆண்டுதான் மேயர் பதவியே ஏற்பட்டது. டாக்டர் ராஜா சர் எம்.ஏ. முத்தையா செட்டியார்தான் முதல் மேயராக இருந்தவர்.

*** ஹிஜ்ரீ வருஷம் என்கிறார்களே, அப்படியென்றால்...?**

— ப. சேது, கும்பகோணம்.

அது முகம்மதியர் அனுசரிக்கும் சகாப்தம். இஸ்லாமிய மதத்தை நிறுவிய நபிகள் நாயகம் அவர்கள் கி.பி. 622—ஆம் ஆண்டு அரேபியாவிலுள்ள அவருடைய நகரமாகிய மக்காவிலிருந்து மற்றொரு நகரமாகிய மதினாவுக்கு விரோதிகளிடமிருந்து தப்பி வந்தார். மதினாவில் இருந்த மக்கள் அவரை அன்போடு வரவேற்றார்கள். அவர்கள் இஸ்லாமிய மதத்தை ஏற்றுக் கொண்டார்கள். நபிகள் நாயகம் இப்படி மக்காவை விட்டு மதினாவுக்குத் தப்பிச் சென்ற நிகழ்ச்சியை 'ஹிஜ்ரீ' என்று குறிப்பிடுகிறார்கள். இந்த நிகழ்ச்சி நடந்த கி.பி. 622—ஆம் ஆண்டையே முகம்மதியர் தங்களின் முதலாவது ஆண்டாகக் கொண்டாடுகிறார்கள்.

*** ஹார்லிக்ஸ், காம்ப்ளான் போன்றவற்றை அநேகமாக வட்டமான டின்களிலேயே அடைத்து விற்கிறார்களே, அது ஏன்?**

— ந. ராமசாமி, வேலூர்

சதுரமான டின்களைச் செய்வதை விட வட்டமான டின்களைச் செய்வது சுலபம். அத்துடன், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லும்போது, வட்டமான டின்கள் எவ்வளவுதான் இடிபட்டாலும், அடி பட்டாலும் தாங்கிக் கொள்ளுகின்றன. சதுர டின்களில் மூலைக்கு மூலை பொருத்து இருப்பதால், அடிபடும்போது உடைந்துவிடலாம்.

*** வர கவி சுப்பிரமணிய பாரதியார் என்று ஒருவர் இருந்ததாகக் கேள்விப்பட்டேன். அவரும் மகா கவி சுப்பிரமணிய பாரதியாரும் உறவுக்காரர்களா?**

— என். வேதலிங்கம், மதுரை—2

உறவுக்காரராகத் தெரியவில்லை. ஆனால் வர கவி அ. சுப்பிரமணிய பாரதியார் மகா கவி சுப்பிரமணிய பாரதியாருடன் சேர்ந்து 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் உதவி ஆசிரியராக வேலை பார்த்தார். குழந்தைகளுக்காக, 'பால விநோதினி' என்ற பத்திரிகையை வெளியிட்டார். அத்துடன் குழந்தைகளுக்கான பல சிறு சிறு புத்தகங்களும் எழுதி வெளியிட்டிருக்கிறார். அவற்றில் ஒன்று 'சிறுவருக்குப் பெரிய புராணம்' என்பதாகும்.

*** முயல் ஒரே சமயத்தில் எத்தனை குட்டிகள் போடும்?**

— தங்க கார்த்திகை ராஜா, விருத்தாசலம்—1.

முயல்களில் காட்டு முயல், குழி முயல் என்று இருவகை உண்டு. காட்டு முயல் தடவைக்கு 3 அல்லது 4 குட்டிகள் போடும். குழி முயல் ஒரு தடவைக்கு 6 அல்லது 7 குட்டிகள் போடும்.

*** சீன மொழியும் ஜப்பான் மொழியும் ஒன்றுதான் என்கிறார்களே, இது சரியா?**

— பி. சுந்தர், திண்டிவனம்.



அப்படிச் சொல்ல முடியாது. ஜப்பான் மொழியிலே பல சீனச் சொற்கள் காணப்படுகின்றனவாம். ஆனாலும் அது சீன மொழியிலிருந்து வேறுபட்டதே என்கிறார்கள்.

ஜப்பானிய மொழிக்கென்று தனி லிபி இல்லை. சீன லிபியிலேயே எழுதுகிறார்கள். ஆயினும் சீன லிபியிலுள்ள எழுத்துக்கள் போதவில்லையென்று ஐம்பது புது எழுத்துக்களைச் சேர்த்திருக்கிறார்கள்.


(வி) சித்திரச் செய்திகள்

மூக்குப் பம்ப்!




ஹரியாணா மாநிலத்தில் ஹரிஹர ஷர்மா என்னும் பெண்மணி தன் மூக்கினாலேயே ஒரு புட்பாலுக்குக் (கால் பந்து) காற்றை நிரப்பி விடுகிறாள். உலகில் இந்தச் சாதனையை இதுவரை யாரும் செய்தது இல்லை!

ஆமைகளின் தொண்டு




நீர் ஆமைகள், நீரில் மிதந்து வரும் பிராணிகளின் செத்த உடல்களையும், மனிதப் பிணங்களையும் தின்று நீரைச் சுத்தம் செய்கின்றன. புனிதமான கங்கை நதியைச் சுத்தப்படுத்துவதற்காக இப்போது, கங்கை நதிக்கரையில் உள்ள வாரணாசியில் மிகப் பெரிய அளவில் ஆமைப் பண்ணையைத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தப் பண்ணையில் ஆமைகளை நிறைய வளர்த்து, கங்கை நதியில் விடப் போகிறார்கள்.

ராட்சச பூசணி



அமெரிக்காவில் கலிபோர்னியாவில் சர்வதேச பூசணிப் போட்டி நடந்தது. யார் மிகப் பெரிய பூசணிக்காயை விளைவிக்கிறார் என்பதுதான் அந்தப் போட்டி. அதில் 'ஈட்கார் வைக்' என்பவர் விளைவித்த பூசணிக்காய்க்கு முதல் பரிசு கிடைத்தது. பூசணியின் எடை 250 கிலோ. 'ஆர்ட் க்வின்ட்' என்பவரின் பூசணிக்காய் இரண்டாம் பரிசு பெற்றது. அப்பூசணியின் எடை 240 கிலோ.

இருதலைப் பாம்பு



மதுரை மாவட்டம் பெரியகுளம் என்னும் ஊரில் இரண்டு தலைகளுடன் உள்ள ஒரு பாம்பைப் பிடித்தார்கள். கறுப்பு நிறத்தில் இருந்தது அந்தப் பாம்பு. ஓடும் போது எந்தக் குழப்பமும் இல்லாமல் ஓடிற்று. புராணங்களில் சொல்லப்படும் ஐந்து தலை நாகமும் உண்மையிலேயே இருந்திருக்கலாம் என்றும் கருதுகிறார்கள்.

மிகப் பழைய மண்டை

சீனாவில், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள், பூமியைத் தோண்டி ஆராய்ச்சி நடத்தினார்கள். அப்போது பழங்கால மனிதனின் மண்டை ஓடு ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். அதை வைத்து ஆராய்ச்சி செய்தார்கள். அந்த மண்டை ஓடு 11 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தியது என்றும், உலகில் இதுவரை கிடைத்துள்ள பழங்கால மண்டை ஓடுகளில் இதுதான் பழைமையானது என்றும் கூறுகிறார்கள்.




எலி தட்சிணை



இந்தோனேஷியாவில், மேற்கு ஜாவாவில் ஒரு கிராமத்தில் ஒரு நாட்டாண்மைக்காரர், திருமணத்தை நடத்தி வைக்க தட்சிணையாகப் பணம் கேட்பதில்லை. பதிலாக, தன் கிராமத்தில் உள்ள எலித் தொல்லையைப் போக்குவதற்காக, ஒரு திருமணம் நடத்தி வைக்க 10 செத்த எலிகளைக் கேட்கிறார்!

மின்சார மீன்!

தனுஷ்கோடி கடலில் ஏராளமான மின்சாரத் திருக்கை மீன்கள் வந்து சேருகின்றன. இந்த மீனின் தலைக்குள் இரு ஓரங்களிலும் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய உறுப்புகள் இருக்கின்றன. இந்த மீனைத் தொட்டால், மின்சாரக் கம்பியைத் தொட்டது போல் ஷாக் அடிக்கும். நீரில் இருக்கும் போது இதன் மின்சாரம் 5 மீட்டர் தூரத்திற்குப் பரவியிருக்கும். ஏதாவது எதிரிகள் வந்தால் இந்த மீன் தன் உடலிலிருந்து மின்சாரத்தை நீரில் செலுத்தும். 5 மீட்டர் தூரத்திற்கு எதுவும் நெருங்க முடியாது!



பிருந்தாவனக் கதையரங்கம்



"அம்மா, அடிக்காதம்மா... அய்யோ... வலிக்குதே" என்று தாயிடம் வேண்டினான் பாபு.

"இனிமேல் செருப்புக் கேட்பியா...?" கேட்டுக் கொண்டே அடித்தாள் மங்கம்மா,.

"கேட்க மாட்டேன்மா... கேட்க மாட்டேன்... அய்யோ... அடிக்காதேம்மா" — விம்மினான் பாபு.

"அடுத்த வேளை கஞ்சிக்கே வழியில்லை... செருப்பு வேணுமாமே துரைக்கு. போடா, பையை எடுத்துக்கிட்டு ஸ்கூலுக்கு," — மகனை விரட்டினாள் மங்கம்மா.

அவன் போனபின் சிந்தித்தாள் மங்கம்மா. 'அடடா... அவனை ரொம்ப அடித்துவிட்டேனே! அவன் 'தரை ரொம்ப சுடுது, வெயிலில் பள்ளிக்கு நடந்து சென்று வர முடியவில்லை' என்றுதானே செருப்பு கேட்டான். இன்றைக்கு ஜமீன்தார் ராஜதுரை வீட்டில் வேலையை முடித்துவிட்டு வரும் போது, அவருடைய சின்ன மகன் வேலனின் பழைய செருப்பு ஏதாவது இருந்தால் வாங்கி வந்து மகனுக்குக்கொடுக்கவேண்டும்.வேலனும் பாபுவோடுதானே படிக்கிறான்.' — சிந்தனையைக் கலைத்துவிட்டு வீட்டு வேலையை மளமளவென்று முடித்துவிட்டு ஜமீன்தார் வீட்டு வேலைகளைக் கவனிக்கப் புறப்பட்டாள்.

மாலை மணி ஐந்து. மங்கம்மா வேலையை முடித்துக் கொண்டு புறப்பட்ட போது, தயங்கியவாறே ஜமீன்தாரிணி பங்கஜத்தைப் பார்த்தாள்.

"என்ன மங்கம்மா...? வேலையையெல்லாம் முடிச்சுட்டியா?" என்று கேட்டாள் பங்கஜம்.

"முடிச்சுட்டேன்மா... வந்து..."

"சொல்லு மங்கம்மா. என்ன வேணும்?" அக்கறையுடன் வினவினாள் பங்கஜம்.

"நம்ம தம்பி வேலனோட பழைய செருப்பு ஏதாவது இருந்து கொடுத்தீங்கன்னா... ரொம்பப் புண்ணியமாப் போகும்..."

"உன் பிள்ளை பாபுவுக்குத்தானே...! நாளைக்கு வா. நான் பார்த்து வைக்கிறேன்."

"நல்லது அம்மா... நான் வர்றேன்" என்று புறப்பட்டாள் மங்கம்மா. மங்கம்மா கடை வீதிக்குச் சென்று, வீட்டுக்குத் தேவையான சாமான்கள் சிலவற்றை வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்த போது நன்றாக இருட்டிவிட்டது.

உள்ளே நுழைந்த மங்கம்மா பாபு ஒரு ஜோடி நல்ல செருப்பைத் துடைத்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

"டேய்... இந்தச் செருப்பு ஏதுடா?" என்று மகனை அதட்டிய வாறே கேட்டாள் மங்கம்மா.

"வந்து... வந்து..." தாயின் அதட்ட லில் தடுமாறினன்.

"சொல்லுடா..."

"ஜமீன்தார் மகன் வேலன் இல்லே, அவனுடையது..."

"அடப்பாவி! திருடக் கூட ஆரம் பிச்சுட்டியா...?"

"இல்லேம்மா..." அவன் பேச எத்தனிக்குமுன் அவனைப் புரட்டி எடுத்து விட்டாள். அவன் அழுது கொண்டே மயங்கி விட்டான். அவள் அந்தச் செருப்பை எடுத்துக் கொண்டு கதவை மூடிவிட்டு ஜமீன் தார் வீட்டுக்குச் சென்றாள்.

"அம்மா..."

"என்ன மங்கம்மா...?" என்று வின வியவாறே உள் அறையிலிருந்து வெளிப்பட்டாள் ஜமீன்தாரிணி பங்கஜம்.

"இந்தச் செருப்பு..." இழுத்த வாறே பேச்சை ஆரம்பித்தாள் மங்கம்மா.

"நான்தான் பாபுவுக்குக் கொடுத் தேன்."

"அப்படியா...?" என்று வாய் பிளந்தவாறு மகிழ்ச்சி பொங்கக் கேட்டாள் மங்கம்மா.

"ஆமாம்... வேலன் செருப் பைப் பள்ளியிலேயே மறந்து விட்டுட்டு வந்துட்டான். பாபுதான் எடுத்து வந்து கொடுத்தான். மேலும், வேலனுடை அத்தை நேத்து ஒரு ஜோடி செருப்பு அவனுக் காக வாங்கி வந்தாங்க. புதுசைத் தான் இனிமேல் அவன் போட்டுக் கொள்வான். அதனுல் பாபு பள்ளியி லிருந்து எடுத்து வந்த இந்தச் செருப்பை அவனிடமே நான்தான் கொடுத்தனுப் பினேன்," என்றாள் பங்கஜம்.

"ரொம்ப நன்றி அம்மா! நான் வர்றேன்!" கண் கலங்க நன்றி சொல்லிவிட்டு விடுவிடுவென்று வீடு நோக்கிச் செல்லும் மங்கம்மாவையே குழப்பத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள் ஜமீன்தாரிணி—

வீடு வந்து சேர்ந்த மங்கம்மா மகனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள். பாபு அவளின் கண் ணீரைத் துடைத்தபோது, 'தனது மகன் தனது முன்கோபத்தை' மன் னித்து விட்டதாக உணர்ந்தாள் மங் கம்மா.



ஒரு பெரிய காட்டின் நடுவே ஒரு சிறிய நாடு இருந்தது. அதை ஓர் அரசன் ஆண்டு வந்தான். அந்நாட்டு மக்களின் முக்கிய தொழில் வேட்டை யாடுதல் ஆகும்

அந்த நாட்டு மன்னனுக்கு வெகு நாட்களாகக் குழந்தை இல்லாமல் பிறகு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தன. அவைகள் இரண்டும் நல்ல அழகுடன் இருந்தன. மன்னனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அன்று அந்நாட்டு மக்களுக்கு அரசன் விருந்துவழங்கினன். ஆனுலும், மன்ன னுக்கு ஒரு பக்கம் வருத்த மாக இருந்தது. ஏனென்றல் குழந்தைகள் இரண்டும் பெரியவர்க ளானல், இருவரில் யார் தமக்குப் பின் அந்நாட்டை ஆளப் போகிறார் களோ என்றுதான் வருத்தமாக இருந் தது. அதனுல் இருவருக்கும் சண்டை வருமோ என்று பயந்தார்.

இரட்டையர் இருவரும் சிறு வயதி

லேயே பல அரிய கலைகளைக் கற்று மாபெரும் வீரர்களாகத் திகழ்ந்தனர். அப்போது ஒருநாள் மன்னருக்கு உடல் நிலை சரியில்லை. மன்னர் முதல் மந்திரியை அழைத்து, "என் உடல்நிலை மிகமோசமாக உள்ளது. ஆகவே என் மகன்களில் ஒருவனைத் தேர்ந்தெடுத்து அரசனாக்குங்கள்" என்று கூறினார்.

மந்திரியும், மற்ற அமைச்சர்களும் சேர்ந்து இருவருக்கும் ஒரு போட்டி வைக்க முடிவு செய்தனர். போட்டி நாளும் அறிவிக்கப்பட்டது.

அந்த நாளும் வந்தது. அன்று அரசனும், அரசியும், மந்திரியும், அமைச்சர்களும் கூடி, போட்டியை அறிவித்தனர். அதாவது "இருவரும் காட்டுக்குச் சென்று, வேட்டையாட வேண்டும். யார் மிகவும் சிறப்பாக வேட்டையாடி வருகிறார்களோ அவர்களுக்குத்தான் முடிசூட்டு விழா நடைபெறும்" என அறிவித்தனர்.

போட்டியன்று இருவரும் அதிகாலையில் எழுந்து காட்டுக்கு வேட்டையாடச் சென்றனர்.

இங்கே அரசரும், மற்றும் மந்திரி அமைச்சர்களுடன் தன் மகன்களின் வருகைக்காகக் காத்து இருந்தனர். அப்பொழுது மூத்த மகன் ஒரு காட்டு முயலுடன் வந்தான். "இது புதர்களுக்குள் புகுந்து புகுந்து தப்பிக்க முயன்றது. இதை மிகவும் சாமர்த்தியத்துடன் துரத்திப் பிடித்தேன். இல்லையானால் இது தப்பியிருக்கும்" என்று தனது பெருமையைச் சொன்னான் மூத்தவன்.

சூரியன் மறையும் நேரம் இளையவன் மிகவும் சோர்வுடன் வந்து கொண்டிருந்தான். அவனை எல்லோரும் நோக்கினர். அவன் வெறுங்கையுடன் வந்தான். "நான் மிகப் பெரிய மதம் பிடித்த காட்டு யானை ஒன்றைக் கண்டேன். அதைக் காலையிலிருந்து துரத்தினேன். ஆனால், அது அகப்படவில்லை என்றாலும் மிகவும் கஷ்டப்பட்டுத் துரத்திச் சென்றேன். ஆனால் அதற்குள் இருட்டி விட்டது" எனக் கூறினான்.

வெறுங் கையுடன் இளையவன் திரும்பி வந்ததால், மூத்தவனுக்கே நாளை முடிசூட்டு விழா நடைபெறும் என்று எல்லாரும் எண்ணி இருந்தனர். இருவரில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்பதை மந்திரிகளிடம் அரசர் விட்டு விட்டார்.

மந்திரிகள் அடுத்த நாள் காலையில் அரசரிடம் சென்று, "இளையவனுக்கே முடி சூட்டு விழா நடத்த வேண்டும்" என்றார்கள். அரசருக்கு ஒன்றும் புரியவில்லை. எனவே மந்திரிகளைத் தனித் தனியாக அழைத்து விவரம் கேட்டார். மந்திரிகள், "மன்னா, ஒருவர் செய்யக் கருதும் எதனையும் உயர்ந்ததாகவே நினைக்க வேண்டும். அதனை முடிக்க முயற்சி செய்ய வேண்டும். ஒருவேளை அது நிறைவேறாவிட்டாலும் பரவாயில்லை. யார் வேண்டுமானாலும் முயலைப் பிடித்துவிடலாம். யானையை வேட்டையாட வீரம் வேண்டும். வீரத்துடன் மத யானையைத் துரத்திய இளையவனையே தேர்ந்தெடுத்தோம். அவன் காரியத்தை நிறைவேற்றாவிட்டாலும், அவன் நினைத்த செயல் மிகவும் பெரியது" என்று கூறினார்கள்.

இது கேட்ட மன்னனும் இளையவனுக்கே முடி சூட்ட முடிவு செய்தார். அவரது முடிவை மூத்த மகனும் மக்களும் வரவேற்றனர். முடிசூட்டு விழா சிறப்பாக நடந்தது.

செக்கோஸ்லேவாகியாவில் ஆண்டுதோறும் சிறுவர்களுக்கான ஸ்கூட்டர் ரேஸ் பந்தயம் நடத்துகிறார்கள். இதற்கான ரேஸ்கோர்ஸ் பிராடிஸ்லாவாவிலிருந்து புருனோ மற்றும் பிரேகுவே வரை சுமார் 370 கி. மீ. தூரம் வரை நீளும். பந்தயத்தில் கலந்து கொள்ளும் வீரர்களைத் தொடர்ந்து அவர்களது பெற்றோரும் செல்ல அனுமதி உண்டு. வெற்றி பெறும் சிறுவர்களுக்குத் தங்கத்தாலான ஹெல்மெட் பரிசளிக்கப்படுகிறது. அது மட்டுமா? விதிமுறை தவறாமல் சென்ற சிறுவர்களுக்குக் கறுப்புத் தொப்பி பரிசாக அளிக்கப்படுகிறது!

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.



நீண்டநாளைய ஆசை!

* பெங்களூரில் இந்திய அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் கடைசி டெஸ்ட் நடைபெற்றது. இதுவரை நடந்த டெஸ்ட்களெல்லாம் ஒரே டிராமயம். இளைஞர்கள், சிறுவர்கள் எல்லாம் எதிர்பார்த்த ஒரு 'முடிவு' கண்ட டெஸ்ட் பெங்களூரில்தான். கடைசி நிமிஷம்வரை யார் ஜெயிப்பார்களோ என்ற திகில்! சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம்!


* எப்பொழுதும் கிரிக்கெட் மைதானத்தில் பூவா, தலையா போடுவதற்கு இரு நாட்டுக் காப்டன்களும்தான் செல்வது வழக்கம். பெங்களூர் டெஸ்டில் 'பூவா தலையா' சோதனைக்குக் காப்டன் கபில்தேவ், 10,000 ரன்கள் கண்ட சுனில் காவஸ்கரை அனுப்பி வைத்து 'மரியாதை' செலுத்தியது தனிச் சிறப்பு.

* மணீந்தருக்கு வயது இருபத்தொன்று. இவர் படித்த பள்ளி தில்லியில் பாலபாரதி ஏர்போர்ஸ் ஸ்கூல். இவரது பள்ளி 'கோச்' குருசரண் சிங் மணீந்தருக்குக் கிரிக்கெட் கற்றுக் கொடுத்து முன்னேற வழி வகுத்தார். மணீந்தர் பாகிஸ்தானுக்குச் சென்றபோது இவரது பந்து வீச்சைப் பாகிஸ்தான் ஆட்டக்காரர்கள் விளாசித் தள்ளி டெஸ்ட் தொடரில் மூன்றே விக்கெட்டுகளை எடுக்க முடிந்து 444 ரன்களைக்கொடுத்தார். இதனால் இங்கிலாந்து டெஸ்டுக்குத் தேர்வு இவருக்குக் கிடைக்கவில்லை. இலங்கை கோஷ்டிகளுக்கெதிராகத்தான் ஆட இவருக்கு வாய்ப்புக்கிடைத்தது. நாக்பூரில் இலங்கைக் குழுவினரை 51 ரன்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுகளைச் சரித்ததனால் இவரது பந்து வீச்சு பிராபல்யமாயிற்று. பெங்களூரில் பாகிஸ்தான் குழுவினரின் படேபடே பாட்ஸ்மன்களான சலீம் மாலிக், ஜாவேத் மியான்தத், இலாஹி, இம்ரான்கான், வாஸிம் அக்ரம் ஆகியவர்களோடு இக்பால் குவாஸிம், சலீம் ஜாஃபர் விக்கெட்களையும் 27 ரன்களில் எடுத்தது மகத்தான சாதனை. மணீந்தர்தான் இந்தியக் குழுவில் பாகிஸ்தான் ஆட்டக்காரர்களைக் கதிகலங்க அடிக்கவைத்ததோடு, இந்தியாவுக்கு வெற்றிப் பாதைக்கு வித்திட்டவர். ஆனால் இந்திய பாட்ஸ்மன்கள் இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விட்டனர்.



* பெங்களூரில் ஹோலிப் பண்டிகையன்று பாகிஸ்தான் காப்டன் இம்ரான்கானை அவரது அறையிலிருந்து இழுத்துப் போய் 'ஹோலி' பண்டிகைக்காரர்கள் வெஸ்ட் எண்ட் ஹோட்டலிலுள்ள நீச்சல் குளத்தில்

குன்றுமணி



அமுக்கி வேடிக்கை பார்த்தது அபூர்வக் காட்சி. பல கிரிக்கெட் ஆட்டக்காரர்களான கிரான் மோரே, சிவராம கிருஷ்ணன் அனைவர் மேலும் ஹோலிப் பண்டிகை அறிகுறிகளாக வண்ணப்பொடிகளைத் தெளித்துவிட்டனர்!

* கிரிக்கெட்டில் ஒருகையைத்தூக்கி, விரலை நீட்டினால், 'அவுட்' என்பது சம்பிரதாயம். பெங்களூர் டெஸ்டில் அம்பயர் ராமசாமி கைதூக்கி, ஒரு விரல் நீட்டி இக்பால் குவாஸிமுக்கு 'அவுட்' கொடுத்து விட்டார். அடுத்த கணம் அவரது இருகைகளும் உயர்ந்து பாகிஸ்தான் ஆட்டக்காரர் இக்பால் குவாஸிமுக்கு அபயஹஸ்தம் தருவது போல் 'அவுட் இல்லை' என்று தெரிவித்தன.

'இப்படி 'அவுட்' கொடுத்துவிட்டுப் பிறகு வாபஸ் வாங்கலாமா?' என்று அம்பயரை அணுகிக் கேட்டேன்.

''முதலில் நான் ஒரு முடிவெடுத்தேன். பிறகு எனது முடிவு தவறென்று தெரிந்ததும் மாற்றிக் கொண்டேன். ஆட்டத்தில் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டியது அம்பயர் கடமை அல்லவா? கிரிக்கெட் சட்டத்தில் இதற்கு இடம் உண்டு!'' என்று அம்பயர் ராமசாமி விளக்கம் கொடுத்தார்!—இந்த அபூர்வமான காட்சியைப் பலர் டி., வி. யில் பார்த்துத் திகைத்திருப்பீர்களே!



* பாகிஸ்தான் காப்டன் இம்ரான் கானுக்கு நீண்ட நாளைய ஆசை இந்தியக் குழுவை இந்திய மண்ணில் தோல்வியடைய வைக்க வேண்டும் என்பதுதான்! அவரது ஆசை பெங்களூரில் எதிர்பாராத வெற்றி மூலம் நிறைவேறியது. பாகிஸ்தான் காப்டன் இம்ரான்கானுக்குத் தொடருக்கான டிமெல்லோ கோப்பையை இந்தியக் கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டின் தலைவர் எஸ். ஸ்ரீராமன் வழங்கினார்.

* பத்தாயிரம் ரன்களை எடுத்துச் சிறப்புப் புகழ்பெற்ற சுனில் காவஸ்கருக்கு பெங்களூர் டெஸ்டில் **''Man of the Match''** விருது கிடைத்தது. பாகிஸ்தான் டெஸ்ட் தொடரில் சிறப்பாக ஆடிய வெங்சர்க்கார், டெஸ்ட் தொடரில் சிறப்பாக 'பீல்டிங்' செய்த அஸாருதீன், 10,000 ரன்களை எடுத்த சுனில் காவஸ்கர் ஆகியோருக்குக் கிரிக்கெட் பத்திரிகை நிருபர்கள் அனைவரும் நிதி சேகரித்து வெள்ளித் தட்டுகள் பரிசளித்துக் கௌரவித்தனர்.

* வெற்றி தோல்வி பெங்களூர் டெஸ்டில் எப்படி அமைந்தாலும் பெங்களூரில் கிரிக்கெட் பார்த்த ரஸிகர்களுக்கு ஒரு திரில்லிங் டெஸ்ட் பார்த்த பூரண திருப்தி நிலவியது. கிரிக்கெட் ரஸிகர்களைச் சிறப்பான ஆட்டங்களினால் மகிழ்வித்த பாகிஸ்தான்—இந்திய அணிகளுக்குச் 'சபாஷ்' போட்டுவிடலாம்.

பரதன் அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543, 434157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரிவட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034.
போன்: 473389



க்ளூகோன்-டி ஸூப்பர்ஹீரோ.
களைப்பூட்டும்
வெய்யிலிலும்
களிப்பூட்டும்
சக்திப்பெருக்கு
Glucon-D
200g
High-grade, finely powdered glucose enriched with vitamin D and calcium phosphates.
200 GRAMS NET
GLINDIA LIMITED
Dr. Annie Besant Road
Bombay 400 025, India
Max. Price
Rs.
Local Taxes
Extra
புதிய, அசல், வண்ணமயமான பேக்கைப் பார்த்து வாங்குவீர்.
களைப்பூட்டும் வெய்யில் நாளிலே உங்கள் குழந்தைக்குத் தேவை க்ளூகோன்-டி: க்ளூகோஸ், விட்டமின்-டி, கால்ஸியம் ஃபாஸ்ஃபேட்டுகள் அடங்கிய உடனடி சக்திபானம்.
பழரசம், தேநீர், காபி அல்லது தண்ணீரிலே கலந்து அருந்த, குடும்பத்தினர் அனைவர்க்குமே புத்துணர்ச்சி தரும் பானமாக அமைகிறது. 100, 200, 500 கிராம் பேக்கெட்டுகளில் கிடைக்கிறது.
க்ளூகோன்-டி
ஸூப்பர்ஹீரோ மிகவிரும்பும் சக்திபானம்.
HTA 1097

Registered No TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

